www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka UK PRICE 90 P பக்கம் 20 ரூபா 11/00
දිනමුරසු වාරමලර් ஜன.05-11,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 186

## முத்தாப்பு இராஜதந்திரம் பொறிகளும் - வலைகளும்!

## ஜனாதிபதியின் இந்திய விஜய இரகசியம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## “அவரை மறக்கமுடியவில்லை”

-ஷில்பாஷெட்டி



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நேரடிப் பேச்சுவார்த்தை

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

"அரசும்-புலிகளும்
நேரடியாகப் பேசவேண்டும்,"
என்று சொல்கிறது எதிர்க்கட்சி!

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
வேண்டாம் என்று
சொல்லாமல் சொல்லிவிட்டனர்!

பதினேழு வருடகாலம்
பதவியில் இருந்த கட்சி
ஐ.தே.கட்சி!

ஆட்சியில் இருந்தபோது
போருடை தரித்திருந்தவர்கள்
இன்று அவற்றை
களைந்து போட்டுவிட்டு
சமாதானப் போர்வையை
அணிந்துகொண்டு காட்சி தருகிறார்கள்!

நிஜப் புலியைவிட
பசுத்தோல் போர்த்த புலி
பயங்கரமானது! ஆபத்தானது!

எதிர்க்கட்சியை
பசுத்தோல் போர்த்திய புலி என்று
நாம் ஒரேயடியாக
கூறிவிட்டதாக கருதவேண்டாம்!

கடந்தகால அனுபவங்களால்
அப்படியான ஒரு
சந்தேகம் வருகிறது!

அந்தச் சந்தேகத்தை நீக்க
எதிர்க்கட்சி முன்வரவேண்டும்!

அரசும்-புலிகளும்
நேரடியாகப் பேசுவது இருக்கட்டும்!
முதலில், உடனடியாக
அரசாங்கமும்-எதிர்க்கட்சியும்
நேரடியாகப் பேசட்டும்!

சொந்த அரசியல்
விருப்பு-வெறுப்புக்களை
ஒரு ஓரமாக வைத்துவிட்டு
இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
தம்மால் ஏற்கப்படக்கூடிய
ஒருமித்த உயர்ந்த பட்ச திட்டத்தை
கலந்துபேசி தீர்மானிக்கட்டும்!

போருக்கு மட்டுமல்ல,
பேச்சுவார்த்தைக்கும்
வெறுங் கையுடன் செல்வது
நல்லதுமல்ல, நாகரிகமுமல்ல!

அரசு-புலிகளுடன்
பேசவேண்டும் என்று
தூரநின்று யோசனைமட்டும்
சொன்னால் போதாது!

ஆக்கபூர்வமான ஒரு தீர்வுடன்
புலிகளுடன் சென்று பேச
அரசாங்கத்தை வழியனுப்பி வைக்க
எதிர்க்கட்சி முன்வரவேண்டும்!

நேரடிப் பேச்சுவார்த்தை
விரைவுபடவும்-வெற்றிபெறவும்
அதுதான் உதவும்!

இங்கே-உபதேசங்களுக்கு
ஒருநாளும் குறைச்சலில்லை!

அரசாங்கம்
பேச்சுக்குச் சென்றால்,
எதிர்க்கட்சி
போருக்கு வழி சொல்லும்.
அரசாங்கம்
போருக்குச் சென்றால்
எதிர்க்கட்சி
பேச்சுக்கு யோசனை சொல்லும்!

கடந்த கால வரலாறு
அப்படித்தான் இருந்தது!
இப்போதும் தொடர்கிறது!
இதற்கொரு முடிவு வேண்டாமா?

ஒருவரை ஒருவர்
சுட்டிக்காட்டி நழுவிக்கொண்டு
ஒருமித்த முடிவு காணும் பொறுப்பை
கை கழுவிக்கொண்டிருப்பதற்கு
ஆளும் கட்சியும்-எதிர்க்கட்சியும்
முற்றுப்புள்ளியிட்டாலே போதும்;
சமாதானப் பாதையில்
பாதித் தூரத்தை கடந்த மாதிரித்தான்!

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
என்ற பேச்சு எழக் காரணம்-
இங்கே ஒவ்வொரு தரப்பும்
விடாக்கண்டன்- கொடாக்கண்டன்
நிலையில் இருப்பதுதான்!

நாமும் மருந்து
செய்ய மாட்டோம்,
வேறு யாரும் வரவும் வேண்டாம்
என்று நினைப்பது சரியல்ல!

இனப்பிரச்சனைக்குத் தேவை
அரசியல் தீர்வு வைத்தியம்!
வைத்தியம் உருப்படியாக நடக்க
ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும்
ஒத்த முடிவுக்கு வருவதே
இன்றைய அவசியம்!

அதற்குத் தயாரில்லையென்றால்
அரசும் புலிகளும் மட்டுமல்ல,
ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும்
பேசிக்கொள்ளவும்
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
முக்கிய தேவைதான்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## உலகம் விரோதிக்கின்றதா?

உலகம் எமக்கு எதிராக பல காரியங்களைச் செய்யலாம்! பொறாமையினால், கோபத்தினால் எம் வாழ்விலும் கூட எமக்கு விரோதமாக பல தந்திரமான காரியங்களை முகாந்திரமில்லாமல் எதிராகச் செய்யலாம்!

வாழும் இடங்களில், வேலைஸ்தலங்களில் பொறாமை, கோபத்தினால், காரணமின்றி எதிராகப் பொய்களைப் பிணைக்கலாம். இதனைக் குறித்து நாம் கலங்கிட வேண்டியதில்லை. "மனுஷனுடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமூகத்தின் மறைவிலே மறைத்து; நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி உமது கூடாரத்திலே ஒளித்து வைத்துக் காப்பாற்றுகிறீர்!"-சங் 31:20ன்படி, கர்த்தர் எங்களை மறைத்து உயர்த்துவார்.

"வெள்ளம் போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாக கொடியேற்றுவார்!" என்ற ஏசா. 59:19ன்படி ஆவியானவர் நமக்காக யுத்தம் பண்ணி ஜெயம் தருவார்.

"ஆகவே எமக்கு விரோதமான காரியங்களை உலகம் செய்யும்போது கலங்காது, எம் விண்ணப்பங்களை கர்த்தரிடத்தில் கூறுவோம். அவர் எம்மை விலக்கி காப்பார்.

ஜே.புளோரன்ஸ், கெங்கல்ல.



## இறை தியானம் ஈடேற்றம் தரும்

உலகில் ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியோடு, மனநிம்மதியோடு வாழவேண்டுமென்றே விரும்புகின்றான். நிம்மதி எங்கே? என ஏங்கி ஏங்கி அலைகின்றான். ஆனால் இறை மறையாம் அல்குர்ஆன் "இறைவனைத்தியானிப்பதிலேயே உள்ளங்கள் நிம்மதியடைகின்றன." என அறைகூவல் விடுக்கின்றது. எமது சான்றோர்கள் இறை தியானத்தில் இன்பம் கண்டார்கள். தியான வலிமையால் ஊண், குடிப்பின் ஆசையையும் மறந்து உளத் தெளிவு பெற்றார்கள். பசி, காமம், கோபம் ஆகிய மிருக இச்சைகளை வேருடன் களைந்து இதயத்தெளிவு பெற்று அரிய பல அற்புதங்களை நிகழ்த்தினார்கள்.

ஆனால் இன்று நாம் உலகப்பற்றுள்ள போலி அறிஞர்களின் வார்த்தைகளை நம்பி, இறை தியானத்தைக் கைவிட்டோம். சிற்றின்ப வேட்கையில் மாய்ந்துவிட்டோம். உண்பது, குடிப்பது, உலகச் செல்வங்களைப் பெருக்குவதிலேயே நம் ஆயுள் கழிகிறது. நம் முன்னோர்கள் அனுபவித்த நோயில்லாத, நீண்ட வாழ்வு பூஜ்யமாகிவிட்டது. இறைதியானமற்றவன் செத்த சடலம் போன்றவன் என்ற நபிமொழிக்கமைய நடமாடும் பிரேதங்களாய் அலைகிறோம். இறந்தும் இறக்காத தெய்வீக வாழ்வு நமக்குக் கிடைக்க வேண்டுமானால் இறைதியானத்தை இடைவிடாது மொழியவேண்டும்.

திஹாரிய-ஹாரித்.

## கவிதைப் போட்டி இல.183



இடம் உள்ளவரை
இடம்பிடித்துள்ள
வியக்கவைத்த
கவிதைகள்

### பரிசுக்குரிய கவிதை

### மேய்ப்பன் இல்லாத மந்தைகள்

ஆட்டு மந்தை கூட்டமென
கூட்டினில் அடைத்தெம்மை
காட்சிப் பொருளாக்கிவிட்டார்
மீட்சி தர எங்களுக்கோர்
மேய்ப்பன் வருவதெப்போ?

சி.மு.சுந்தரேசன்- அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

### சிறை வாழ்வு

மண்மீது சிறைவாசம்
மலரெலாம் கருகுதம்மா;
உறங்காத கண்களெல்லாம்
உறவோடு கலங்குதம்மா;
துயரான நெஞ்சங்கள்
துணையின்றி வாடுதம்மா;
கம்பி சிறையினுள்ளே
பிஞ்சுக் கரம் துடிக்குதம்மா!

தெ லோஜனா- கொழும்பு-15.

### எதிர்பார்ப்புகள்

கூண்டுப் பறவைகளாய்,
குடத்தினுள் விளக்குகளாய்,
குன்றிப் போய்க் கிடக்கின்றோம்!
எங்கள் எதிர்பார்ப்பு எந்தளவில்
நிறைவேறும்?
காத்துக் கிடப்பதற்கும் ஒரு கால
வரை வேண்டாமா?

திருமதி க.கதிரவேலு- வவுனியா.

### நினைவுகள்

தாயிழந்த வேதனையோ?
தடுப்புமுகாம் சோதனையோ?
வாயிதழை திறவாமல்
விழிகளினால் மொழிந்தாயோ?
நீயிருந்த பூமியினை
நினைவுகளில் கண்டாயோ?
தீயில்வேகும் இளந்தளிரே-உனக்காய்
திரும்புமடா காலமினி!

ஆர்.எம்.வரன்-மட்டக்களப்பு.

### காணமுடியவில்லை

களுத்துறைச் சிறையிலே
வாடிடும் தந்தையை
காணவே தாயுடன்
வவுனியா வந்தோரை
நலம்புரி முகாமிலே
அகதியாய் அடைத்ததால்
போகவும் முடியாமல்
திரும்பவும் முடியாமல்
சோகத்தில் வாடுதே
சேய்களிங்கே!

சு.இரத்தினம்-தேசிய கல்லூரி, அக்கரைப்பற்று-7.

### 'வலை'

பாசவலை உள்ளே
பரிவலைகள் வெளியே
சுற்றமும் கம்பிவலை
மனதில் மட்டும்
சுதந்திரத்தின் தாகவலை!

ஏ.எஸ்.லோறன்ஸ்- பூந்தோட்டம், வவுனியா.

## கவிதைப் போட்டி இல-186



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி:- 11.01.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.186 தினமுரசு வாரமலர், த.பெ. இல--1772, கொழும்பு.

### யார் வருவார்?

சிறைபட்ட சுதந்திரத்தை(த்)
திறந்துவிட யார் வருவார்?

ச.மகாலிங்கம்- வெலிமடை.

### விலங்குகள்

இரும்பு வளையம்
உம் கரங்களில்...,
மலர் வளையம்
எம் கரங்களில்...?

டீ.ஜோர்ஜ்- லபுகலை.

### காலம் வருமா?

கூடுவிட்டுக் கூடுதாவும்
கூடாத காலம் எனக்கு!-இந்
நாடு விட்டு நாடு போகும்
நல்ல காலம் வருமா அம்மா?

காரைதீவூர் சிவம்- குருக்கள்மடம்.

### மடல் அனுப்பியவர்களில் இடம்உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:

* எஸ். அரசகுமார், கல்முனை-02
* கே. வின்சன்ட், சத்துருக்கொண்டான்.
* செல்வி நபீகா தாஜுதீன், கல்ஹின்னை.
* எம். வினோதினி, கோட்டைமுனை.
* லவ்ஜத் நஸ்புல்லா, கிண்ணியா-06.
* யூட்-திருமலை,
* து. விஜயசீலன், கண்டி.
* புனிதா வேலுப்பிள்ளை, கலவான.
* இ. ஜெகநாதன், மண்டூர்.
* ஏ.எல்.எம். றியாஸ்தீன், கல்முனை-05.
* ப. தீபவதனன், தெகிவளை.
* செல்வி கே.ரீ. கமலினி, சம்மாந்துறை.
* எஸ். அபிராமி, வாழைச்சேனை.
* ஸரீமா ஸனூன், மக்கொன.
* வாஹிட்- பாலமுனை.
* ஏ.சி.எம். மசூர், பலாங்கொடை.
* ஏ. செபஸ்தியன், உக்குவலை.
* ஆர். காந்தரூபன், ஜெர்மனி.
* வி. பஸ்தோயா, கந்தப்பளை.
* ஜவாத்-புத்தளம்.
* எஸ்.ஏ. ராஜா, கொழும்பு-15.
* ம. நந்தகுமார், சுவிற்ஸர்லாந்து.
* கி. ஜெயகணேஷ், ஜப்பான்.
* செல்வி ஜன்ஸி சுயூர், அநுராதபுரம்.
* செல்வி எஸ். செல்வகுமாரி, கந்தேநுவர.

# வாசக(ர்) சாலை





கவிதைப்போட்டி, தேன்கிண்ணம், சிறுகதைகள் அனைத்தும் காலத்தின் பதிவுகள். முரசில் வெளியாகும் சமகாலப் பிரதிபலிப்பான சிறுகதைகளைத் தொகுத்து தனியாக வெளியிடுவது அவசியம் என்பது என் அபிப்பிராயம்.

ஆ. தயாளன், கொழும்பு-10.

தூக்குமேடைக் குறிப்பு, அனிதா இளம் மனைவி, இராமாயணம், போன்றவை மிகவும் வரவேற்கத் தக்கவை. ரசிகன் வாரா வாரம் தரும் இலக்கியநயம் மிகவும் சுவாரசியமானது. பல்சுவை நிகழ்ச்சிகளால் வாசகர்களை வியக்க வைக்கும் முரசுக்கு என் நன்றிகள்.

ஏ.எல். நிஜால், அநு/அநுத்கம.

முரசில் என்னைக் கவர்ந்தவைகள்:
ரசிகனின் இலக்கிய நயம்!
சுடச்சுட சினிவிசிட்!
முரசத்தில் ஓர் அலசல்!
ரசிக்க வைக்கும் கந்தசாமி!
சுவைமிகு தேன்கிண்ணம்.

ஜே. யூட் கிலேரியன், மட்டக்களப்பு.

காதிலை பூ கந்தசாமியாரே! ஜெயலலிதாவை அங்குதான் போட்டுப் பின்னி எடுக்கிறார்கள் என்றால், இங்கு நீரும் விடமாட்டீர்போல் இருக்கிறதே! சும்மா சொல்லக்கூடாது--பாடல்களை வைத்தே இந்தக் குத்து குத்துகிறீரே!

சிவ. குலநாதன், திருகோணமலை.

## கின்னஸில் நம் பிரதிநிதிகள்!

பாராளுமன்ற உரைகளைப் படித்துவிட்டு 'நம் பிரதிநிதிகளை' நினைத்துப் புல்லரித்துக் கிடந்தவர்களுக்கு, இராஜதந்திரியாரின் அலசல் முறிவு மருந்துதான்! சபையில் ஆறுபேர் கூட இல்லாத நிலையிலும் முழக்கமிட 'நம் பிரதிநிதிகளால் முடிகிறதே!' அதுவே ஒரு சாதனைதான். கின்னஸில் போடலாமா? அதற்கும் சட்டத்தில் இடமிருக்கிறதா? என சட்டம் படித்த பிரதிநிதிகளிடம் அறியவும்.

மா. சதாசிவம், கொழும்பு-11.

வாக்குக் கேட்கும்போது மட்டும்தான் அரசியல்வாதிகள் ஏமாற்றுகிறார்கள் என்று நினைத்தோம். பாராளுமன்ற முழக்கங்களும் அப்படித்தான் என்பதை அழகாகப் புட்டுப் புட்டுவைத்த இராஜதந்திரியாருக்கும் பாராட்டுக்கள்!

ஏ.எம். ரஹீம், கல்முனை.

'அனிதா இளம் மனைவி', சுஜாதா கதை சொல்லும் பாணி பிரமாதம். அனிதாவின் இளமை கணேஷையும் வளைத்துப்போட்டுவிட்டது. அந்த விசுவாமித்திரரே தப்ப முடியவில்லையாம்! கணேஷ் எம்மாத்திரம்? ஷர்மாவைக் கொன்றது யார்? பாஸ்கர்தானே?

எஸ்.என். நியாஸ், காத்தான்குடி.

அன்பின் முரசே! நீ சுமந்துவரும் 'தூக்கு மேடைக்குறிப்பு' சிறப்பு சிறப்பு. பூலான் ஒரு கொள்ளைராணி அல்ல; புரட்சி ராணி. சுதந்திர ராணி என்பதே பொருத்தம்.

ஆர். குலசேகரம், திருமலை.

சினிவிசிட்டில் சினிமா விமர்சனம் இடைக்கிடையேதான் தலைகாட்டுகிறது. தொடர்ந்து வெளியிட்டால் என்ன? வெளிவரும் படங்களில் சிறந்த படமாகத் தெரிவு செய்து நாம் பார்க்க உதவும் அல்லவா?

எம். சோதி, புத்தளம்.

முரசே! 'சினிவிசிட்' ஜொள் விசிட்டாகி தூள் கிளப்புகிறது. வண்ணப்படங்கள் கண்ணை மட்டுமா பறிக்கின்றன? சினிவிசிட் தயாரிக்கும் அந்த ஜொள் மன்னர் யாரய்யா?

என்.எம். அப்துல்லா, கண்டி.

எங்கும் கிடைக்கும் 'முரசு' யாழ் குடாநாட்டில் மட்டும் கிடைப்பதில்லையே! கடல் கடந்த நாடுகளுக்குக்கூட முரசு செல்கிறது. யாழ்ப்பாணத்திற்கு மட்டும் முரசுக்கும் பயணத்தடையோ? முரசின் வருகையை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

கே. சௌந்தரராஜன், நல்லூர்- யாழ்ப்பாணம்.

தூக்குமேடைக் குறிப்பும், பூலான் தேவியும் போட்டி போடுகின்றன. கொள்ளைராணி எம் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளுகிறாள். 'துணிந்தால் துக்கமில்லை', பூலான் அசத்தட்டும்.

செல்வி சாரதா கண்ணன், வவுனியா.

'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' தொடர் அருமையிலும் அருமை திலீபனின் தியாகம், கொள்கை உறுதியானது நெஞ்சை உருக செய்துள்ளது. உண்மையை உள்ளபடி எழுதியதற்கு எனது நன்றி.

நடாமோகன், ஈஸ்ற்ஹாம், லண்டன்.

சம்பல் பள்ளத்தாக்கின் கொள்ளை ராணியாக இருந்து இன்று இந்திய பாராளு மன்றத்தில் கொள்கை ராணியாகியுள்ளார் பூலான்தேவி. பூலான் தேவி ஒரு கொள்ளை ராணியாக மாறுவதற்கு சூழ்நிலையே காரணம் என்பதை விளங்கவைத்த தினமுரசுக்கும் அதை அழகுறத் தரும் ரசிகனுக்கும் எனது பாராட்டுக்கள்.

ஏ.எல். அமீர் ஹுஸைன், கல்முனை-03.

தெளிந்த நீரோட்டம் போன்ற எளிமையான நடையில் இராஜகுமாரன் அவர்கள் எழுதி வரும் 'இராமாயணம்' தொடர்கதையை படிக்கும்போது பால் பாயசம் சாப்பிட்டது போல் இருக்கிறது. கதைக்கு ஏற்றவாறு மெருகூட்டும் 'தவா'வின் ஓவியம் தனிச்சிறப்பைக் கொடுக்கிறது.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன்,மட்டக்களப்பு.

அம்சங்கள் பலவற்றை உன்னில் சுமந்து
வாரம் ஒன்றாய் வலம் வந்து
வாசகர் மனதினில் நிலை கொண்டு
அகிலத்தில் பெற்று விட்டாய் சிறப்பின்று!
புதிதாக இப்போது
பூலான்தேவியின் வரலாறு
ஆவலுக்கு எமக்கின்று நீ தரும் இரட்டிப்பு!
தொடரட்டும் உன் சிறப்பு-எங்கள்
வாழ்த்துக்கள் என்றும் உனக்கு.

மல்லிகா, புனிதா,யசோதா, சுபத்திரா-டெமோரியா, பசறை.


படிப்பகம்

www.padippakam.com

# "புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை கிடையாது!" அரசாங்க — இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு!

# "இராணுவ அழுத்தம் மத்தியில் பேச்சுக் கிடையாது!" புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவிப்பு!

**வி**டுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் நோக்கம் அரசாங்கத்திற்குக் கிடையாது. நேரடியாகவோ, தனிநபர் மத்தியஸ்தம் மூலமாகவோ அல்லது வெளிநாட்டு மத்தியஸ்தம் மூலமாகவோ பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கம் தற்போது இல்லை, என்று அரசாங்க உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய ஆண்டில் இராணுவரீதியான புதிய நடவடிக்கைக்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இராணுவ அழுத்தம் மத்தியில் பேச்சுவார்த்தைக்குச் செல்லும் உத்தேசம் தமக்குக் கிடையாது என்று புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

"யாழ்குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்கு முன்பிருந்த நிலைகளுக்குத் திரும்பிச் செல்லவேண்டும். பேச்சுவார்த்தைக்குரிய சூழல் அப்போதுதான் உருவாகும்" என்று புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த ஆண்டு அரசும் புலிகளும் தமது இராணுவ பலத்தில் மேலோங்குவதற்கான பலப்பரீட்சைக்கான ஆண்டாகவே இருக்கும். இந்த ஆண்டின் நடுப்பகுதிவரை இருதரப்பும் பேச்சில் ஈடுபாடு காட்டப்போவதில்லை என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### இந்திய விஜயம்

இந்த ஆண்டின் இராணுவ நடவடிக்கைகளுக்கு திட்டமிட முன்பாக, இந்திய அரசின் நாடிபிடித்தறியும் ஒரு முயற்சியாகவும் ஜனாதிபதியின் இந்திய விஜயம் அமைந்திருந்தது.

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய தமது அரசின் தீர்மானத்தை இந்தியப் பிரதமருக்கும், உயரதிகாரிகளுக்கும் ஜனாதிபதி எடுத்துக் கூறியிருக்கலாம் என்றும், அதற்கு சாதகமான பதிலே இந்தியாவின் தரப்பில் இருந்து கிடைத்திருக்கலாம் என்றும் புதுடில்லியில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

"இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக ஆராயப்பட்டதா?" என்று கேட்கப்பட்டபோது, இந்திய அரச வட்டாரங்கள் கருத்து எதனையும் வெளியிடவில்லை. ஆனால், இலங்கையில் உள்ள இந்தியத்தூதர் நரேஷ்வர் தயாள் சர்மாவும் இந்தியா சென்றிருந்தார். ஜனாதிபதி இந்தியப் பிரதமரை சந்திக்கும்போது அவரும் கூடவே இருந்துள்ளார்.

இந்திய அரச வட்டாரங்கள் கருத்துக்கூற மறுத்தமையானது, இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் இருந்து தாம் தூரவே நிற்பதாகக் காட்டிக்கொள்ளும் இந்தியாவின் போக்கைப் பிரதிபலிப்பதாகக் கருதலாம்.

இதேவேளை இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்பு ஐலண்ட் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், புலிகள் இயக்கத்தினரை திருப்திப்படுத்துவதற்காக, கைபற்றிய பிரதேசங்களைக் கைவிட முடியாது. யாழ் குடாநாட்டில் புனரமைப்புப் பணிகளை புனர்வாழ்வு அதிகாரசபை தொடர்ந்து மேற்கொள்ளும். அதேநேரத்தில் இராணுவ நடவடிக்கைகளும் தொடரும், என்று அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

### புலிகளின் நிலை

புத்தாண்டை முன்னிட்டு புலிகள் இயக்கத்தினரின் இலண்டனிலுள்ள உலகத்தமிழர் இயக்கம் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "எமது தாய்பூமியை ஆக்கிரமித்துள்ள படைகளை விரட்டியடிப்பதில்தான் மக்களின் பாதுகாப்பும், தேசிய சுதந்திரமும் தங்கியுள்ளது," என்று பிரபாகரன் தெரிவித்த கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சனையில் மத்தியஸ்தம் செய்ய பிரிட்டன் தயாராக இருக்கிறது என்று பிரிட்டிஷ் எம்.பிக்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் அரச சார்பாகவோ, புலிகள் சார்பாகவோ இதுவரை பிரிட்டன் அரசிடம் அது தொடர்பாகப்பேசப்படவில்லை.

புலிகள் இயக்கத்தினரைப் பொறுத்தவரை, இராணுவபலத்தில் உயர்ந்த நிலையை தாம் எட்டியபின்னரே மூன்றாம்தரப்பு மத்தியஸ்தம் இடம்பெறுவதை விரும்புகிறார்கள் என்று தெரிகிறது.

### அரசின் நிலைப்பாடு

அரசாங்கத்தைப் பொறுத்தவரை, குறிப்பிடத்தக்க இராணுவரீதியான வெற்றிகளைப் பெற்று அதனை வைத்து அரசியல் ரீதியில் தெற்கில் வெற்றிகளைக்குவித்த பின்னரே புலிகளுடனான பேச்சுக்கள் பற்றி ஒரு முடிவுக்கு வரலாம் என்று நினைக்கிறது.

ஆளும் அணிக்குள் லலித் பிரிவினரும், இடதுசாரிகளும் முரண்டு பிடித்துவருகின்றனர். எதிர்காலத்தேர்தல்களில் லலித் பிரிவினர் தனியாகப் போட்டியிடவும் திட்டமிட்டுள்ளனர்.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிக்காவின் தனிப்பட்ட செல்வாக்கை நம்பியே ஆளும் கட்சி எதிர்காலத் தேர்தல்களைச் சந்திக்க வேண்டி இருக்கும். தற்போது புலிகளுடன் பேச்சில் ஈடுபட்டு அப் பேச்சுவார்த்தையும் முறிவடைந்தால் ஜனாதிபதியின் செல்வாக்குப் பாதிப்படையும்.

அதனால் இரண்டு தோணியில் கால் வைக்காமல், போரைத் தொடர்ந்து நடத்துவது தான் சரியாக இருக்கும் என்பதே ஆளும் கட்சியின் நிலைப்பாடாகும்.

## தலை நகரில் புலிகள் தாக்குதல்! மேற்குலக நாடுகள் கண்டனம்!

**கொ**ழும்பிலும் மற்றும் தென்பகுதியில் உள்ள இலக்குகள் மீதும் புலிகள் இயக்கத்தினர் தாக்குதல் நடத்துவதை மேற்குலக நாடுகள் பல விரும்பவில்லை என்று தெரிகிறது.

வெளிநாடுகளில் உள்ள புலிகள் இயக்கப் பிரமுகர்கள் மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் சிலரைச் சந்தித்தபோது, நேரடியாகவே அவர்களிடம் தமது நிலைப்பாட்டை அந்த இராஜதந்திரிகள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக அமெரிக்க அரசு, புலிகள் இயக்கத்தினர் கொழும்பில் தாக்குதல் நடத்துவதை விரும்பவில்லை. அமெரிக்காவின் நிலைப்பாடு முன்பைவிட இலங்கை அரசுக்குச் சார்பாக மாறிவருகிறது.

அதன் பிரதிபலிப்பாகவே கனடா, சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகள் அங்குள்ள புலிகள் இயக்கத்தினர்மீது நெருக்குதல்களை ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது.

கனடா, சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகளில் முன்னர் புலிகள் இயக்கத்தினர் சுதந்திரமாகச் செயற்பட்டுவந்தனர். தற்போது இரு நாடுகளுமே அங்குள்ள புலிகள் இயக்கத்தினரின் செயற்பாடுகளைக் கண்காணிக்கத் தொடங்கியுள்ளன.

கனடாவில் புகலிடம் பெற்றுள்ளவர்களில் புலிகள் இயக்கத்திலும், ஏனைய தமிழ் இயக்கங்களிலும் முன்னர் தீவிரமாகச் செயற்பட்டவர்களின் விபரங்களை புலனாய்வுப் பிரிவினர் திரட்டி வருகின்றனர். தீவிரமாகச் செயற்பட்டவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ள சிலருக்கு பிரஜா உரிமை வழங்குவதையும் கனடா அரசு தாமதப்படுத்தி வருகிறது.

'இலங்கைக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கைகளும் அமெரிக்காவில் இடம்பெற அனுமதிக்கப்படமாட்டாது' என்று அமெரிக்கா உறுதியளித்துள்ளதாகத் தெரிகிறது.

அமெரிக்காவின் நிலைப்பாடு இலங்கை அரசுக்கு நெருக்கமாக மாறியுள்ளதால் மேற்குலக நாடுகளும் அதற்கு மாறாக செயற்பட முடியாதுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்கு நாடுகளின் அதிருப்திகள் காரணமாகவே கொழும்பில் தாக்குதல்களில் ஈடுபடுவதை புலிகள் இயக்கத்தினர் குறைத்துக் கொண்டனர் என்றும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் கொழும்பில் உள்ள பிரதான இலக்குகளை புலிகள் தாக்கத்திட்டமிடக்கூடும் என்றே பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றன.

## ஜனாதிபதிமீது புலிகள் கடும் கண்டனம் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா மீது புலிகள் இயக்கத்தினர் கடுமையான விமர்சனம் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் உத்தியோபூர்வ பத்திரிகையான 'விடுதலைப்புலிகள்' வெளியிட்டுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் அந்த விமர்ச்சனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு என்று சொன்னவர், போர்மூலம் ஒரு இராணுவத்தீர்வை தமிழினத்தின்மீது திணிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறார்.

தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவேன்; என்று உறுதி சொன்னவர், போரைத் தீவிரமாக்கி பொருளாதாரத் தடையை மேலும் இறுக்கமாக்கி யுள்ளார்.

'சமாதானப்புறா' என்ற எதிர்பார்ப்பிற்கு மாறாக 'வாளேந்திய சிங்க'த்தைத்தான் தமிழ் மக்கள் எதிர்கொண்டனர்" என்று தொடர்கிறது அந்த ஆசிரியர் தலையங்கம்.

ஜனாதிபதி சந்திரிக்காமீதான கடும் கண்டனத்துடன் புலிகள் இயக்க ஆஸ்தான கவிஞர் புதுவை இரத்தினதுரையும் கவிதை எழுதியிருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் பின்னர் ஜனாதிபதி சந்திரிக்காவே புலிகள் இயக்கத்தினரின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறார்.

புலிகளின் கடும் விமர்சனங்கள் காரணமாக அவர்களது முதல் இலக்காகவும் ஜனாதிபதி சந்திரிக்காவே இருக்கிறார்.

புலிகளின் விமர்சனங்களை அறிந்துள்ள புலனாய்வுப் பிரிவுகளும், பாதுகாப்புத் தரப்பினரும் ஜனாதிபதியின் பாதுகாப்பு விடயத்தில் கடும் கவனம் செலுத்தி வருகின்றனர்.

நத்தார் மற்றும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இம்முறை தலைநகரில் களைகட்டியிருந்தன. பட்டாசு ஓசைகள் கேட்ட வண்ணமே இருந்தன.

புத்தாண்டை முன்னிட்டு தலைநகரில் புலிகள் தாக்கக்கூடும் என்று எதிர்பார்த்து படையினரும் உஷாராக இருந்தனர். பட்டாசு ஓசைகள் மத்தியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை விழிப்பாக மேற்கொள்ளவேண்டியிருந்தது. அதனைக்கருத்தில் கொண்டே ஜனாதிபதியும் நத்தார் தினத்துக்கு முன்னரே இந்தியப் பயணத்தை மேற்கொண்டார் என்று கூறப்படுகிறது.

'புலிகளின் கொலைப்பட்டியலில் தனது பெயர்தான் முதலாவதாக இருக்கிறது' என்று ஜனாதிபதி ஒரு பேட்டியில் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கிழக்கில் மூடப்பட்டுவரும் படை முகாம்கள் 10 வருடகால முகாம் மூடப்பட்டது

(ஏறாவூர் நிருபர்)

**கி**ழக்கில் பலம் குறைந்த முகாம்களை மூடிவிட்டு, பாரியபடை நகர்வுகளை அடிக்கடி மேற்கொள்வதே படையினரின் தந்திரமாக இருக்கும் என்று 'முரசு' முன்னர் கணிப்பு வெளியிட்டது தெரிந்ததே. தற்போது கிழக்கில் படைமுகாம்கள் மூடப்படுகின்றன. பாரியபடை நகர்வுகளும் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன.

புலிகள் இயக்கத்தினரை களைப்புறச் செய்து பெரும் தாக்குதலுக்கு அவர்கள் தயாராகாமல் தடுப்பதே படையினரின் நோக்கமாகும்.

இதேவேளை இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படப்போகும் இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்னோடி நடவடிக்கை கிழக்கில்தான் படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

குறைந்த எண்ணிக்கை யான படைவீரர்களைக்கொண்டு காட்டுப் பகுதிகளில் ஆங்காங்கே இயங்கி வந்த சில விசேட அதிரடிப்படை முகாம்களும், பொலிஸ் மற்றும் இராணுவ முகாம்களும் அப்பகுதிகளிலிருந்து வாபஸ் பெறப்பட்டு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பு-பாலையடிவெட்டை, 13ம் கொலனி, வெல்லாவெளி ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த விசேட அதிரடிப்படை முகாம்களும், வெல்லாவெளியிலிருந்த பொலிஸ் நிலையமும், பெரிய புல்லுமலையிலிருந்த பாரிய இராணுவ முகாமொன்றும் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன.

இவற்றில் பெரிய புல்லுமலையிலிருந்து வந்த இராணுவ முகாம், கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மஹாஓயா சிங்களப்பகுதிக்கும் மட்டக்களப்பின் தமிழ்ப்பகுதிக்கும் இடையில் இருந்ததாகும். முகாமை அங்கிருந்து மூடிய படையினர் முகாம் பகுதிகளிலுள்ள முட்கம்பிகளைக் கூட எடுத்துச்செல்லவில்லையென்று கூறப்படுகிறது. படையினர் அங்கிருந்து விலகியதும் உடனடியாக முகாமுக்குள் புகுந்த பொதுமக்கள் அங்கிருந்த பொருட்களை எடுத்துச் செல்வதில் ஈடுபட்டனராம்.

பெரிய புல்லுமலையில் படையினர் நிலைகொண்டிருந்த கட்டிடத்தின் ஒரு பகுதியில், படையினர் நிலைகொள்வதற்கு முன்னர் 'விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி' பிராந்திய அரசியல் காரியாலயம் இங்குதான் இயங்கிவந்தது. சுவரில் எழுதப்பட்ட அந்த வாசகங்கள் இன்னமும் அப்படியே காணப்படுகின்றன. படையினர் அதை எதுவும் செய்யவில்லை.

இதனிடையே மட்டக்களப்பு- சுங்கான் கேணியில் கடந்த 29.11.96 அன்று மின் கம்பமொன்று புலிகளால் சாய்க்கப்பட்டதன் விளைவாக, ஹபறணை ஊடான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது. மறுநாள் இ.மி. சபையினரால் மின் கம்பம் திருத்தியமைக்கப்பட்டது.

கடந்த 28.12.96 அன்று கிரான் பகுதிக்கு மிட்டாய் வியாபாரத்திற்காகச் சென்ற இஸ்மாயில் வெள்ளைத்தம்பி(52) எனும் ஏறாவூர் வாசியொருவர் இன்னமும் வீடு திரும்பவில்லை. இவர் கடத்தப்பட்டதைக் கண்ட தமிழ் பொதுமக்கள் இவரது உறவினருக்குத் தெரியப்படுத்தினராம். இதுபற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவிற்கு (ICRC) அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'இந்திய அரசின் மத்தியஸ்தம்' டாக்டர் ராமதாஸ் கோரிக்கை!

"இலங்கை அரசுக்கும் போராளிகளுக்கும் மத்தியஸ்தராக இந்திய அரசு செயற்படவேண்டும். அதன்மூலம் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த வேண்டும்!" இவ்வாறு தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரிமாதம் முதலாம் திகதி பாட்டாளி மக்கள் கட்சியினரால் சென்னையில் ஈழத்தமிழர் பாதுகாப்புப் பேரணி நடத்தப்படவுள்ளது. ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது.

"இலங்கைப் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள ஈழமக்களின் பிரச்சனைகளை இந்திய மக்கள் புரிந்துகொள்ளவே பெப்ரவரி முதல் தேதியில் பேரணியும் மாநாடும் நடத்துகிறோம். இது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான மாநாடு அல்ல," என்றும் ராமதாஸ் கூறினார்.

இந்த மாநாட்டுக்கு தமிழக முதல்வரை அழைப்பீர்களா? என்று செய்தியாளர்கள் கேட்டபோது, "விடுதலைப் புலிகளை மறைமுகமாக ஆதரிக்கிறார் என்ற அவப்பெயர் கருணாநிதிக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதால், அவரை அழைக்கப்போவதில்லை." என்று தெரிவித்தார் ராமதாஸ்.

## தமிழ்ப் பகுதி வாகனங்களுக்கு விசேட சோதனைகள்

(ஏறாவூர் நிருபர்)

**பு**லுக்குணாவ விசேட அதிரடிப்படை முகாம் தாக்குதலின் பின்னர் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பாதுகாப்பு நெருக்கடி அதிகரித்திருப்பது தெரிந்ததே.

மட்டக்களப்பு, கல்முனைப் பகுதிகளிலிருந்து பொலன்னறுவை ஊடாக போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் இப்பொழுது கதுறுவெலவிலும் பொலன்னறுவையிலும் இடைமறித்து விசேட சோதனை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இவ்வழியால் செல்லும் சிங்களப் பகுதி வாகனங்களுக்கு எவ்வித சோதனையும் இல்லை. கதுறுவெலவில் பொலிஸாரும், பொலன்னறுவையில் படையினருமே சோதனை செய்கின்றனர்.

கதுறுவெலவில் சோதனையிலீடுபடும் ஆண், பெண் பொலிஸார் பயணிகளிடத்தில் அன்பளிப்புப் பெறுவதில் அதி தீவிரமாக உள்ளார்கள். பொருட்களைக் கொண்டு செல்வோர் விரும்பி ஏதாவது கொடுக்காவிட்டால் பயணிகள் முன்னிலையில் வாய்விட்டுக் கேட்பதைக் காணமுடிகிறது. இதேபோல் மட்டக்களப்பின் சகல பகுதிகளிலும் வீதிச் சோதனையிலீடுபடும் ஒரு சில பொலிஸார் அன்பளிப்புப் பொருட்களைப் பெறுவதற்காக பயணிகளை அதட்டி உருட்டுவதில் ஆர்வமாக இருக்கின்றனர். கொடுக்க மறுக்கும் அல்லது குறைந்த அளவில் கொடுக்கும் வாகனங்களைப் பயணம் செய்யவிடாது நீண்ட நேரமாகத் தடுத்து வைக்கும் பல சந்தர்ப்பங்களுமுண்டு.

அம்பாறை- கொண்டவெட்டுவானிலும்; போக்குவரத்துச் செய்யும் தமிழ்ப் பகுதியைச் சேர்ந்த சகல வாகனங்களும் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. ஆனால் சிங்களப் பகுதிப் போக்குவரத்து வாகனங்கள் அங்கே கடுமையின்றி அனுப்பி வைக்கப்படுகின்றன.

வீதிச் சோதனை விடயத்தில் கிழக்கில் பணியாற்றும் விசேட அதிரடிப்படையினர் பயணிகள் மீது மிகக் கண்ணியமாக நடந்து கொள்கின்றனர் என்று பொதுவாகப் பேசப்படுகிறது.

## சந்தைக் குத்தகை விவகாரம் நகரசபைத் தலைவர் குத்துக்கரணம்

திருமலைச் சந்தை குத்தகை விவாகரத்தில் திருமலை நகரசபைத் தலைவர் சூரிய மூர்த்தி எடுத்துள்ள புதிய முடிவு நகர சபை உறுப்பினர்களிடையே கடும் எதிர்ப்பை உருவாக்கியுள்ளது. திருமலைச் சந்தையை நகரசபை குத்தகைக்கு கொடுத்ததை திருமலை இராணுவப் பிரிகேடியர் இரத்துச் செய்திருந்தார். பிரிகேடியரின் தலையீட்டை எதிர்த்து போராடவேண்டிய நகரசபைத் தலைவர் திடீரென்று பின்வாங்கியிருக்கிறார்.

ஜனாதிபதி நாடு திரும்பி குத்தகை விடயத்தில் பிரிகேடியரின் முடிவை பரிசீலிக்கும் வரை பிரச்சனையை ஒத்திப்போடலாம். ஒரு முடிவு காணப்படும்வரை திருமலைச் சந்தையை நகரசபையே தொடர்ந்து நிர்வகிக்கலாம் என்று நகரசபைத் தலைவர் தெரிவித்திருக்கிறார். அவரது கருத்தை நகரசபையில் உள்ள ரெலோ, ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் ஏற்க மறுத்தனர். ஜனவரி முதலாம் திகதி முதல் குத்தகைக்காரருக்கு சந்தை கொடுக்கப்பட வேண்டும். அதனை தள்ளிப்போடுவது இனவாத சக்திகளின் எண்ணம் நிறைவேறக் காரணமாகி விடும் என்று அவர்கள் வாதிட்டனர். அந்த வாதத்தை சூரியமூர்த்தி ஏற்கவில்லை.

நகரசபைத் தலைவருக்கு உரிய அதிகாரத்தைப் பாவித்து சந்தையை தொடர்ந்து நிர்வகிக்க நகரசபைக்கு உத்தரவிடுவதாக அறிவித்து விட்டார் சூரியமூர்த்தி. இதனால் நகரசபைத் தலைவர் கூட்டிய கூட்டம் கூச்சலில் முடிந்தது.

நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தியும் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்தான். நகர சபை ரெலோ உறுப்பினர்கள் அவருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

"பிரிகேடியர் தனது நிர்வாகத்தில் தலையிடுவதை எதிர்த்துப் போராட முடியாத சூரியமூர்த்தி, நகரசபை உறுப்பினர்களின் கருத்தை புறக்கணிக்க தனது அதிகாரத்தைப் பாவித்திருக்கிறார். அதுதான் வேடிக்கை" என்று நகரசபை உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

## "மலையக தமிழாராய்ச்சி மாநாடு யாருக்காக?" மத்திய மாகாண சபையில் கேள்வி!

(கண்டி நிருபர்)

"**ம**லையகத்தில் அமைச்சர் தொண்டமானுக்கு அடுத்த தலைவராக இருப்பவர் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பிரதி அமைச்சருமான திரு. சந்திரசேகரன். அவருக்கே மலையக தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அழைப்பு இல்லை. அவருக்கென்ன இலக்கியம் தெரியாதா? அல்லது தமிழ் மொழிக்கு அவர் துரோகம் செய்தாரா? ஏன் இந்தப் பாகுபாடு?"

இப்படி ஆக்ரோஷமாகக் குரல் எழுப்பினார், மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான திரு.வீ.டி.தர்மலிங்கம்.

மத்திய மாகாண சபையின் 1997 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சபைக்கு திரு.பத்மகீர்த்தி ஹேமச்சந்திர தலைமை தாங்கினார். மத்திய மாகாண சபையின் பல்லேகல மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு தர்மலிங்கம் மேலும் கூறியதாவது: "பிரதி அமைச்சர் சந்திரசேகரனுக்கு அழைப்பு விடுக்காததினால் எமக்கும் மரியாதை இல்லை. எனக்கு அழைப்புக் கிடைத்தாலும் எப்படி அந்த விழாவில் நான் கலந்து கொள்ள இயலும்? அமைச்சர் புத்திரசிகாமணி இதனை அறிந்தே செய்தாரா அன்று வேறு நோக்கத் தோடு செய்தாரா?

பல மலையக எழுத்தாளர்கள் இவ்விழாவில் வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டிருக்கின்றனர். பல கலைஞர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஐந்து இலட்சம் பத்து இலட்சம் என்றவாறு செலவிடப்பட்டுள்ளது. ஐந்து இலட்சம் ரூபாவை இதே சபைதான் ஒதுக்கியது. இதுபோன்ற விழாக்களை இவ்வாறு தரக்குறைவாக நடாத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

ஒரு குழுவைத் திருப்திப்படுத்தவே அமைச்சர் இதனை நடாத்தியுள்ளார். மலையகத் தமிழராய்ச்சி மாநாடு பற்றி விமர்சனங்கள் பல வந்துள்ளன. இவற்றை நோக்கும் பொழுது அத்தகைய விமர்சனங்கள் உண்மையானவை என நன்கு புலனாகின்றது "என்று தெரிவித்தார்.

## "இந்தியா தலையிட வேண்டும்!" தி.க.மாநாட்டில் தீர்மானம்

கி.வீரமணி தலைமையிலான திராவிடர் கழக மாநாடு சென்னையில் உள்ள பெரியார் திடலில் நடைபெற்றது. மூன்று நாட்கள் நடைபெற்ற இம் மாநாட்டின் இறுதியில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கைப் படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுகின்றனர். தமிழக மீனவர்களைக் காப்பாற்ற மத்திய-மாநில அரசுகள் காலம் கடத்துவதைக் கண்டிக்கிறோம்.

இலங்கைப் பிரச்சனையில் இந்திய அரசு தலையிட்டு தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும்: ஆகிய தீர்மானங்களும் அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டின் இறுதியில் தி.க.தொண்டர்கள் தங்கள் மனைவிமாரின் கழுத்தில் இருந்த தாலிகளை அறுத்து வீசினார்கள். "அடிமைச் சின்னமான தாலியை அறுத்தெறிகிறோம்" என்று கூறினார்கள்.

இம்மாநாட்டில் கலந்துகொண்டு நடிகர் சத்யராஜ் உரையாற்றினார். "நான் நீண்ட காலத்திற்கு முன்னரே என் மனைவியிடம் தாலியைக் கழற்றி எறியுமாறு கூறிவிட்டேன். அவள் மோதிரம் போல் இதுவும் பழகி விட்டது என்று கூறிவிட்டாள். அவளும் பக்குவப்பட்டு தாலியைக் கழற்றி எறியும் போது இதே பெரியார் திடலில் என் மனைவியின் தாலியை நானே அறுத்தெறிவேன்," என்று கூறினார் சத்யராஜ்.



படிப்பகம்

www.padippakam.com

# கலைஞர் கருணாநிதி மீது கண்டனம்!
## தமிழக அரசை சினக்கவைத்த மாநாடு

தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சியினர் ஈழத் தமிழர் மாநாடு ஒன்றை நடத்தினார்கள். அந்த மாநாட்டில் பேசியவர்கள் பலர் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.



அந்த மாநாட்டில் புலிகளுக்கு ஆதரவாகப் பேசப்பட்ட கருத்துக்களே நடவடிக்கை எடுக்கப்படக் காரணம் என்று தமிழக பொலிஸ் டி.ஜி.பி. ராஜசேகரன் நாயர் கூறியிருந்தார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் மாநாடு பற்றிய ஒரு செய்தித் தொகுப்பு இது:

காலை ஒன்பது மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

டாக்டர் ராமதாஸ் மாநாட்டு அரங்கின் ஓர் ஓரத்தில் தொண்டர்களுக்கு நடுவே அமர்ந்து நிகழ்ச்சிகளை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தார்.

தமிழ் தேசிய பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளர் பெ. மணியரசன் பேசினார்.

"அன்று புடவை கட்டிக்கொண்டிருந்தவர் புலிகள் பற்றி, இலங்கைத் தமிழர்கள் பற்றி பேசாதே என்றார். இப்பொழுது வேட்டி கட்டிக் கொண்டிருப்பவரும் அதையே சொல்கிறார்.

ஈழத் தமிழர்களையும், பிரபாகரனையும் இழிவுபடுத்த உரிமை இருக்கிறது. ஆதரித்துப் பேச எங்களுக்கு உரிமை கிடையாதா?!" என்று பலத்த கைத்தட்டல்களுக்கிடையே பேசி முடித்தார்.

அடுத்ததாகப் பேசியவர் தியாகு. "நாயரும் புலிவாலும் என்று பழைய கதை ஒன்று உண்டு. இப்பொழுது வேறொரு நாயர் புலிவாலைப் பிடித்திருக்கிறார். கூட்டத்தில் புலிகளை ஆதரித்தோ, புகழ்ந்தோ பேசக்கூடாதாம். மேடையில் இதைப்பேசு, அதைப் பேசாதே என்று சொல்கின்ற உரிமை இந்த நாயருக்கும், நம்பியாருக்கும் எங்கிருந்து கிடைத்தது?" என்றார்.

"ராமாயணம் பற்றி பேசுவதானால் ராமரைப் பற்றி பேசாமல் இருக்க முடியுமா? மகாபாரதம் என்றால் கர்ணனைப் பற்றிச் சொல்லாமல் முடியுமா? சிலப்பதிகாரம் என்றால் கோவலன் பற்றிப் பேசத்தானே வேண்டும். இலங்கை என்றாலும் பிரபாகரனைப் பற்றிப் பேசாதிருக்க முடியாது. ஒன்று மட்டும் சொல்கிறேன்....

துக்ளக் சோவுக்கும் சொல்ல விரும்புகிறேன். குமரப்பா, கிட்டு, திலீபனுக்காக நீ வருந்தவில்லை என்றால், ராஜீவுக்காக எங்களிடமிருந்து ஒரு சொட்டு கண்ணீரைக் கூட எதிர்பார்க்காதே...." என்று தியாகு பேசி முடித்து மேடையிலிருந்து இறங்க, பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், அவரைப் பாராட்டிக் கைகுலுக்கினார்.

பத்திரிகையாளர் டி.என்.கோபாலன் பேசவந்தபோது, "1991-ல் 'ஈழத்தமிழர் நலனைப் பாதுகாக்கும் போர்வையில் தேசத் துரோகம் செய்கின்றவர்களையும் இரும்புக் கரம் கொண்டு அடக்குவோம்' என்று ஜெயலலிதா சொன்னார். இன்று தமிழே என்மூச்சு தமிழே என் பேச்சு என்று சொல்கிற ஆட்சியிலும் டி.ஜி.பி.யும், எஸ்.ஆர்.பி.யும் 'புலிகளை ஆதரித்துப் பேசக்கூடாது ' என்கிறார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு, ஒரு விழாவில், 'கவலைப் படாதே தம்பி, ஈழத் தமிழர்களுக்கு, அகதிகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளைக் களைவேன்' என்று கலைஞர் சொன்னார். ஆனால், இன்று அவர்களுக்கு ஒரு ஆதரவுக் குரல்கூட இங்கிருந்து வரவில்லை," என்று பேசி முடித்தார்.

மூன்று கட்டமாக நடந்த மாநாட்டில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் பேசும்போது இரவு மணி 8.45. ராமதாஸின் பேச்சை உளவுத்துறையினரும் மிக உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தனர். "இங்கே சூழ்ச்சி வலை பின்னுகின்றார்கள். அந்த சூழ்ச்சி வலைக்குள் சில பத்திரிகைகளும் ஆதரவாக இருக்கின்றன. நான் பத்திரிகையாளர்களை எதிர்க்க விரும்பவில்லை. பத்திரிகைகளின் முதலாளிகள்தான் எங்கள் கருத்துக்களுக்கு எதிராக இருக்கிறார்கள். இதை மாற்றிக் கொள்ள வேண்டுகிறேன். எதிர்காலத்தில் தமிழீழம் அமையப்போவது உறுதியிலும் உறுதி. அப்பொழுது நீங்கள் பின்னிய வலைகளைப் பார்த்து தமிழர்கள் எவ்வளவு உணர்ச்சி வசப்படுவார்கள், என்பதை யோசித்துக் கொள்ளுங்கள்.

பத்திரிகையாளர்களே! இது ஒரு விடுதலைப் போராட்டம், தயவு செய்து இந்தப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தாதீர்கள்," என்றார்.

"இந்தப் பிரச்சனையில் கலைஞர் நேரடியாகத் தலையிட்டால்... புலிகளைக் காட்டி ஆட்சியைக் கலைத்துவிடுவார்கள் என்கிறார்கள். அவர் ஆட்சி பறிபோகாமல் பார்த்துக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்," என்று முடித்தார் ராமதாஸ்.

**மாநாட்டில் பேசிய டாக்டர் ராமதாஸ் துக்ளக் 'சோ'வை 'மொட்டைப் பையன்' என்று கிண்டலடித்தார். அதற்கு துக்ளக் இதழில் 'சோ' சொன்ன பதில்– "நான் மொட்டை என்பது நாடறிந்த விஷயம். பையன் என்று சொன்னது ரொம்பச் சந்தோஷமாக இருக்கிறது!"**



# கைக்கு எட்டாத கடவுச் சீட்டு

(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஒருவர் வெளிநாட்டிற்குச் செல்லும் பொருட்டு கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி அட்டாளைச் சேனைப் பிரதேச செயலகத்தினூடாக- கேட்கப்பட்டிருந்த சகல ஆவணங்களுடனும் கடவுச் சீட்டிற்கு விண்ணப்பித்திருந்தார்.

அவ்விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட அதிகாரி குறிப்பிட்ட விண்ணப்பதாரிக்கு 96/ME/AD-AM/ 026 எனும் இலக்கமிடப்பட்ட அட்டையொன்றையும் வழங்கியிருந்தார். கடவுச் சீட்டிற்கு விண்ணப்பித்து இற்றைக்கு 05 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரைக்கும் கடவுச்சீட்டு கிடைக்கப்பெறவில்லை. இதையிட்டு குறிப்பிட்ட விண்ணப்பதாரி பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட அட்டையைக் கொண்டு பிரதேச செயலகம், கொழும்பு கடவுச் சீட்டுக் காரியாலயம் போன்றவற்றோடு தொடர்பு கொண்டும் இது வரைக்கும் எதுவித பதிலுமில்லை.

மக்களின் காலடிக்கு நிருவாகத்தைக் கொண்டு செல்லும் பொருட்டே கடந்த சில காலங்களாக பிரதேச செயகலம் மூலம் கடவுச் சீட்டிற்கு விண்ணப்பிக்கும் முறை அமுல் படுத்தப்பட்டது. இதனை ஒரு வரப்பிரசாதமாகக் கொண்டே ஏழை மக்கள் பிரதேச செயலகம் மூலம் கடவுச் சீட்டிற்கு விண்ணப்பிக்கின்றனர். எப்படியும் ஒரு மாத காலத்திற்குள் உரியவர்களை வந்தடையும் கடவுச்சீட்டு, ஐந்து மாதங்களுக்கு மேலாகியும் இதுவரைக்கும் வந்து கிடைக்கவில்லையே என குறிப்பிட்ட விண்ணப்பதாரி அதிருப்தியைத் தெரிவித்துக்கொண்டார்.

# விளையாட்டுத்துறை பயிற்சிக் கல்வி
## திருமலைப் பாடசாலையும் தெரிவு!

(திருமலை நிருபர்)

இலங்கையின் விளையாட்டுத்துறை கல்லூரிகளில் ஒன்றாக திருக்கோணமலை புனித சூசையப்பர் தேசிய பாடசாலை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் தெரிவான இக்கல்லூரி இலங்கை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு தமிழ்ப்பாடசாலை என்ற பெருமையையும் பெறுகிறது.

ஏழாம் ஆண்டிலிருந்து எட்டாம் ஆண்டிற்கு வகுப்பேற்றம்பெறும், விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ள மாணவர் மாணவியர் நாற்பது பேர் ஒவ்வொரு ஜனவரி தொடக்கம் இக்கல்லூரியில் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். மாவட்ட மட்டங்களில் திறமையான மாணவர்களிடையேயிருந்து இருபது மாணவர்களும் இருபது மாணவியரும் நேர்முகத் தேர்வு ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டு அரசாங்கச் செலவில் இருப்பிடம், உணவு வசதிகள் அளிக்கப்பட்டு பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

முதலாவது அணிக்கான பயிற்சி ஜனவரி தொடக்கம் ஆரம்பமாகிறது. பெண்கள் புனித மரியாள் கல்லூரியிலும் ஆண்கள் புனித சூசையப்பர் கல்லூரியிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டு பயிற்சி பெற ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக கல்லூரி நிர்வாகம் முரசிடம் தெரிவித்துள்ளது.

இது ஒரு புலமைப்பரிசிற் திட்டம் எனவும் தேசிய மட்டத்தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதே இதன் பிரதான நோக்கம் எனவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# சம்பளம் வழங்குவதில் தாமதம்
## திரண்டு காத்திருந்த ஆசிரியர்கள்!

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை கோட்டக்கல்வி அலுவலகத்தின் முன்பாக நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தங்கள் சம்பளப்பணத்தைத் தருமாறு கோரிக் கூடிநின்றனர். கடந்த 20ம் திகதி வெள்ளியன்று இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

18ம் திகதி வழங்கப்பட வேண்டிய தங்கள் சம்பளம் 20ந் திகதி வரை வழங்கப் படாததாலேயே ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் கல்வி அலுவலகத்தின் முன்னால் திரண்டிருந்தனர்.

அலுவலக ஊழியர்களது சம்பளங்களை 18ம் திகதியே வழங்கி விட்ட நிருவாகம் ஆசிரியர்கள் விடயத்தில் அசமந்தமான நடந்து கொள்கிறது, என ஆசிரியர்கள் பலர் முரசு நிருபரிடம் தெரிவித்தனர்.

இன்று சம்பளம் வழங்கப்பட்டால் கூட, காசோலைகளை நத்தாருக்கு முன் வங்கியிலிட்டுப் பணத்தைப் பெற வாய்ப்பு இல்லை. எனவே நத்தார் கொண்டாட முடியாமற் போய்விட்டது என்று கிறிஸ்தவ ஆசிரியர்கள் மனம் நொந்து கூறினர்.

நிர்வாகப் பரவலாக்கலிலேயே இத்தகைய துர்ப்பிரயோகங்கள் தாராளமாக இடம்பெறுகின்ற வேளை அதிகாரப் பரவலாக்கல் வேறு கேட்டது வேடிக்கைத்தானே!


## 'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்

APPROVED CHARITY அரசாங்கப் பதிவு இல. HA14/BT/176

'எல்லாப்புகழும் இறைவனுக்கே'

காம-காலவனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பப்பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறுபிரச்சினைகளும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவனருளி முனிவர்கள் கையாண்ட கைகண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங்களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடிகடந்தும் உடன்வேலை செய்யும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபரிகாரப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. விஷ(பாம்பு) கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.



நாடவேண்டிய பெயர், விலாசம்

YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.

குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.



## COMPUTER வகுப்புக்கள்

**Computer Diploma**
Ms. Dos - Lotus
W.P - d-Bass
**Ms Office**
Windows. 3.1 -Excel
Word. Power Point
Windows 95.

## Maths - வகுப்புக்கள்

Yr 9, 10, 11. புதிய ஆண்டுகளுக்கான கணித பாடம் (With Papers) ஆரம்பிக்கப்படுகின்றது.

Note: முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
Contact:

**Institution of Information System (I.I.S)**
4C, 1/5, 1/6, Fussels Lane, Wellawatte.



## மலையாள மாந்திரீக சக்தி



சாஸ்திரம் இது தர்மத்திற்கு இணையானது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம், மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர் பி.கே.சாமி அவர்கள். மாயா ஜால வித்தையல்ல மனோநிலையை மயங்கச் செய்யும் மாந்திரீகமும் அல்ல. இது மாந்திரீக சக்தியின் மகிமை. ஜாதகம், இது விதியின் நிர்ணயம். நிர்ணயிக்கப்பட்ட விதியின் விலாசத்தை படம் பிடித்து காட்டுவது மாந்திரீகம். பிறப்பின் பயன் இறப்பு வரை. அது விதியின் தன்மை. அதை மாற்றி அமைப்பது மதி. அதற்கு உறுதியாக இருக்கிறார் மாந்திரீக மாமன்னர் பி.கே.சாமி அவர்கள். பிரிந்த காதல் ஒன்று சேர, பிரிந்து சென்றவரை அழைப்பித்து எடுக்க, இருவருக்கும் திருமணம் நடைபெறாதென முடிவெடுக்க திருமணம் நடைபெறவும், ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் என முடிவெடுத்து வாழ, திடீர் வியாபார விருத்தி அடைய, தீராநோய்களை தீர்த்துக் கொள்ள, வீடு வளவு பாதுகாப்பு செய்ய, குளியங்களை அகற்றி பழி அடிக்க, செவ்வாய் தோசம் நிவர்த்தி பெற. அதி விசேடமாக வெளிநாட்டவர்களின் பிரச்சினைகளுக்கு அவர்கள் பிரச்சினை தீர 3 நாளில் அவ்வவ் ஊரில் எமது அங்குள்ள நிர்வாகம் மூலமாக தங்களுக்கு பார்சல் உடன் அனுப்பப்படும். அத்துடன் பிறந்த திகதி, மாதம், இலைகளை அறிவித்து ரூ.1500 அனுப்பி வைத்தால் 30 நிமிடத்தில் உங்கள் ஆயுள் ஜாதகத்தை கண்ணாடிபோல தெட்டத் தெளிவாக கணித்து அனுப்பிவைப்போம்.

தொடர்புகளுக்கு–

| தலைமை காரியாலயம் | உப காரியாலயம் |
|---|---|
| P.K.SAMY ASSOCIATE (PVT) LTD. ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு) உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி பி.கே. சாமி (J.D.G.A.N.) JP NO.162, MAY FIELD ROAD KOTAHENA, COLOMBO-13 தொலைபேசி வரிசைகள்: 342463- 344831- 344832- 431137- 07841571 பெக்ஸ்-342464 | P.K.SAMY ASSOCIATE (PVT) LTD. ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு) உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி NO. 33, DAILY FAIR BUILDING NUWARA - ELIYA. நுவரெலியா. தொலைபேசி வரிசைகள்: 052.2508, 3336, 3570, 3093 பெக்ஸ்- 0523336 |

எந்த மாத கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் உச்சாடன பூஜை காலை 09 மணி முதல் மாலை 06 மணி வரை விஷேட பூஜையில் கலந்து குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். கேட்டபடி கேட்டவரம் தரும் தேவி ஸ்ரீ துர்க்கை அம்மனே.
மாந்திரீகத்திலும் ஜோதிடத்திலும் தனக்கென ஒரு தனி இடத்தை பெற்ற 90ர நிறுவனம் எமது பி.கே.சாமி அசோசியேட் வரையறுக்கப்பட்ட பிரைவட் நிறுவனமே.

| குறிப்பு–1. | குறிப்பு–2 |
|---|---|
| எமது அனைத்து தொலைபேசி எண்களும் தொடர்பில் இருந்தால் தாங்கள் எம்முடன்: PAGER மூலம் தொடர்பு கொள்ளலாம். PAGER CENTRE NO-588407-PAGER NO-972 | வெளிநாட்டில் உள்ளவர் எமது சேவையை அறிந்து கொள்ள, வெளிநாட்டு COMPUTER INTERNET, NO., E/MAIL/SAMY 1.2 SLT.LK, WWW LGO SLT.LK. |

நேரில் அப்பாயின்ட்மென்ட் பெற்று சந்திக்கும் நேரம்

| காலை | மாலை |
|---|---|
| 9 மணி முதல் 12.00 மணி வரை | 3 மணி முதல் 6.30 மணிவரை. |

வெள்ளிக்கிழமை விடுமுறை



## முகவர் தேவை

கீழ்க்காணும் ஊர்களில் தினமுரசு விற்பனை முகவர்கள் தேவை. முற்பணம் செலுத்திப் பிரதிகள் பெற்று விற்கக்கூடிய கடை உரிமையாளர்கள் விண்ணப்பிக்கவும்.
றம்புக்கன, ஹெம்மாத்தகம, அவிஸ்சாவெல, கேகாலை, ராகம, வத்தளை, ஹபுகஸ்தலாவ, மாவத்தகம, தெரணியாகலை, ஹாலி-எல.



## வர்த்தகமும் கணக்கியலும்

ஆண்டு 9,10,11க்கு கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- சி.ஜெயகுகன்
C/O A.சிவஞானம். இல. 51, உக்கிழாங்குளம், வவுனியா.



## EFFECTIVE ENGLISH WITH GRAMMAR AND SPOKEN ENGLISH
செயற்திறனுடைய ஆங்கில இலக்கணமும் பேச்சு ஆங்கிலமும்

- ஆங்கிலச் சொற்கள் ஆயிரக்கணக்கில் தெரிந்திருந்தும் ஆங்கிலம் பேச முடியவில்லையே!
- பேசும் ஆங்கில வகுப்புக்கு பலரிடம் சென்றும் ஆங்கிலம் பேச முடியவில்லையே!
- ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம், ஆனால் தவறாக பேசி விடுவோமா என்ற தயக்கம்

**இவை தானே உங்கள் பிரச்சனை**

நீங்கள் பாடசாலையில் ஆங்கிலத்தைப் பரீட்சைக்காகப் படித்தீர்களே அன்றி, அதைப் பேசப் பயிற்சி பெறவில்லை. இதுவே பெரிய குறைபாடு.

இதனை நன்குணர்ந்த எமது நிறுவனம் சிறந்த முறையில் பேச்சு ஆங்கிலத்தை உங்கள் நாவிலிருந்து சரளமாக எளிய முறையில் வெளிக் கொணரவுள்ளது. நவீன உளவியல் ரீதியில் மாணவர் உவந்தேற்கும் முறையில் பன்னிரண்டு (12) பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்ட தபால் மூலமான கல்வி நெறி.

விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

பேச்சு ஆங்கிலம் நேரடி வகுப்புகள் பிறைட் இயக்குனர் PON. SAKTHIVEL அவர்களால் ACA நிறுவனத்தில் NO.55, ST. LUCIAS STREET, COLOMBO - 13ல் ஞாயிற்றுக்கிழமைகளில் கற்பிக்கப்படும்.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S -27, First Floor, Colombo Central Super Market Complex, Colombo - 11.
P. O. Box 162,
T. P. 434770



## றெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)

★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411



## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030



## மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்த, கனவில் சக்தியிழந்த, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்த உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடா மூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஜனவரி 19 முதல் 31 வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN BANG BANG BULDING NO 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11 T.P 436383, 436390, 078-71101 Fax 436439 ஜனவரி 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், ஜனவரி 9, 10, 11 தினங்களில் கல்முனை T.M.M பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No.33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# அரசு-புலிகள்-இந்தியா முத்தரப்புக்குள் முட்டுக்கட்டைகள்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக்கப்பட்டிருந்தன. வீதிச் சோதனைகளும், தேடுதல் நடவடிக்கைகளும் உஷாராக மேற்கொள்ளப்பட்டன.

**கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கம் போர் நிறுத்த அறிவித்தல் எதுவும் வெளியிடவில்லை. ஆனால் ஜனாதிபதி ஆண்டுமுடிவை அமைதியாகக் கொண்டாடக்கூடிய இடத்துக்குச் சென்றிருந்தார்.**

வீதிகளில் நடந்து செல்ல ஜனாதிபதி விரும்பியதாகவும், பாதுகாவலர்கள் அதனை அனுமதிக்கவில்லை என்றும் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதிக்கு மட்டுமல்ல, இந்த நாட்டு மக்கள் அனைவருக்குமே பாதுகாப்புக் கெடுபிடிகள் இல்லாத தெருக்களில்- எவ்வித அச்சுறுத்தலும் இல்லாத சூழலில் கைவீசி நடந்து செல்ல ஆசைதான்.

துப்பாக்கிகளோடு முறைத்துக் கொண்டிருக்கும் படையினர், தீவிர சோதனைகளால் தாமதங்கள், அசெளகரியங்கள் என்பவற்றிலிருந்து விடுபடும் நன்னாள் என்று வரும் என்பதையே ஜனாதிபதி முதற்கொண்டு சாதாரண பிரஜைவரை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

ஆனால், இந்த நாட்டில் அமைதி வரும் என்று எதிர்பார்ப்பதைவிட நாட்டை விட்டு வெளியே போனால்தான் ஓரளவு நிம்மதி என்று பலர் வெளியேறிச் சென்றுள்ளனர்.

அவ்வாறு வெளியேறிச் சென்றவர்களில் அநேகமானோர் தமிழர்கள். அவர்களைத் திருப்பி அனுப்பினால் இங்கு அவர்கள் வந்து வாழ முடியும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இங்கு பிரச்சனைகள் தீர்ந்து வருகின்றன; அதனால் அகதிகளை திருப்பி அனுப்பலாம் என்பதுதான் வெளியுலகில் இலங்கை அரசு செய்யும் பிரச்சாரம்.

**ஆயினும், ஜனாதிபதியைக்கூட இந்த நாட்டின் ஒருபகுதியில் ஓய்வு எடுத்துக் கொள்ள உத்தரவாதம் கொடுக்க முடியாத நிலையில்தான் பாதுகாப்புத் தரப்பினர் இருக்கின்றனர்.**

**முக்கியமான தினங்களில் ஜனாதிபதியை வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பது பாதுகாப்பானது என்றுதான் முடிவுக்கு வருகிறார்கள்.**

கிறிஸ்மஸ், புத்தாண்டு பண்டிகைகளை முன்னிட்டு தலைநகரில் பட்டாசுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

பட்டாசுகளின் ஓசைகளிடையே மிக விழிப்பாகப் படையினர் செயற்பட வேண்டி இருக்கும்.

தலைநகரப் பாதுகாப்போடு ஜனாதிபதிக்கான பாதுகாப்பையும் மேற்கொள்வது இரட்டைச் சுமையான விடயம்.

அதனால்தான் கிறிஸ்மஸ் புத்தாண்டை ஒட்டியதாக தனது ஓய்வுகாலப் பயணத்தை வைத்துக்கொண்டார் ஜனாதிபதி.

எனினும் புத்தாண்டு பிறக்கும்போது நாட்டில் ஜனாதிபதி இல்லையென்றால் எதிர்க்கட்சியினர் காரசாரமாக விமர்சிப்பார்கள் என்பதால் புத்தாண்டு பிறக்கும் போது நாட்டில் இருக்கக்கூடியதாவே பயணத்திட்டம் வகுக்கப்பட்டது.

புலிகள் தாக்குதல் நடத்துவதற்கு தெரிவு செய்யும் இராசியான தினங்களில் ஒன்று 26ம் திகதி. புத்தாண்டை முன்னிட்டு புலிகள் ஏதாவது தாக்குதலை நடத்துவதாக இருந்தால் டிசம்பர் 26ல் நடத்தக் கூடும் என்று எதிர்பார்த்திருக்கலாம். அதனால்தானோ என்னவோ அதற்கு முன்னரே ஜனாதிபதி புறப்பட்டுச் சென்றிருந்தார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தனிப்பட்ட விஜயமாக இருந்தாலும், அரசியல் விவகாரங்கள் பேசப்படமாட்டாது என்று அர்த்தமல்ல. பேசப்பட்டுமுள்ளன.

ஆயினும், இலங்கை விவகாரத்தில் தற்போதுள்ள நிலையில் திருப்பத்தை ஏற்படுத்தும் அளவுக்கு அந்தப் பேச்சுக்கள் முக்கியத்துவம் கொண்டவையாக விளங்கவில்லை.

ஏனெனில், இந்திய மத்திய அரசு இலங்கை விவகாரத்தில் தற்போதுவரை ஒரேயொரு முடிவில்தான் இருக்கிறது.

'பிரச்சனையில் தலையிடுவதில்லை; ஆனால் தனது நலனுக்கு விரோதமாக ஏதாவது காரியம் நடந்துவிடுமோ என்பதை மட்டும் கவனித்துக்கொண்டிருப்பது' என்பதுதான் இந்திய அரசின் நிலைப்பாடு.

**தனது ஓய்வைக்கழிக்க இந்திய மாநிலம் ஒன்றைத் தெரிவு செய்தது மூலம் இந்தியா மீதான தனது நம்பிக்கையை ஜனாதிபதி வெளிக்காட்டியிருக்கிறார்.**

**ஓய்வைக் கழிக்க விரும்பிய ஜனாதிபதியை வரவேற்றது மூலம் இந்திய அரசும் தனது நல்லுறவு விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.**

நெருங்கிய நண்பர்களின் வீடுகளுக்குத்தான் விடுமுறையைக் கழிக்க விருந்தினராகச் செல்வது வழக்கம்.

ஜனாதிபதி சந்திரிக்கா இந்தியாவுடன் நெருக்கமான நட்புறவை வைத்திருக்கவே விரும்புகிறார். இந்தியாவும் அதனையே விரும்புகிறது.

இலங்கைப் படைகளுக்கு அமெரிக்கா பயிற்சி கொடுப்பது போன்ற விடயங்கள் இந்தியாவின் நலனைப் பாதிக்கும் வகையில் அமையாது என்பதை இலங்கை அரசு இந்தியாவுக்கு விளக்கியிருக்கிறது.

மற்றொரு பாகிஸ்தானாக மாறி அமெரிக்காவுடன் இலங்கை கைகோர்த்துக் கொள்ளாது என்ற நம்பிக்கை இந்தியாவுக்கு இருக்கும்வரை உறவுகளில் விரிசல்கள் தோன்ற வாய்ப்பேயில்லை.

**இந்திய உள்நாட்டு அரசியல் நிலவரமும்- இலங்கை விவகாரத்தில்- இந்திய அரசு தலையிடுவதற்கான அவசியத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை.**

இந்தியாவில் முன்னாள் பிரதமர்களாக இருந்த இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் தமிழக மக்களின் உணர்வுகள் தொடர்பாக அக்கறைப்பட்டனர். அதற்கு ஒரு காரணமிருந்தது.

தமிழ்நாட்டில் அவர்களுக்கும் கணிசமான வாக்கு வங்கிகள் இருந்தன. மத்தியில் ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையைப் பெற தமிழகத்தில் உள்ள பாராளுமன்றத் தொகுதிகளையும் அவர்கள் நம்பியிருந்தனர்.

ஆனால் தற்போது இந்திய மத்திய அரசில் உள்ள பிரதமர் தேவகௌடாவுக்கு தமிழகத்தில் வாக்கு வங்கி எதுவும் கிடையாது. தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளின் ஆதரவைப் பெறத்தான் அவர் விரும்புகிறார். நேரடியாக தமிழக மக்களின் ஆதரவை நாடுமளவுக்கு தமிழக மக்களிடம் அவருக்குச் செல்வாக்குக் கிடையாது.

அதனால், தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான உணர்வுகள் வளர்ந்தாலும்கூட, இந்திய மத்திய அரசு எந்தளவுக்கு கவனத்தில் எடுக்கும் என்பது கேள்விக்குறிதான்.

**தமிழக மக்களின் உணர்வுகளைப் புறக்கணித்தால் அங்குள்ள தமது செல்வாக்கு வீழ்ச்சியடைந்துவிடுமோ, அடுத்த தேர்தலுக்கு வாக்குக் கேட்டு பிரசாரத்திற்குப் போக முடியாமல் இருக்குமோ என்று இந்திரா, ராஜீவ்போல கவலைப்படும் தேவை தேவகௌடாவுக்குக் கிடையாது.**

தமிழகத்தில் உள்ள முக்கிய கட்சிகளான தி.மு.க., தமிழ் மாநில காங்கிரஸ், அ.தி.மு.க. போன்ற கட்சிகள் இலங்கைத் தமிழர் விவகாரத்தை உயர்த்திப் பிடித்தால் தேவகௌடா கண்திறக்கலாம்.

ஆனால், மேற்கண்ட மூன்று கட்சிகளுமே புலிகளை எதிர்ப்பதில் தம்மிடையே தீவிரமானவர்கள் யார் என்று போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன.

கருணாநிதியின் கவலையெல்லாம் தனது மைந்தன் ஸ்டாலின் அரியணை ஏற வேண்டும்; தான் இல்லாத காலத்தில் புலிகளின் உதவியோடு வை.கோபாலசாமி ஸ்டாலினை ஏதாவது செய்து விடக்கூடாது என்பதுதான்.

ஆக, மொத்தத்தில் இந்தியாவின் மத்திய, அரசியலிலும், தமிழக மாநில அரசியலிலும் இன்று செல்வாக்குச் செலுத்தும் சக்திகள் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தலையிட விரும்பவில்லை. வீண்வம்பை விலை கொடுத்து வாங்குவானேன் என்ற நிலைப்பாட்டோடு இருக்கின்றன.

> **இந்தியத் தலையீட்டுக்கு அன்று காரணமானவை:**
>
> - தமிழக மக்களிடம் இலங்கைத் தமிழர்மீதான அனுதாபமும் ஆதரவு அலையும்.
> - தமிழக முக்கிய கட்சிகளின் ஆதரவுப் போராட்டங்கள்.
> - இந்திய பிரதமராக இருந்த இந்திரா காந்தி தமிழக மக்களிடம் தனது செல்வாக்கை தக்கவைக்க விரும்பியமை.
> - இலங்கை அரசு இந்தியாவின் விரோத சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்டமை.
>
> **இன்றுள்ள நிலை**
>
> - தமிழகத்தில் அனுதாபம் ஓரளவு உண்டு; ஆதரவு அலை கிடையாது.
> - தமிழக முக்கிய கட்சிகள் பாராமுகம்.
> - இந்தியப் பிரதமருக்கு தமிழக மக்களின் நேரடி ஆதரவு தேவையில்லை.
> - தமிழக வாக்கு வங்கிகளில் பிரதமருக்கு நாட்டமில்லை.
> - இலங்கை அரசு இந்தியாவின் நண்பன்; புலிகள் எதிரிகள்.

அரசியலுக்கு அப்பால் இந்தியாவின் நலன் என்று பார்க்கும்போது, இலங்கையில் இந்திய விரோத சக்திகள் ஆதிக்கம் பெறுவதுதான் இந்தியாவுக்குப் பாதகமாக இருக்கும்.

ஆனால், இன்றைய இலங்கை அரசு தனது அணுகுமுறைகள் மற்றும் வெளியுறவுக் கொள்கைகளால் இந்தியாவின் நலனுக்கு பாதகம் ஏற்படாது என்பதை வெளிக்காட்டி வருகிறது.

**இந்தியாவின் உளவு நிறுவனங்களும், இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகமும் இலங்கை அரசின் நடவடிக்கைகளைவிட, புலிகளின் நடவடிக்கைகளைத்தான் உன்னிப்பாக நோக்கி வருகின்றன.**

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு தேநீர் விருந்துகள் கொடுக்கப்படுகின்றன.

சமீபத்தில் வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை அரசாங்கம் அறிவித்தபோது, தமிழ்க்கட்சிகள் சிலவற்றின் தலைவர்களை அழைத்து இந்தியத் தூதரக அதிகாரிகள் கருத்துக் கேட்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதியின் அறிவிப்புக்கு தமிழ்க் கட்சிகளின் பிரதிபலிப்பு எப்படி இருக்கிறது என்று நாடிபிடித்து அறிந்திருக்கிறார்கள்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்றால் பங்கு கொள்வதுதான் நல்லது என்று தன்னிடம் கூறப்பட்டதாக ஒரு கட்சித் தலைவர் தனது நண்பரிடம் கூறியிருக்கிறார்.

அதன்பின்னரே உள்ளூராட்சித் தேர்தல் வேண்டாம் என்று ஒரேயடியாக மறுதலிப்பதற்கு தமிழ்க் கட்சிகள் சில பின்னடித்தன.

புலிகளை இராணுவரீதியில் பலவீனப்படுத்துவது அவசியம். அதேநேரத்தில் மிதவாதத்தமிழ்க் கட்சிகள் அரசியல் ரீதியில் செல்வாக்குப் பெறுவதும் அவசியம் என்ற ரீதியிலேயே இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் செயற்படுகின்றன.

**முன்னர் ஒரு கட்டத்தில் இலங்கை அரசின் கரங்களைப் பின்புறமாகத் திருக தமிழ் போராளி இயக்கங்களைப் பயன்படுத்தியது இந்திய அரசு.**

அப்போது இந்தியாவுடன் முரண்டு பிடித்துக்கொண்டு, இந்தியாவின் எதிரி நாடுகளுடன் இலங்கை அரசு கைகோர்த்திருந்தது.

**இப்போது புலிகளின் கரங்களை முறுக்க இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை மறைமுகமாக ஆசிர்வதிக்கின்றன இந்திய இராஜதந்திர வட்டாரங்கள்.**

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற உறவு முறைதான் இது.

இந்த இராஜதந்திரத்தைப் புரிந்து கொண்டால், புலிகளுடன் இலங்கை அரசு பேசுவதற்கு இந்தியா தூண்டுகிறது; இரகசிய யோசனை நடக்கிறது என்ற ஊகங்கள் எத்தனை அபத்தமான கற்பனைகள் என்பது தெரியவரும்.

**புலிகளின் ஆயுதக் கப்பல் தொடர்பாக இலங்கைக் கடற்படைக்கு இந்தியாதான் தகவல் கொடுத்தது. புலிகளைப் பலவீனமாக்குவதில் இலங்கை அரசுக்கும் தனக்குமுள்ள ஒத்த தன்மையை இந்தியா நிரூபித்திருக்கிறது.**

இன்னொரு விஷயம்- இலங்கை அரசு புலிகளை நம்பினால்கூட, இந்தியாவின் இன்றைய இராஜதந்திர வட்டாரங்கள் புலிகளை நம்பத் தயாராக இல்லை.

ஜனாதிபதி சந்திரிக்கா புலிகளுடன் பேச்சு நடத்தியபோது இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் கச்சிப்பாக இருந்தன. பேச்சு முறிந்த பின்னர் பலநாடுகள், கருத்து வெளியிட்டன. இந்தியா வாயே திறக்கவில்லை. இது எதிர்பார்த்த முடிவுதான் என்பதுபோல இருந்துவிட்டது.

எனவே- இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் புலிகளைப் பலவீனப்படுத்தும் இராணுவ நடவடிக்கைகளுக்குத்தான் மௌனமாக- மறைமுகமாக ஆதரவு காட்டுகின்றன.

**புலிகளுக்கு எதிரான யுத்தம் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளையும் பலவீனப்படுத்துமா, இல்லையா என்பது பற்றி அந்த வட்டாரங்கள் கவலைப்படவில்லை.**

ஜனாதிபதி சந்திரிக்காவும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிக் கூறும்போது, மிகக் கவனமாகத்தான் கருத்துக் கூறியிருந்தார். பிரபாகரன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தை கோரவேண்டும். மத்தியஸ்தம் செய்யக் கூடிய நாடுகளின் பெயர்களை பிரபாகரன்தான் அறிவிக்க வேண்டும் என்பதுதான் ஜனாதிபதியின் கருத்து.

அந்தக் கருத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

**பிரபாகரனே முன்வந்து மத்தியஸ்தம் மூலமாக பேச்சுக்கு அழைப்பு விடுத்தால், புலிகள் பணிந்துவிட்டார்கள் என்று உள்நாட்டில் கூறமுடியும்.**

**இரண்டாவது அம்சம்- பிரபாகரன் சில நாடுகளின் பெயர்களைக் கூறினால், ஏனைய நாடுகள்மீது நம்பிக்கை இல்லை என்று அர்த்தமாகிவிடும். குறிப்பாக இந்தியாவைப் பிரபாகரன் கூறாவிட்டால், இந்திய-புலிகள் உறவு மேலும் விரிசலாகி விடும்.**

ஆக, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுக்கான கோரிக்கையை பகிரங்கமாக நிராகரிக்க முடியாத நிலையில், பந்தைப் பிரபாகரனின் கோட்டுக்குள் அடித்து விட்டிருக்கிறார் ஜனாதிபதி.

**பிரபாகரன் தானாக முன்வந்து மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை கோரினாலோ, நாடுகளின் பெயர்களை அறிவித்தாலோ ஜனாதிபதி வைத்துள்ள பொறியில் சிக்கிவிடுவார்.**

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ இப்போதைக்கு புலிகளுடன் பேசத் தயாராக இல்லை.

தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தலை அறிவிக்க புலிகளுடன் மோதி பெறப்போகும் வெற்றி ஒன்றுக்காக காத்திருக்கிறார் ஜனாதிபதி. அந்த வெற்றி கைமாறுவதற்கிடையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடித்துவிட வேண்டும் என்பதுதான் கணக்கு.

இதற்கிடையே சில தனி நபர்கள்- குமார் ரூபசிங்கா போன்றவர்கள் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட முயலலாம். இரு தரப்புமே அவர்களைத் தடுக்காது. தடுத்தால் பெயர் கெட்டுவிடும்.

**இதேவேளை, சர்வதேச மனித உரிமை அமைப்பொன்றை பேச்சுவார்த்தைக்கு அரசு தூண்டிவிடுவதாக இலண்டனில் புலிகள் தெரிவித்ததாக ஒரு செய்தி வெளியாகியது.**

**புலிகள் அப்படிப் பகிரங்கமாக அறிவித்ததாக ஆதாரம் எதுவும் இல்லை. ஆனால் அவ்வாறு தெரிவித்தால்கூட ஆச்சரியமில்லை.**

**அரசாங்கம் தம்மோடு பேசுவதற்கு விரும்புகிறது என்று சொல்வது மூலம், அரசாங்கம் தம்மிடம் தோல்வி கண்டுவிட்டது என்ற அபிப்பிராயத்தை வெளியுலகில் உருவாக்கவே புலிகள் விரும்புவார்கள்.**

அதேபோல புலிகள் தாமாகவே பேச வந்தால், அவர்கள் தோல்வி கண்டுவிட்டார்கள் என்ற அபிப்பிராயத்தை உருவாக்கவே அரசாங்கம் விரும்புகிறது. அரசாங்கத்தின் உள்நாட்டு அரசியல் வெற்றிகளுக்கு அதுதான் தேவை.

எனவே- இருதரப்பும் பேச்சுவார்த்தை தொடர்பாக கூறும் கருத்துக்கள் ஒரு தரப்புக்கு மறுதரப்பு வைக்கும் பொறிகளாகவே இருக்கின்றன.

ஆனால், இருதரப்பும் விழிப்பாகவே இருக்கின்றன. தமது பலத்தை குறிப்பிட்டளவில் மேலோங்கச் செய்யும்வரை இருதரப்பும் பேச்சில் ஈடுபடப்போவதில்லை.

இந்தியாவில் தனக்குக் கிடைத்த வரவேற்பும், மரியாதையும் ஜனாதிபதி சந்திரிக்காவை மேலும் ஒருபடி உற்சாகம் கொள்ளச் செய்யப்போகின்றன. அந்த உற்சாகம், பேச்சுவார்த்தைக்கான கதவைத் திறப்பதற்கான உற்சாகமல்ல. யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான உற்சாகமாகத்தான் இருக்கும்.

இந்தியப் பிரதமர் தேவகௌடாவை ஜனாதிபதி சந்தித்திருக்கிறார்.

தேவகௌடாவை தூங்கும் பிரதமர் என்று சொல்கிறார்கள். இந்திய உள்நாட்டு விவகாரங்களில்கூட சொந்த முடிவு எடுக்க முடியாதவர் அவர்.

இலங்கைப் பிரச்சனை தொடர்பாக அவர் எந்தளவுக்குப் புரிந்து வைத்திருக்கிறார் என்பதும் பெரிய கேள்விக்குறிதான்.

ஜனாதிபதியின் வசீகரமான புன்னகையும், வாதத்திறனும் அவரை வென்றுவிடும். 'அடித்துத் தூள்பண்ணுங்கள்' என்று சொன்னாலும் சொல்லியிருப்பார்.

இந்திய காங்கிரஸ் கட்சிக்கு சோனியாவின் ஆதரவு தேவை. சோனியாவுக்கு புலிகளைக் கண்ணில் காட்டக் கூடாது. தேவகௌடா அரசுக்கு காங்கிரஸ் கட்சியின் ஆதரவு கட்டாயத்தேவை. எனவே இந்திய மத்திய அரசோ, தேவகௌடாவோ தப்பித்தவறிக்கூட இலங்கை அரசு புலிகளுடன் பேசவேண்டும் என்று சொல்லப்போவதில்லை.

எனவே- ஜனாதிபதியின் விஜயத்தை அடுத்து கிளம்பிய ஊகங்களுக்கும் வதந்திகளுக்கும் ஆயுள் சொற்பம்தான். ○

## அதிரடி அய்யாத்துரை



திருமலை நகரசபை குத்தகை விடயத்தில் தலையீட்டைக் கண்டித்து கூட்டான கட்சியும், ஏனைய தமிழ்க் கட்சிகளும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியவையாம். எந்த ஜனாதிபதிக்கு கடிதம் போட்டவை எண்டுதான் தெரியேல்லை. இலங்கை ஜனாதிபதி அயல்நாட்டில் அல்லோ இருந்தவர்! இங்கு யாருக்கு கடிதம் போட்டவை எண்டுதான் தெரியேல்லை. கடிதம் போட்டாச்சு எண்டு பத்திரிகைகளில் செய்தி வந்தால் போதும் தானே? இனிமேல் தமிழ்க்கட்சிகள் தங்கள் கடிதங்களில் இப்படித்தான் முகவரி போடவேணும்:

மே/பா. பத்திரிகை ஆசிரியர்.
ஜனாதிபதி
பத்திரிகைக் காரியாலயம். கொழும்பு.

அயல்நாட்டு வெளிவிவகாரத்துக்குப் பொறுப்பானவர் திட்டவட்டமாகச் சொல்லிப் போட்டாராம். "தற்போதைக்கு தலையைப் போடும் உத்தேசமே எங்களுக்கு கிடையாது!" சமீபத்தில் அவரைச் சந்தித்த அதிகாரமுள்ளவரிட்டும் 'எங்களுக்குப் பாதிப்பு இல்லாமல் உங்கள் பணி தொடரட்டும்' எண்டு பச்சைக் கொடி காட்டிப்போட்டினமாம்.

ரெண்டு எழுத்தார் மீனவர்களை விடுதலை செய்தவுடன் சிலர் மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டவை. ரெண்டு எழுத்தார் 'சிக்னல்' காட்டுகினம் எண்டும் ஒரு செய்தி பரவியது. இப்படியான சுவாரசியமான கதைகளைக் கேட்பதற்காகவே ரெண்டு எழுத்தார் அடிக்கடி மீனவர்களைப் பிடித்துப்போட்டு விடுதலை செய்துகொண்டிருக்கப் போகினம்.

அய்யப்ப பக்தர்களுக்கு விசா கொடுப்பதிலும் அயலகத்தூதரகம் விவேகமாகத்தான் செயற்பட்டதாம். குருசாமியர்கள் சிபாரிசு செய்தவர்களுக்குத்தான் விசா கிடைத்ததாம். ரெண்டு எழுத்தார் மாலை போட்டுக் கொண்டும் செல்லக்கூடும் என்பதால் புத்தியாகத்தான் 'விசா' குத்தியிருக்கினம்.

எந்தெந்த விஷயங்களில் கிண்டலடிப்பது எண்டு ஒரு விவஸ்தையே இல்லாமல் போச்சு. சிங்கள மக்களின் உரிமையைக் காக்க ஒரு இயக்கம் துவங்கப்பட்டிருக்குதாம். திருவிழாவில் உண்மையான பக்தர்களும் அரோகராக் கோஷம் போடுவினம். பக்தர்களைவிட உரத்த சத்தத்தில் திருடர்களும் அரோகராக் கோஷம் போடுவினம். திருடிக்கொண்டு தப்பி ஓடவசதியாகவும், பறிகொடுத்தவையின் அவலக்குரல் அடுத்தவா காதில் விழாமல் இருக்கவும்தான் திருடர்கள் அரோகரா கோஷம் போடுகிறவை. இப்ப புரியுதோ சமாச்சாரம்? அது கிடக்க, முன்னாள் சபாநாயகரும் அவைக்கு ஆதரவாகக் கைகொடுக்கப்போகிறாராம். அடி சக்கை- அப்படியென்றால் பச்சைக் கட்சியினர்தான் இதுக்கெல்லாம் உசுப்பேத்திவிடுகினமோ? எங்கப்பன் குதிருக்குள் இல்லையெண்ட கதைதானாக்கும்!

கடந்தவருட இறுதியில் ஆசிரியர் வேலை நிறுத்த விடயத்தில் கடைசி நேரத்தில் தமிழ் ஆசிரியர்கள் பரீட்சை மேற்பார்வைக்குச் சென்றவையல்லோ? ரெண்டு எழுத்தார்தான் கண்டிப்பான உத்தரவு போட்டவையாம். "பிள்ளைகளின் படிப்பை வீணாக்க வேண்டாம். சனம் சீவிக்க முடியாமல் இருக்கு. உங்களுக்கு படிப்போடு விளையாட்டோ" எண்டு கேட்டவையாம். சொல்ல வேண்டியவர்கள் சொன்னால்தான் கேட்க வேண்டியவை கேட்கினம். எல்லாம் ஒரு மரியாதைதான்.

வெல்லாவெளி முகாம்மீது ரெண்டு எழுத்தார் தாக்குதல் நடத்திவிட்டுப் போய்விட்டினம். எல்லாம் நடந்து முடிந்த மறுநாள் இரவு ஒரு தொலைக்காட்சியில் இப்படி ஒரு செய்தி "வெல்லாவெளி முகாம் தொடர்ந்து தாக்கப்படுகிறது. உதவிக்கு விரைந்த இராணுவத்தினர் செல்ல முடியவில்லை." இப்பவெல்லாம் சில செய்தியாளர்கள் கனவு கண்டுபோட்டெல்லாம் ரீல் சுத்துகினமாக்கும். ஆனாலும் பாருங்கோ, அதுக்காக, குறிப்பிட்ட தொலைக்காட்சி நிறுவன அலுவலகத்தை வெள்ளைவானில் சென்று ரவுண்டப் பண்ணியது முறையாகத் தெரியேல்லை.

வடக்கு-கிழக்கு முன்னாள் முதல்வரை கிண்டலடிக்க வேண்டுமென்றால், அதுக்காக இப்படியோ செய்யிறது? அவரை அதிகாரமுள்ளவர் சந்திக்கப்போவதாகச் செய்தி வரச் செய்துவிட்டு, "சேச்சே அவரையெல்லாம் சந்திக்கமாட்டோம்" எண்ட அதிகாரத்தரப்பாரின் மறுப்பையும் வெளியிட்டு... ச்சோ இப்படி ஏன் அந்த மனுசனை அவமானப் படுத்தவேணும்?!

சமுர்த்தி விஷயத்தில் கிழக்கின் நீலக்கட்சியினர் கேட்ட தொகையில் கோட்டா கொடுக்க முடியாது எண்டு உறுதியாகச் சொல்லிவிட்டாராம் கிழக்கின் தனித்துவத் தலைவர். அப்படிக் கொடுப்பதாக இருந்தால் ராஜினாமா செய்யவேண்டி வரும் எண்டும் ஒரு போடு போட்டாராம். நீலக்கட்சி தரப்பினர் கப்சிப்.

மாவீரன் அலெக்ஸாண்டர் சொன்ன அனுபவ மொழி. (நம்மூர் நரசிம்மராவ்களின் கவனத்திற்கு)

"உங்களுக்கு
பேசுவதற்கும்-சிரிப்பதற்கும்
நேரமில்லை என்றால்
நீங்கள் கட்டாயம்
தவறாக
வாழ்ந்து வருகிறீர்கள்!"



படிப்பகம்

www.padippakam.com

# பிரசார சாதனங்கள் மீது தாக்குதல்

**110**

**அரசியல் தொடர்**
*அற்புதன்* — எழுதுவது

## இந்தியத் தலையீடு

**அ**ன்புள்ள வாசகர்களே! இத் தொடரில் இந்தியாவின் தலையீடு தொடர்புடைய விடயங்கள் இடம்பெற ஆரம்பித்துள்ள நிலையில், தற்போது (97 ஜனவரி) மீண்டும் இந்தியத்தலையீடு ஏற்படுமா, ஏற்படாதா என்ற கேள்விகள் நாட்டில் எழுந்துள்ளன.

இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் இந்தியாவின் கடந்தகாலத் தலையீடுகளுக்கான காரணிகள் எவையென்று அறிந்துகொண்டால் நாம் தவறான தகவல்களால் வழிநடத்தப்படமாட்டோம்; நம்பி ஏமாறவும் மாட்டோம்.

**"வரலாறு என்பது ஒரு ஆசான் மாதிரி. கற்றும் கொள்கிறது. கற்றும் தருகிறது"** என்று மாஓ சேதுங் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியாவில் மூன்று விதமான நிலைப்பாடுகள் உள்ளன. அவற்றை இங்கே வகைப்படுத்துவோம்:

**1. தமிழக மக்களின் அனுதாபம்.**

**இது மொழிரீதியான, கலாசாரரீதியான உறவுகளால், தொடர்புகளால் உணர்வுரீதியாக ஏற்படுவது.**

**2. தமிழக கட்சிகளின் ஆதரவுக்குரல்.**

**தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டும், தமது தமிழ் உணர்வை வெளிப்படுத்தி தமிழக மக்களிடம் அரசியல் ஆதரவைப் பெறவும் சில முக்கிய கட்சிகள் முன்னின்று செயற்பட்டன.**

**3. இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு.**

உள்நாட்டு அரசியல் காரணிகளும், வெளிநாட்டு அரசியல் காரணிகளும்தான் இலங்கை விவகாரத்தில் மத்திய அரசின் கொள்கையைத் தீர்மானித்தன.

எந்தவொரு நாடும் பிறநாட்டின் உள்விவகாரத்தில் தலையிடும்போது அதன்பின்னணியில் அந்தநாட்டில் பதவியில் இருக்கும் கட்சியின் உள்நாட்டு அரசியல் தேவைகளோ அல்லது அந்த நாட்டின் நலன் சம்பந்தப்பட்ட விடயமோ இருந்தே தீரும்.

இந்தியா இலங்கைத்தமிழர் பிரச்சனையில் தனது எந்த நலனும் இல்லாமல் தலையிட்டது என்று கருதுவோமானால் நாம் வரலாற்றுக் குருடர்களாகவே இருப்போம்.

**இந்திய மக்களின்- குறிப்பாக தமிழக மக்களின்- ஆதரவுக்குரல் என்பது பிரதிபலனை எதிர்பார்த்த ஒன்றாக அமையவில்லை. அது உணர்வுரீதியானது. அப்பழுக்கற்றது.**

ஆனால் மக்களின் உணர்வுகளுக்கும், அரசுகள் மற்றும் அரசியல் கட்சிகளின் குரல்களுக்கும் இடையே வேறுபாடு இருந்தே வருகிறது.

நாட்டு நலன், கட்சிகளின் நலன் என்பவற்றை முன்னிறுத்தியே அரசுகளும், கட்சிகளும் கொள்கை முடிவுகளை மேற்கொள்கின்றன. அந்த நலன்களுக்கு ஏற்ப மக்களின் உணர்வுகளையும் கொந்தளிப்புக்களையும் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றன.

இந்திய- இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்ட காலகட்ட நிகழ்வுகளை நினைவுபடுத்திப் பாருங்கள்.

இலங்கை அரசு இந்திய அரசின் கருத்துக்களை செவியில் போட்டுக் கொள்ளவில்லை. அதனால் போராளி இயக்கங்களுக்கு இந்தியா பயிற்சி கொடுத்து அனுப்பியது.

கொழும்பில் குண்டுவெடிப்புக்கள் நடத்துவதற்கு ஈரோஸ் இயக்கத்தையும், புலிகள் அமைப்பையும் இந்திய உளவு நிறுவனங்கள் தூண்டிவிட்டன.

போராளிகள் கொடுக்கிற அடியில் ஜே.ஆர். தம்மிடம் ஓடிவரவேண்டும்; இந்தியா தவிர்ந்த வேறுயாருடன் கூட்டுச் சேர்ந்தும் பயனில்லை என்பதை ஜே.ஆர். உணர்ந்துகொள்ள வேண்டும் என்று கச்சிதமாகக் காரியம் பார்த்தது இந்தியா.

## இந்திய நலன்

ஆயிரக்கணக்கான இன்னுயிர்களை காவு கொடுத்து தமிழர் தம் அரசியல் கௌரவத்தை நிலைநிறுத்தின- போராளி இயக்கங்கள்.

ஆனால் அவற்றின் கருத்து அறியாமலேயே ஒப்பந்தப் பத்திரத்தை தயாரித்தது இந்திய அரசு.

அந்த ஒப்பந்தத்தில் வடக்கு--கிழக்கு இணைப்புக் கேள்விக்குறியானது. ஆனால் இந்தியாவின் நலன் சார்ந்த சில விடயங்கள் திட்டவட்டமாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டிருந்தன.

அந்த விடயங்கள் பின்வருமாறு:

**1. இந்திய- இலங்கை உறவுகளைப் பாதிப்படையச் செய்ய ஏதுவாக பிறநாட்டு இராணுவ மற்றும் உளவாளிகளை இலங்கையில் பணிபுரிய அனுமதிக்கலாகாது.**

**2. இந்தியாவின் நலன்களைப் பாதிக்கும் வகையில் திருமலை அல்லது ஏனைய துறைமுகங்களை வேற்றுநாட்டு இராணுவப் பாவனைகளுக்கு இலங்கை அனுமதிக்கலாகாது.**

**3. திருமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியா-இலங்கை இணைந்து திருத்தவும், பயன்படுத்தவும் வகை செய்தல்.**

**4. இலங்கையில் பிறநாட்டு ஒலிபரப்புச் சேவைகள் இடம்பெற அனுமதித்தால், அவை பொதுவான நிகழ்ச்சிகளை மட்டுமே ஒலிபரப்ப அனுமதிக்கவேண்டும். இராணுவ மற்றும் உளவு பார்க்கும் நடவடிக்கைகளோடு அமைதலாகாது.**

இந்த விடயங்களில் ஜே-ஆரிடம் வாய்மூல உறுதியை மட்டும் வாங்காமல், ஒப்பந்த ஷரத்துக்களாக குறிப்பிட்டு கையொப்பம் பெறப்பட்டது.

வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் மட்டும் ஜே.ஆர்.கூறிய சில வாய்மூல உறுதிமொழிகளை இந்தியப் பிரதமர் ராஜீவ் நம்பிவிட்டார்.

இந்தியாவோடு ஜே.ஆர். உடன்பட்டுப் போகத் தொடங்கியதும், இந்திய அரசும், பிரதமர் ராஜீவ் காந்தியும் ஜே.ஆரின் நட்புக்குத்தான் முன்னுரிமை கொடுத்ததுபோலத் தோன்றியது.

இடைக்கால நிர்வாக விடயத்தில் ஜே.ஆர். கையாண்ட சூழ்ச்சித் திட்டங்கள் பற்றிக்கூட இந்திய மத்திய அரசு கூர்ந்து நோக்கவில்லை.

ஜே.ஆரை திருப்திப்படுத்த- புலிகளுக்கு ஒரு பாடம் கற்பிக்கவே- இந்திய அரசு திட்டங்களைத் தீட்டியது.

நாம் கொஞ்சம் முன்னால் சென்றுவிட்டு மீண்டும் திரும்பிவரலாம்.

## திக்ஷித்தின் உரை

1989ம் ஆண்டு மார்ச் மாதம் !0ம் திகதி புது'டில்லியில் உள்ள ஐக்கிய சேவைகள் நிறுவனம் ஒரு கருத்தரங்கு நடத்தியது.

அக் கருத்தரங்கில் 'இலங்கையில் இந்திய அமைதிப்படை' என்ற பொருளில் இந்தியத் தூதர் திக்ஷித் உரையாற்றினார்.

இலங்கைக்கு இந்தியப் படை சென்றது ஏன்? என்று திக்ஷித் பின்வருமாறு விளக்கமளித்தார்:

"எமது ஒற்றுமையைப் பாதுகாக்க, எமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்ட வித்தியாசமான ஆய்வின் வெற்றியினை நிலை நிறுத்தவே நாம் இலங்கை சென்றோம்.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் உயிர் வாழ்வைப்பொறுத்து சில நிர்ப்பந்தங்களுக்கு உள்ளானார்கள். இது எமது அரசியலைப் பாதிக்கக்கூடிய விடயமாகும்.

இந்தியக் குடியரசில் முதன்முதலில் பிரிவினைக்குரல்- தமிழ்நாட்டில்- அறுபதாம் ஆண்டுகளிலேயே தலை காட்டியதை நாம் மறக்கமுடியாது.

இலங்கைத் தமிழ் போராளிகள் 1972 முதல் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடத் தலைப்பட்டனர். இதனை முறியடிக்க முடியாத நிலையில் சிறீலங்கா அரசு தடுமாறியது.

சிங்களவர்களால் நிர்வகிக்கப்படும் கொழும்பில் உள்ள மத்திய அரசால் தமிழ் போராட்டக் குழுக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனாலும் இந்தியாவின் உதவியை இலங்கை நாடவில்லை.

இதற்குக் காரணம், இந்தியாவில் 5 கோடி தமிழர்கள் வாழ்ந்தமையால் அவர்களுடைய கருத்துக்களை இந்திய அரசு புறக்கணிக்க முடியாமல் இருக்கிறது என்பதை இலங்கை அரசு புரிந்துகொண்டமையால் ஆகும்.

ஆகவே, இலங்கை அரசாங்கம், தமிழ் இயக்கங்களைக் கட்டுப்படுத்தவும், வன்முறையை ஒழிக்கவும் பிறநாடுகளின் ஒத்துழைப்பை நாடவேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டது. இது தொடருமானால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக முடியும்.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் சம்பிரதாயமற்ற முறையிலும், அந்தரங்கமாகவும் அந்நாட்டுப் போர்க்கப்பல்களை கொழும்பு, திருமலை மற்றும் காலி துறைமுகங்களுக்குத் தருவிக்கவும் இலங்கை அரசு ஏற்பாடுகளைச் செய்தது.

உளவு மற்றும் புலனாய்வுகளுக்கு உதவ பிரிட்டனின் கூலிப்படை, இஸ்ரேலிய மொசாட், ஷின்பெத் ஆகியவற்றின் உதவி பெறப்பட்டது. கடற்படையினருக்குப் பாகிஸ்தான் உதவி பெறப்பட்டது....

எமது நாட்டுடன் உறவு இல்லாத பல நாடுகளிடம் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவும் இலங்கை நடவடிக்கை எடுத்தது.

**இத்தகைய- எமது நாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய- காரணிகளை முறியடிக்க வேண்டிய நிலை இருந்தமையால் நாம் தீவிரமாகத் தலையிடவேண்டி ஏற்பட்டது.**

இலங்கை 15 ஆயிரம் மைல்களுக்கு அப்பாலோ, ஃபிஜித் தீவுகள் இருக்கும் தூரத்திற்கு அப்பாலோ இருந்தால் பரவாயில்லை. இலங்கை எமது நாட்டில் இருந்து 18 மைல் தூரத்தில்தான் இருக்கிறது..."

அதுதான் திக்ஷித் மிகத் தெளிவாக இந்தியத் தலையீட்டுக்குக் கூறிய விளக்கம்.

## ஊரடங்கு உத்தரவு

இத்தோடு நிறுத்திக்கொண்டு, நாம் மீண்டும் 1987ம் ஆண்டு நிகழ்வுகளுக்குத் திரும்பிச் செல்லுவோம்.

அக்டோபர் 10-1987

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

யாழ் பல்கலைக்கழகத்திற்கு பின்புறமாக மேற்குப்பகுதியில் அமைந்துள்ள பிரம்படியில் பிரபாகரன் தங்கியிருந்த முகாம் இருந்தது.

அக்டோபர் 9ம் திகதி நடைபெற்ற சில சம்பவங்களும், அக்டோபர் 10ம் திகதி ஊரடங்கு அறிவிக்கப்பட்டதும் இந்தியப் படையினர் தமக்கெதிராக நடவடிக்கையில் இறங்கப் போகிறார்கள் என்று பிரபாகரனை ஊகிக்கச் செய்துவிட்டன.

அக்டோபர் 10ம் திகதி காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்த பத்திரிகைக் காரியாலயங்களை இந்தியப் படையினர் முற்றுகையிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழநாடு, 'ஈழமுரசு', 'முரசொலி', 'உதயன்' ஆகிய பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருந்தன.

'ஈழமுரசு' பத்திரிகை புலிகளால் நடத்தப்பட்டது. 'ஈழமுரசு'பத்திரிகையை ஆரம்பித்தவர் அமிர்தலிங்கம்; ஐ.தே.கட்சியின் ஆதரவாளராக இருந்தவர்.

அமிர்தலிங்கத்தை கடத்திச் சென்ற புலிகள் இயக்கத்தினர் அவருக்கு மரண தண்டனை விதித்தனர். ஈழமுரசையும் கைப்பற்றினார்கள்.

'முரசொலி' பத்திரிகை ஆசிரியராக இருந்தவர் திருச்செல்வம். நல்லூர் எம்.பியாக இருந்த அருளம்பலத்தின் விசுவாசி. இயக்கங்களுக்குப் பயந்து கொழும்புக்குத் தப்பியோடினார். பின்னர் இயக்கங்களுடன் பேசி சமரசம் செய்து கொண்டு யாழ்ப்பாணம் வந்தார்.

'ஈழமுரசு' பத்திரிகையில் ஆசிரியராக இருந்த திருச்செல்வம் பின்னர் அமிர்தலிங்கத்துடன் பிரச்சனைப்பட்டுக்கொண்டு வெளியேறினார். 'முரசொலி' ஆசிரியரானார்.

'ஈழமுரசு' அதிபர் அமிர்தலிங்கம் தொடர்பான பல தகவல்களை புலிகளுக்கு வழங்கியவர் திருச்செல்வம்தான். ஏனைய இயக்கங்களை புலிகள் தடை செய்த பின்னர் 'முரசொலி' புலிகளுக்கு ஆதரவான பத்திரிகையாக மாறியது.

இந்திய அமைதிப்படை காலத்தில் திருச்செல்வத்தின் மகனை ஈ.பி.ஆர்.எல்.எஃப். சுட்டுக்கொன்றது. திருச்செல்வத்தை தேடிப் போனவர்கள் அவர் இல்லையென்றதும் மகனைச் சுட்டுக் கொன்றுவிட்டு திரும்பினார்கள். மகனது பெயர்: பிரபாகரன்.

## பிரசார சாதனங்கள் குறி

ஈழமுரசு, முரசொலி இரண்டையும் தடை செய்துவிட்டால் புலிகளின் செய்திகள் வெளிவராது என்பது மட்டும் இந்தியப் படை அதிகாரிகளின் நோக்கமல்ல.

யாழ் நகரைக் கைப்பற்ற வேண்டுமானால் பலத்த பதிலடியை புலிகளிடம் இருந்து எதிர்பார்க்க வேண்டும் என்பது அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தது.

வீடுகளும், கட்டிடங்களும் நெருக்கமாக அமைந்துள்ள பகுதி யாழ் நகர். அந்த மறைவுகளுக்குள் இருந்து புலிகள் தாக்குவார்கள்.

எனவே மோதலில் பொதுமக்களின் உயிரிழப்புக்களும் பெருமளவில் ஏற்பட்டே தீரும். அச் செய்திகள் வெளியாவது இந்தியாவுக்கு நல்லதல்ல. மேலும் பொதுமக்களிடமும் வெறுப்பை ஏற்படுத்தும்.

உயிரிழப்புக்கள் தவிர்க்கமுடியாமல் ஏற்படப்போகும் போர்க்கள நிலவரத்தை உத்தேசித்து புலிகளின் பிரசார சாதனங்களின் வாயை மூடுவதற்கு திட்டமிட்டனர் இந்தியப் படை அதிகாரிகள்.

'ஈழமுரசு', 'முரசொலி' காரியாலயங்களுக்குள் புகுந்த இந்தியப் படையினர் அங்குள்ள அச்சுயந்திரங்களையும், தளபாடங்களையும் தகர்த்தனர். அந்த அலுவலகங்களில் பணியாற்றிய ஊழியர்கள் சிலரையும் கைதுசெய்தனர்.

புலிகள் அமைப்பினரின் 'நிதர்சனம்' தொலைக்காட்சி நிறுவனமும் தகர்க்கப்பட்டது.

பத்திரிகைக் காரியாலயங்கள் மற்றும் நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனம் ஆகியவை தாக்கப்பட்ட செய்தி அறிந்ததும் பிரபாகரன் தனது முக்கிய தளபதிகளைச் சந்தித்தார்.

பிரம்படியில் உள்ள பிரபாகரனின் முகாமில் அவசரக்கூட்டம் நடைபெற்றது.

"இந்தியப் படை போரை ஆரம்பித்து விட்டது. நாமும் திருப்பித் தாக்க வேண்டியதுதான்!" என்று உத்தரவிட்டார் பிரபாகரன்.

## "நாமும் தயார்"

பலாலியில் இருந்த இந்தியப் படை தலைமையகத்தில் மேஜர் பெரியசாமி என்னும் அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் தமிழ்நாட்டுக்காரர்.

இந்தியப் படைக்கும், புலிகளுக்கும் இடையேயான தொடர்புகளுக்கு அவர்தான் பாலமாக இருந்தார்.

அக்டோபர் 10ம்திகதி தொலைத் தொடர்பு சாதனம் மூலம் புலிகளுடன் தொடர்புகொண்டார் மேஜர் பெரியசாமி.



பிரபா

மேஜர் பெரியசாமி தொடர்புகொள்வதாகத் தெரிந்ததும் பிரபாகரன் வோக்கியை வாங்கிக்கொண்டார்.

"மேஜர் பெரியசாமி நான்தான் பிரபாகரன் பேசுகிறேன்," என்றதும், ஆச்சரியத்துடன், "யாரு பிரபாகரனா? வணக்கம் சார்!" என்றார் பெரியசாமி. தொடர்ந்து ஏதோ சொல்ல முற்பட்ட பெரியசாமியை இடைமறித்து பிரபாகரன் கூறினார்:

**"நீங்கள் தேவையற்ற முறையில் போரை ஆரம்பித்துள்ளீர்கள். நாங்களும் போருக்குத் தயார் என்று உங்கள் தளபதிகளிடம் சொல்லுங்கள். இனிப் போர்க்களத்தில் சந்திப்போம்!"** என்று சொல்லிவிட்டு வோக்கியை நிறுத்திவிட்டார் பிரபாகரன்.

இலங்கை, இந்திய வரலாற்றிலும், இலங்கைத் தமிழர் வரலாற்றிலும் மறக்க முடியாத போருக்கு இருதரப்பும் தயாராகின.

இந்தியப் படையினர் முந்திக் கொள்வதற்கு இடையில் புலிகள் தாக்குதலைத் தொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டார் பிரபாகரன்.

இந்தியத் துருப்புக்கள் முன்னேறி வராமல் தாக்குதலை நடத்துமாறு யாழ்ப்பாணத்தில் காவல் அரண்களில் இருந்த புலிகளுக்கு உத்தரவுகள் பறந்தன.

அப்போது யாழ் மாவட்ட புலிகளின் இராணுவப் பிரிவு பொட்டம்மானின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது.

## திபீந்தர் வகுத்த திட்டம்

அக்டோபர் 10ம் திகதி பகல் யாழ் நகரில் வெடியோசைகள் கேட்கத் தொடங்கின.

இதேநேரம் இந்திய அமைதிப்படை தளபதி திபீந்தர் சிங் தனது அதிகாரிகளுக்கு முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

**நான்கு நாட்களில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டும்.**

**பிரபாகரன் தங்கியிருந்த பிரம்படி முகாமையும், யாழ் பல்கலைக்கழகத்தின் அருகில் உள்ள புலிகளின் தலைமையகத்தையும் பரா கொமாண்டோப் பிரிவும், காலாட்படைப் பிரிவும் தாக்குவது. தாக்குதல் ஆரம்பித்து 24 மணி நேரத்திற்குள் அவற்றுக்கு உதவியாக காலாட்படைப் பிரிவுகள் அங்கு செல்ல வேண்டும்.**

பிரம்படி முற்றுகைக்கு தான் வகுத்த திட்டம் எத்தனைபெரிய விபரீதத்தில் சென்று முடியப்போகிறது என்பது அப்போது திபீந்தர் சிங்குக்கும் தெரியாது: அதற்காக் ஹெலிக்கொப்டரில் புறப்பட்ட பரா கொமாண்டோக்களுக்கும் தெரியாது.

பிரம்படியில் விரிந்தது போர்க்களம். உலகின் மிகப்பெரும் இராணுவங்களில் ஒன்று உலகின் மிகச் சிறந்த கெரில்லா இயக்கமொன்றை அங்கு எதிர்கொண்டது.

விளைவு? (தொடர்ந்து வரும்)

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## உறவுப் படலம் முடிந்தது விரிந்தது போர்க்களம்!



இந்தியப்படையை வரவேற்கிறார் மாத்தையா.
கைகுலுக்கி நின்றவர்கள் பின்னர் களத்தில் சந்தித்தார்கள்.







படிப்பகம்

www.padippakam.com

# ஜனாதிபதியின் இராஜஸ்தான் விஜயம்

# புதிய சிந்தனைக்கு வழி பிறக்குமா?

அலசுவது– இராஜசுந்திரி

**கோ**ட்டைகளும், கொத்தளங்களும், ஒட்டகங்களும் நிறையவே காணப்படும் இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனிப்பட்ட விஜயமொன்றை கடந்தவாரம் மேற்கொண்டிருந்தார்.

இலங்கையின் அரசியல், இராணுவ அழுத்தங்களிலிருந்தும் விடுபட்டு ஒரிரு நாட்களையாவது சந்தோஷமாகக் கழித்துவிடவேண்டுமென்ற நோக்கத்திலேயே இராஜஸ்தானுக்கு சந்திரிகா தனது இரு பிள்ளைகளுடன் சென்றிருந்தார்.

இலங்கையில் திரும்புமிடமெல்லாம் மனப்பிரமையைத் தரும் தன்மைகளே காணப்படுகின்றன. தினந்தோறும் வெளியாகும் செய்திகள்கூட அவலமானவையாகவே இருக்கின்றன. இத்தகைய நிலையில் இலங்கையில் ஆற அமரக் கூட முடியாத சூழ்நிலைகளே நிலவுகின்றன.

**இலங்கை மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையில் அனுபவிக்கும் அழுத்தங்கள், அவஸ்த்தைகள் மிகவும் பாரதூரமானவை. காலையில் எழுந்து வீட்டைவிட்டுப் புறப்பட்டால் மாலை வீடுதிரும்பும்வரை மடியில் நெருப்பைக்கட்டியது போலவே நடமாடவேண்டியுள்ளது.**

ஜனாதிபதி என்ற நிலையில் இருக்கும் போது எப்போதுமே மெய்ப்பாதுகாவலர்கள், ஆலோசகர்கள் என்று ஒரு குழாமே சூழ்ந்திருக்கும் தன்மை காணப்படுகின்றது. எனவே இவற்றையெல்லாம் ஒரிரு தினங்களாவது ஒரந்தள்ளிவைத்துவிட்டு-இலங்கையையே சிலதினங்கள் மறந்துவிட்டு இருந்துவிடலாம் என்ற எண்ணத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவின் பாலைவன மாநிலமான இராஜஸ்தானுக்குப் போயிருந்தார்.

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய துறைகளில் உல்லாசப் பயணத்துறையும் ஒன்றாகும். இலங்கைக்கு உல்லாசப் பயணிகளை பெருமளவில் வரச்செய்யும் பிரசாரங்கள் வெளிநாடுகளில் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் கடல் பிரதேசங்கள், மலைப் பிரதேசங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் எனத்தெரிவித்து விடுமுறை மையங்கள் பிரபலப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் இந்த அழகிய இடங்களிலெல்லாம் அமைதியாக பயணஞ்செய்ய முடியாதென்பதையே இலங்கையில் நிலவும் பாதுகாப்புக் கெடுபிடிகள் புலப்படுத்துகின்றன.

குண்டு வெடிப்புகள் மற்றும் துப்பாக்கிக் கலாசாரத்தின் பிரதிபலிப்புக்கள் என்பன இலங்கையில் ஆழமாகவே புரையோடிப்போயுள்ளன.

ஒருவரோடு மற்றொருவர் மனம்விட்டுப் பேசுவதோ அல்லது சந்தேகங்கள், சலனங்களின்றிப் பழகுவதோ இலங்கையைப் பொறுத்தவரை முடியாத காரியமாகவே இருக்கின்றது. 'எந்தப் புற்றில் எந்தப்பாம்பு இருக்கின்றதோ' என்ற மனநிலையிலேயே இலங்கையர்களின் நாளாந்த வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கின்றது.

எனவே இலங்கையின் அரசியல் ரீதியிலான அழுத்தங்கள் ஜனாதிபதியை மட்டுமல்ல நாட்டுமக்கள் அனைவரையுமே வெகுவாகப் பாதித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

1994ம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகா இரு வருடங்களை ஆட்சிக் கட்டிலில் பூர்த்தி செய்துள்ளார்.

**இந்த இரு வருடங்களிலும் நாட்டில் அமைதி, சமாதானம், அபிவிருத்தி தொடர்பாக மக்கள் நிறையவே எதிர்பார்த்தார்கள். ஆனால் அந்த எதிர்பார்ப்புக்களுக்கு, எதிர்மாறான நடவடிக்கைகளே நாட்டில் இடம்பெற்று வருகின்றன.**

இலங்கையின் இன்றைய அடிப்படைப் பிரச்சினையாக வடக்கு-கிழக்கு விவகாரமே விளங்குகின்றது. வெறுமனே இராணுவமேலாதிக்கத்தை மட்டும் கொண்டிருப்பதன் மூலம் வடக்கு-கிழக்கு விவகாரத்தைச் சுமுகமாக கையாண்டுவிட முடியாது என்பதற்கு வடக்கிலும், கிழக்கிலும் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தாக்குதல்கள் நல்ல உதாரணங்களாக இருக்கின்றன.

**அரசாங்கத்தைப் பொறுத்தவரை எல்.ரி.ரி.ஈ.யினரது கோட்டையாக இருந்த யாழ்ப்பாணக் குடா நாட்டைக் கைப்பற்றியமை ஒரு வெற்றியாக இருக்கலாம். ஆனால் அவ் வெற்றி எவ்விதத்திலும் ஒரு நிரந்தரத்தீர்வுக்கு வழியமைக்கப் போவதில்லை என்பதையே வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் உணர்த்துகின்றன.**

புதிய ஆண்டான 1997ம் ஆண்டில் அரசியல்ரீதியாக புதிய திருப்பங்களைக் காணலாம் என்று ஜனாதிபதி சந்திரிகாவின் சிரேஷ்ட அமைச்சர்கள் குறிப்பிட்டு வருகின்றனர்.

அரசியலமைப்பு, நீதி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,




சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல் தீர்வுப் பொதியை வெற்றிகரமாகக் கொண்டுவரவேண்டுமென்பதில் தீவிரமாக இயங்கி வருகின்றனர்.

அரசியல் தீர்வுப்பொதி குறித்து அனைத்து மட்டங்களிலும் அவர் கருத்தரங்குகள், விரிவுரைகள் என்பவற்றை நாடளாவிய ரீதியில் நடத்திவருகின்றார்.

தீர்வுத் திட்டமொன்றைத் திடீரென அறிவித்து நாட்டுமக்கள் அதுபற்றி எதுவுமே அறியாமல் இருக்கும் சூழ்நிலைகளை உருவாக்காமல் தீர்வுப் பொதியின் உள்ளாம்சங்களை அமைச்சர் பீரிஸ் அனைத்து மட்டங்களிலும் தெளிவுபடுத்தி வருகின்றார்.

**கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், தீர்வுத்திட்டங்கள் தோல்வியில் முடிந்தமைக்கு, அவைபற்றி மக்கள் மத்தியில் போதியளவு அறிவு இல்லாதிருந்ததும் ஒரு முக்கிய காரணமாக விளங்கியிருந்தது.**

பெரும்பான்மை இனத்தவரான சிங்கள மக்கள் தமிழ் மக்கள் குறித்துச் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்கள் தமக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விடுமோ என்ற பீதியைக் கொண்டிருந்தனர்.

இப்பீதியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் லாபம் தேடிய காலஞ்சென்ற ஜே.ஆர். ஜயவர்த்தனா போன்ற 'நரிக்குணம்' படைத்தோரும் இருக்கவே செய்தனர்.

**பேரினவாதப் பேர்வழிகள் அப்பாவி மக்களின் சந்தேகங்கள், அச்சங்களையே தமக்கு ஏதுவாகப்பயன்படுத்தி அமைதியாகப் போகவேண்டிய அரசியல் நீரோடையை சாக்கடையாக மாற்றிவிட்டிருந்தனர்.**

எதிர்காலத்திலும் மக்களிடையே அநாவசியமான சந்தேகங்கள், பீதிகள் இருக்கக்கூடாது என்ற காரணத்தினாலேயே பேராசிரியர் பீரிஸ் தீர்வுப் பொதிபற்றி தீவிர பிரசாரத்தில் இறங்கியிருப்பதைக் காணமுடிகின்றது.

ஆயினும் இப் பகீரதப் பிரயத்தனத்தில் பேராசிரியர் பீரிஸும், அவர் சார்ந்துள்ள சந்திரிகா அரசாங்கமும் வெற்றிபெறுமா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தீர்வுப்பொதி பற்றி திட்டவட்டமாக எதனையும் கூறவில்லை.

இதற்குமேலாக தீர்வுப் பொதியில்கூட தமிழ் அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கப்படவேண்டிய விடயங்கள் நிறையவே இருக்கின்றன.

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான பேச்சுக்கள் எல்லாவற்றையும் விட மிகவும் இன்றியமையாதனவாக உள்ளன.**

சமாதானப்பேச்சுக்களின் இறுதி வடிவம் எல்.ரி.ரி.ஈ.யுடனான பேச்சுக்களிலேயே தங்கியுள்ளது என்பதை அனைத்து அரசியல் தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**தமது பதவிக்காலத்தில் எல்.ரி.ரி.ஈ. அமைப்புடன் முகங்கொடுத்துப் பேசவிரும்பாத எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்ககூட தற்போது எல்.ரி.ரி.ஈ.அமைப்புடன் நேரடிப் பேச்சுக்களை நடத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.**

எனவே புதிய ஆண்டான 1997ல் புதிய சிந்தனைகள் தோன்றவேண்டியிருக்கின்றது.

தாறுமாறான அரசியல் சூழ்நிலைகளே கடந்த இரு ஆண்டுகளிலும் சந்திரிகா ஆட்சியில் நிலவியிருந்தன.

வெளிநாடுகளில் அரசியல்தீர்வு, அபிவிருத்தி என்பவை பற்றியும், உள்நாட்டில் இராணுவ முஸ்தீபுகள் என்றும் ஆட்சியாளர்கள் பிரஸ்தாபித்து வருகின்றனர்.

எனவே நிலையான, நிரந்தரமான இறுதியும், முடிவுமான அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டியது அவசியமானதாகின்றது.

அந்தகார வாழ்க்கையில் துவண்டுபோயிருக்கும் வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்க்கையில் ஒளிவீச வேண்டியது அவசியமானதாகின்றது.

உரிமைகளுக்காக குரல் கொடுத்த வடக்கு-கிழக்கு மக்கள் இன்று கௌரவமான வாழ்க்கைக்காக ஏங்கித்தவித்தவர்களாகவும், பெரும் ஜீவமரணப் போராட்டத்தையே எதிர்நோக்கியவர்களாகவும் இருக்கின்றனர்.

இந்நிலையில் புதிய ஆண்டில் புத்தம் புதிய சிந்தனைகளுக்குக் களம் அமைத்து அரசியலில் நிலவும் அழுக்குகளை அகற்றவேண்டியதே அவசியமானதாகின்றது.

---

# குப்பைகூட்டும் அதிகாரமும் மிஞ்சாது!

**தி**ருக்கோணமலை நகரசபை வழங்கிய மத்திய சந்தைக் குத்தகையை திருமலை இராணுவப் பிரிகேடியர் தடாலடியாக இரத்துச்செய்தார்.

சட்டவிதிகள் மீறப்படவில்லை; யாருக்குச் சார்பாகவும் சலுகைகள் காட்டப்படவில்லை; ஒழுங்காகவே குத்தகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் பிரிகேடியரோ மக்களின் நலனுக்காக அக் குத்தகையை இரத்துச் செய்வதாக தன் உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறார்.

சட்டவிதிகளின்படி செயற்படுவது மக்களின் நலனுக்கு மாறானது என்ற முடிவுக்கு பிரிகேடியர் எப்படி வந்தார்?

திருக்கோணமலையில் 'மக்கள்' என்ற பதம் தமிழர்களைக் குறிக்காது என்று கருதிவிட்டாரா? திருமலைப் பிரிகேடியரின் சமீபகால நடைமுறைகள் அவ்வாறுதான் அமைந்திருக்கின்றன.

திருமலையில் காணி அதிகாரி பீரிஸ் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து திருமலையில் தமிழ்க்கட்சிகளின் அலுவலகங்கள் படையினரால் சோதனையிடப்பட்டன.

"தமிழ்க்கட்சிகளை மக்கள் சந்தேகிக்கிறார்கள். அந்தச் சந்தேகத்தைப் போக்கவே சோதனை நடத்தப்பட்டது." என்று தமிழ்க் கட்சி பிரமுகர்களிடம் பிரிகேடியர் பின்னர் கூறியதாகத் தெரிகிறது.

அதாவது திருமலையில் உள்ள சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தவே சோதனைகள் நடத்தப்பட்டன என்பதுதான் அர்த்தம்.

மக்களின் நலன் கருதி திருமலை மத்திய சந்தைக் குத்தகையை இரத்துச் செய்ததாகக்கூறும் அதே பிரிகேடியர், திருமலை லிங்கநகர் மக்களின் நலனைப் பற்றிக் கருத்தில் கொள்ளவில்லை. "வெளியேறுங்கள் அல்லது வெளியேற்றப்படுவீர்கள்" என்கிறார்.

காரணம், லிங்கநகரில் குடியிருப்பது தமிழ்க் குடும்பங்கள். 'சட்டநியாயப்படி லிங்கநகரில் தமிழ்க் குடும்பங்கள் வாழும் பகுதி, இராணுவ முகாமுக்குச் சொந்தமானது. அதனால் சட்டப்படியே தாம் நடந்து கொள்கிறோம்' என்பதுதான் திருமலைப் பிரிகேடியரின் வாதம்.

ஆனால், சட்டவிதிகளின் படியும், தனக்குள்ள அதிகாரத்தின்படியும், திருமலை நகரசபை முறையாக கொடுத்த குத்தகையை பிரிகேடியர் இரத்துச் செய்துள்ளார். இந்த விடயத்தில் சட்ட தர்மங்களைத் தூக்கிக் கிடப்பில் போட்டுவிட்டார்.

அதனைவிட முக்கியமாக, முறைகேடாக மத்திய சந்தையைக் குத்தகை எடுக்க விரும்பிய ஒரு நபரையும், அவர் பின்னால் இருக்கும் ஒரு கும்பலையும் பிரிகேடியர் ஆதரிக்கிறார். அவர்களுக்கு சார்பான தனது செயலுக்கு 'மக்கள் நலன்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்.

முறைகேடாக குத்தகை எடுக்க விரும்பியவர் சிங்கள இனத்தவர். தனது முறைகேடான செயலை நியாயப்படுத்த இன உணர்வைத் தூண்டிவிட்டிருக்கிறார் அந்த நபர்.

இதேவிதமாக ஒரு தமிழர் நடந்து கொண்டிருந்தால் 'மக்கள் நலன் கருதி' அவரைப்பிடித்து உள்ளே போட்டிருப்பார்கள். அதற்கும் பிரிகேடியருக்கு அதிகாரம் இருக்கிறது.

திருமலை மத்திய சந்தையை தம்மைத் தவிர வேறு யாரும் குத்தகை எடுக்க முடியாது என்பதுபோல ஒரு பிரிவினர் இதுவரை அதிகாரம் செலுத்தி வந்தனர்.

நகரசபையால் குத்தகைக்கான கோரல் விடுக்கப்பட்டபோதும், 'எம்மை மீறி யார் கேட்கப்போகிறார்கள்' என்ற மிதப்பில் இருந்துவிட்டனர்.

உண்மையில் குறிப்பிட்ட பிரிவினரின் அச்சுறுத்தல் காரணமாக எந்தவொரு தமிழரும் குத்தகை எடுக்க முன்வந்திருக்க மாட்டார்கள்.

ஆனால் புளொட் இயக்கத்தினர் தமது ஆதரவாளரான அந்தனி வில்சன் கென்னடி என்பவரை குத்தகை கேட்க வைத்தனர். வேறு யாராவது என்றால் மிரட்டிப் பணிய வைக்கலாம்; இயக்கம் ஒன்று பின்னணியில் நிற்பதால் தம்மால் எதுவும் செய்ய முடியாது, என்ற நிலையில் குறிப்பிட்ட சிங்கள இன குத்தகையாளர் பிரிகேடியரின் உதவியை நாடினார்.

அந்தனி வில்சன் கென்னடி குத்தகை கேட்ட தொகையைவிட கூடுதலாகக்கேட்டால் குறிப்பிட்ட சிங்கள இன நபருக்கு குத்தகை கிடைத்திருக்கும்.

ஆனால் பிரிகேடியர் தலையிட்டு குத்தகைக் கோரல் திகதியை நீடிக்கச் செய்தார். அதன் பின்னரும் குறிப்பிட்ட சிங்கள இனத்தவர் கோரலுக்கு மனுப்போடவில்லை.

இந்நிலையில்தான் குத்தகை விதி முறைக்கு ஏற்ப அதிக தொகைக்கான கோரலுக்கு மத்திய சந்தை குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது.

குத்தகை எடுத்தவர் புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். ஆனால் குத்தகை வழங்கப்பட்டதில் முறைகேடு நடக்கவில்லை. யாருக்கும் முன்னுரிமை வழங்கப்படவில்லை. குறிப்பிட்ட சிங்கள குத்தகைக்காரர் விரும்பியிருந்தால் அந்தனி வில்சன் கென்னடியைவிட அதிக தொகையைக் கொடுத்து குத்தகை பெற்றிருக்கலாம்.

இது ஒரு வியாபார விடயம். குத்தகை யார் எடுக்கிறார்களோ, அவர்கள் பையில்



இலாபம் சேரும்.

ஆனால் அதனை ஒரு இனப்பிரச்சினையாக்கி சிங்களவர்களுக்கு அநியாயம் நடந்துவிட்டதாக ஒரு நபர் தனது வியாபார நலனை முன்னிட்டு குழப்பம் செய்தார்; ஹர்த்தால் நடத்தினார்.

இறுதியில் அந்த நபருக்கு சார்பாக திருமலைப் பிரிகேடியர் குத்தகையை இரத்துச் செய்தார்.

இது திருமலை மத்திய சந்தை தொடர்பான விடயம் மட்டுமல்ல; திருமலையில் தமிழ் மக்களின் உரிமைகளையும், நலன்களையும் மெல்ல மெல்லப் பறித்தெடுக்கும் நீண்டகாலத் திட்டத்தின் ஓர் அங்கம்தான்.

அதுமட்டுமல்ல வடக்கு-கிழக்கில் நடப்பது சிவில் நிர்வாகமல்ல; இராணுவ நிர்வாகம் என்பதற்கும் இதுவும் தெளிவான உதாரணம்.

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி, அங்கு சிவில் நிர்வாகம் இருப்பதாகக் காட்ட அரசாங்கம் முயற்சிக்கிறது. தமிழ் கட்சிகளும் 'ஜனநாயகத்தின்மீது கொண்ட எக்கச்சக்கமான அன்பினால்' தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளன.

ஆனால், உள்ளூராட்சி சபைகளுக்கு குப்பை கூட்டும் அதிகாரத்தைக் கூட படையினர் விட்டு வைக்கப்போவதில்லை. எங்கே குப்பைத் தொட்டிகளை வைக்க வேண்டும் என்பதையும் படையினர்தான் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் குப்பைக் கூடைகளுக்குள்ளும் குண்டுகள் கிடக்கலாம் என்பதால் அவையும் பாதுகாப்பு விதிகளின் கீழ் அடங்கும்.

பாவம் தமிழ்க் கட்சிகள்! ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பிவிட்டதாக பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்துவிட்டு இருந்துவிட்டன.

"உள்ளூராட்சிச் சபை தேர்தலில் போட்டியிடாமல் இருப்பது எப்படி? நாம் தான் ஜனநாயகப் பாதைக்கு வந்தவர்களாச்சே! நாம் எப்படி தேர்தல் வேண்டாம் என்று கூறுவது?" இது தமிழ்க்கட்சிகளின் சொதப்பல் வாதம்.

தமிழ்க் கட்சிகள் என்ன செய்திருக்க வேண்டும்?

'திருமலை நகரசபை அதிகாரத்தில் பிரிகேடியர் தலையிட்டிருக்கிறார். வடக்கு-கிழக்கில் இராணுவ அதிகாரமே கோலோச்சுகிறது என்பது வெளிப்பட்டுள்ளது. இந்நிலையில் வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகம் இருப்பதாக போலியாகச் சித்தரிக்க உதவும் தேர்தல்களில் இனிமேல் பங்குகொள்ள மாட்டோம்!' என்று ஒரே குரலில் கூறியிருக்கலாம்.

அப்படிக் கூறியிருந்தால் ஜனநாயகப் பாதைக்கு வந்த கட்சிகள் தேர்தலில் போட்டியிடாமல் இருக்கலாமா? என்று யாரும் கேட்கமுடியாதே!

ஆனால் தமிழ்க்கட்சிகள் நிலை இதுதான்: 'கூழுக்கும் ஆசை. மீசைக்கும் ஆசை.'



படிப்பகம்

www.padippakam.com



பூலான்

# தருவது 25 ரசிகன்

**கடந்தவாரம்**

பூலான் தேவி
கொள்ளைக் கோஷ்டியினரால்
கடத்திச் செல்லப்படுகிறாள்.
கொள்ளைக் கோஷ்டித் தலைவன்
பாபுசிங் குஜார்.
அவனுக்கு அடுத்த நிலையில்
இருப்பவன் விக்கிரம் மல்லா.
முன்னர் ஒருமுறை
பூலானிடம் வம்பு செய்த
கொள்ளையன் ஒருவனை
தாக்கியவன்தான் விக்கிரம் மல்லா.
அவன்மீது பூலானுக்கு பிடிப்பு வருகிறது.
பாபுசிங் குஜார் பூலானை
பலாத்காரம் செய்ய முயல
விக்கிரம் மல்லா குறுக்கிடுகிறான்.

இனி..

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

"சாஹாப்" என்று விக்கிரம் மல்லா அழைத்த குரல் கேட்டதும் பாபுசிங் குஜார் தாக்குண்ட சிங்கம்போல அவனை நோக்கித் திரும்பினான்.

விக்கிரம் மல்லா துப்பாக்கியுடன் நின்றான். அவன் முகத்தில் உணர்ச்சியேதும் இல்லாமல் பாபுசிங் குஜாரை நோக்கி நிதானமாக அடியெடுத்து வைத்தான்.

பாபுசிங் குஜார் ஒரே தாவாகத் தாவி தனது துப்பாக்கியை எடுத்துக் கொண்டான்.

துப்பாக்கியை விக்கிரம் மல்லாவை நோக்கி நீட்டியபடியே, "அங்கேயே நில், இப்போது ஏன் வந்தாய்! போய் விடு! திரும்பிப் போய்விடு!" என்று கத்தினான்.

"வேண்டாம் சாஹாப், அவளை ஒன்றும் செய்யாதீர்கள்!" என்றான் விக்கிரம் மல்லா. விக்கிரம் மல்லா தன் துப்பாக்கியை சட்டென்று கீழே போட்டான்.

"நமக்குள் சந்தேகம் கூடாது சாஹாப்! நான் உங்களுடன் சண்டைபோட வரவில்லை!"

"டேய் விக்கிரம் மல்லா! நான் யார் தெரியுமல்லவா! நான் யாரடா?"

"எங்கள் தலைவர்!"

"அதைக் கேட்கவில்லை! நான் என்ன ஜாதி?"

"உயர்ந்த ஜாதி!" அதைச் சொன்னபோது விக்கிரம் மல்லாவின் குரலில் கேலி தெரிந்ததுபோல எனக்குத் தோன்றியது. பாபுசிங் குஜார் நிதானம் இழந்திருந்தான். அதனால் விக்கிரம் மல்லாவின் குரலில் இருந்த கேலியை அவன் கவனிக்கவில்லை.

"நீ யார் தெரியுமா? கீழ் ஜாதி! மீனவ ஜாதி! கீழ் ஜாதிக்காரன் எனக்கு புத்தி சொல்ல வரலாமா? சொல்லடா நாயே! வரலாமா? இதற்காகவே உன்னை நான் நாய் சுடுவதைப் போலச் சுட்டுத்தள்ளலாம்! சுடட்டுமாடா! உன்னை நான் இங்கேயே, இந்த இடத்திலேயே சுட்டுமாடா?"

பாபுசிங் குஜார் கீழ் ஜாதிக்காரன் என்று விக்கிரம் மல்லாவை இகழ்ந்தபோது, விக்கிரம் மல்லாவின் முகத்தில் சட்டென்று மின்னல்போல கோபம் தோன்றி மறைந்ததை நான் கண்டு கொண்டேன்.

விக்கிரம் மல்லா தன்னை கட்டுப்படுத்திக் கொள்கிறான். தன் கோபத்தை என்னைப் போலவே உள்ளே அடக்கிக் கொள்கிறான். எனக்கும் அவனுக்கும் இடையில் அப்படியொரு ஒற்றுமை இருப்பதை நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அது மட்டுமல்ல நாங்களும் மீனவ ஜாதியைச் சேர்ந்தவர்கள்தான். விக்கிரம் மல்லாவும் நானும் ஒரு ஜாதி. "விக்கிரம் மல்லா நானும் உன் ஜாதிதான்" என்று உடனே கத்திவிடலாம் போலிருந்தது.

மெல்ல எழுந்து முழங்கால் மடக்கி அமர்ந்து கொண்டேன். விக்கிரம் மல்லாவையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

விக்கிரம் மல்லாவின் பார்வை ஒரு நொடி மட்டும் என்மீது பட்டுவிட்டுச் சென்றது.

"சாஹாப்! நீங்கள் என்னைச் சுடமாட்டீர்கள்! சுட்டால் நான் செத்துவிடுவேன். அதனால் நஷ்டம் உங்களுக்குத்தான்! ஒரு நல்ல தளபதியை இழந்துவிடுவீர்கள்! உங்கள் கோஷ்டியில் இருக்கும் என் ஜாதிக்காரர்கள் உங்களுக்கு எதிராகத் திரும்பிவிடுவார்கள்!"

"மிரட்டுகிறாயாடா நாயே!"

"இல்லை சாஹாப், உங்களை நான் ஏன் மிரட்டவேண்டும்! அப்படியானால் துப்பாக்கியைக் கீழே போட்டிருப்பேனா?"

பாபுசிங் குஜார் அவனை சந்தேகத்துடன் நோக்கினான். இப்போதும் துப்பாக்கி விசையில் தனது விரலை தயாராக வைத்திருந்தான். அவன் விரல் கவனக் குறைவாக் அழுத்தினாலும் கூட குண்டு பாய்ந்துவிடும். விக்கிரம் மல்லா செத்துவிடுவான்.

என் இதயம் துடிப்பது எனக்குக் கேட்டது. வழமைக்கு மாறாக பட பட வென்று என் இதயம் துடிக்கிறது.

விக்கிரம் மல்லா சாகக் கூடாது! இந்த உலகத்தில் நான் சந்தித்த அபூர்வமான பிறவி இவன்தான். இவனை இழந்துவிட்டால் என்னிடமுள்ள நம்பிக்கைகளும் பட்டுப்போகும்.

நம்பிக்கையற்ற குரலில் பாபுசிங் குஜார் கேட்டான்: "நேரத்தை வீணடிக்காதே மல்லா. நீ ஏன் இங்கே வந்தாய்? இந்த சிறுக்கிமீது உனக்கென்னடா அக்க... ஓ.. ஓஹா.. ஓஹோ ஜாதி அபிமானமா?"

"அவள் என்ன ஜாதி என்றே எனக்குத் தெரியாது சாஹாப்! ஆனால் அவள் மிகவும் களைத்துப் போய் இருக்கிறாள். பயந்துபோய் இருக்கிறாள். இப்போது உங்கள் முரட்டுத்தனத்தை அவள் தாங்கமாட்டாள். செத்துப் போய் விடுவாள் சாஹாப். செத்துப்.."

"செத்தால் உனக்கென்னடா மல்லா?" என்றான் சீற்றத்துடன் பாபுசிங் குஜார்.

அப்போதுதான் எனக்குள்ளும் அந்தக் கேள்வி எழுந்தது. நான் செத்தால் விக்கிரம் மல்லாவுக்கு என்ன? இவன் ஏன் என்மீது அக்கறைப்படுகிறான்? அப்படியானால் இவனும் என்மீது பிரியப்படுகிறான். விக்கிரம் மல்லா என்மீது அன்பு காட்டத் தொடங்கிவிட்டான் என்றுதானே அர்த்தம்.

வெறும் அனுதாபமாக இருக்குமோ? சேச்சே அப்படி இருக்காது என்று கட்டாயமாக நினைத்துக்கொண்டேன்.

"அநியாயமாக யாரையும் சாகடிக்கக் கூடாது சஹாப்!"

"உபதேசம் செய்கிறாயா? பாபுசிங் குஜார் வைத்த குறி தப்பாது! நினைத்த காரியம் பிசகாது! இன்றுதான் நீ சாகவேண்டும் என்பது தலைவிதியென்றால் இங்கேயே நில்! என் தளபதியாக இருக்க வேண்டும் என்றால் உடனே திரும்பிப்போய்விடு!"

விக்கிரம் மல்லா என்ன சொல்லப் போகிறான் என்று பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தேன்.

"என்னை சுட்டுவிடுங்கள் சஹாப்!" என்றான் சிறிதும் உணர்ச்சிபற்ற குரலில்.

பாபுசிங் குஜார் இடிபோல உரத்துச் சிரித்தான். "அப்படியா சொல்கிறாய்! கொஞ்சம் பொறு! இதுவரை என்கூடவே இருந்தாய்! எனக்காக எத்தனையோ ஆபத்துக்களை சந்தித்திருக்கிறாய்! பொலிஸ்காரர்களிடமிருந்து உன் உயிரைப் பணயம் வைத்து என்னைக் காப்பாற்றியும் இருக்கிறாய். இந்த பாபுசிங் குஜார் அப்படியொன்றும் நன்றி கெட்டவனல்ல மல்லா!"

எனக்கு ஆறுதலாக இருந்தது. பாபுசிங் குஜாரின் மனதில் எங்கோ ஒரு ஓரத்தில் ஈரமும் இருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டேன். என் ஆச்சரியம் ஒரு நொடிகூட நிலைக்கவில்லை.

"என் உடம்பில் ஓடுவது உயர் ஜாதி இரத்தமடா மல்லா. நன்றி மறக்காத இரத்தம்! அதனால் உனக்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்துவிட்டுத்தான் சுடப்போகிறேன்! கடவுளே! என் மல்லாவை இனி உங்கள் அருகில் பாதுகாப்புக்காக வைத்துக் கொள்ளுங்கள்! இதோ இவனை உங்களிடம் ஒப்படைக்கிறேன்!"

உரத்துச் சிரித்தபடியே பாபுசிங் குஜார் விக்கிரம் மல்லாவை கடைசியாக ஒரு தடவை நன்றாகப் பார்த்தான்.

எப்படி எழுந்தேன், எப்படி ஒரு வேகத்தில் அப்படிக் குறுக்கே பாய்ந்தேன் என்று எனக்கே தெரியாது.

பாபுசிங் குஜாருக்கும் விக்கிரம் மல்லாவுக்கும் இடையே நின்றுகொண்டே விக்கிரம் மல்லாவைப் பார்த்துக் கத்தினேன்.

"நீ யார் எனக்காக சாவதற்கு? சாவது என்றால் எங்காவது போய் சாகவேண்டியதுதானே! எனக்காக செத்துப்போனாய் என்று பழி எதற்கு?" விக்கிரம் மல்லா தன் கண்களை சுருக்கிக் கொண்டு என்னை கூர்ந்து பார்த்தான். நான் பாபுசிங் குஜார் பக்கமாக திரும்பினேன்.

"நீ.. நீங்கள் என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன். எனக்காக யாரையும் கொல்ல வேண்டாம்! என்னால் உங்கள் மத்தியில் சண்டை வரவேண்டாம்!"

முதல் தடவையாக நான் கையெடுத்துக் கும்பிட்டேன். என் கண்களில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்தது.

எத்தனை கொடுமைகளை என் வாழ்க்கையில் சந்தித்திருக்கிறேன். எத்தனை நாய்களை சந்தித்திருக்கிறேன். என்னை குதறிப் போட்ட நாய்கள் முன்னால்கூட நான் கண்ணீர்.. ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விட்டதில்லை. கையெடுத்துக் கும்பிட்டதில்லை. கருணை காட்டக் கேட்டதுமில்லை.

இப்போது கையெடுத்துக் கும்பிட்டு நின்றேன். கண்ணீர் விட்டேன். ஏன்? என் விக்கிரம் மல்லாவுக்காக!

தாய்க்கும், மனைவிக்கும் பயந்து என்னை கைகழுவிவிட்டான் கைலாஸ் என்ற கோழை. சாவுக்கும் தயாராக நிற்கிறானே விக்கிரம் மல்லா. இவனுக்காக நான் என்ன செய்தேன்? என்னை ஒருமுறைகூட பார்வையால்கூட இவன் நெருங்கியதில்லை.

இவன்தான் என் நம்பிக்கைகள் இலட்சியங்களுக்கு கைகொடுக்கக் கூடியவன். அந்த துர்க்கையம்மன்தான் இவனை எனக்கு காட்டியிருக்கிறாள்.

இவனை இழக்க மாட்டேன். அதற்காக என்ன செய்யவும் நான் தயாராக இருக்கிறேன்.

'வா! பாபுசிங் குஜார் என்ற மிருகமே வா! பரட்டைத் தலை நாயே! உயர் ஜாதி வெறிபிடித்த பேயே வா! என்னைக் கடி. என்மேல் புரள்! உன் வெறிதீரும்வரை கடி.. குதறு! என் விக்கிரம் மல்லாவை விட்டுவிடு!' வெளியே சொல்லாமல் என் மனம் அழுதது.

துப்பாக்கியின் விசையிலிருந்து தன் விரலை விலக்காமல் விக்கிரம் மல்லாவை பார்த்தான் பாபுசிங் குஜார். என்னையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தான்.

"உனக்காக மல்லாவை விடுகிறேன். நீ எனக்காக என்ன வேண்டுமானாலும் செய்வாயா?"

"செய்கிறேன். செய்.. செய்கிறேன்!"

"உன் சேலையை உருவ எவ்வளவு கஷ்டப்பட்டேன்? அதனால்.. அதனால் மீதியை நீயே உருவிப் போட்டுவிடு!"

அசிங்கம் பிடித்த நாய்! வேறு ஒரு சமயம் என்றால் காறித்துப்பியிருப்பேன் அவன் முகத்தில். இப்போது வேண்டாம்.

நான் என் ரவிக்கையின் ஊக்கில் கைவைத்தேன். கண்ணீரை அடக்க முயன்றபடி விக்கிரம் மல்லாவை கடைக்கண்ணால் பார்த்தேன்.

விக்கிரம் மல்லா தலையைக் குனிந்தபடி திரும்பி நடந்தான். அவன் விட்டுச் சென்ற துப்பாக்கி அப்படியே நிலத்தில் கிடந்தது.

"கதவைச் சாத்திவிட்டு வா!" என்றான் தன் துப்பாக்கியை கீழே வைத்த பாபுசிங் குஜார்.

கதவைச் சாத்தும்போது பார்த்தேன்,



விக்கிரம் மல்லாவின் முதுகுதான் தெரிந்தது. தலையைத் தொங்கவிட்டபடி சென்று கொண்டிருந்தான். பாவமாக இருந்தது.

கம்பளிப் போர்வையை என்னை நோக்கி விட்டெறிந்தான் பாபுசிங் குஜார்.

"அதைத் தரையில் விரி. இந்தப் பாபுசிங் குஜார் தானாகப் பழுத்த கனியை பக்குவமாகத்தான் புசிப்பான்!" கெக்கட்டம் போட்டு இளித்தான் பரட்டைத்தலை நாய்.

தரையில் போர்வையை விரித்தேன். என் நினைவெல்லாம் விக்கிரம் மல்லா மீதே இருந்தது.

பின்புறமாக வந்து என்னை இறுக்கமாக அணைத்துக் கொண்டான் பாபு சிங் குஜார்.

தன் கைகளை என் மீது அலைய விட்டபடியே கேட்டான்:

"மல்லா உன் ஜாதிதான். உனக்கு நான் வேண்டுமா? அவன் வேண்டுமா?" என் காது மடலில் நாவால் தொட்டான். எச்சில் நாய்!

நான் விக்கிரம் மல்லாவை மனதில் நினைத்துக் கொண்டே அவனிடம் சொல்வதாக நினைத்துக் கொண்டு "நீதான் வேண்டும்!" என்றேன். என்னை அப்படியே தரையில் இருத்தி, தோளில் அழுத்தி சரித்தான்.

"நான்தான் வேண்டுமா?" என்றான் என்மேல் குனிந்துகொண்டு. என் முகத்தை வெறியோடு பார்த்துக்கொண்டு.

நான் பதில் சொல்ல முன்னரே அவசரமாய் என்மேல் பரவினான்.

'மல்லா! விக்கிரம் மல்லா!' என்று என்னை அறியாமல் முணு முணுத்து விட்டேன்.

"என்னடி சொல்கிறாய்?" என்றான்.

"ஒன்றுமில்லை!" என்றேன்.

"ஏன் இல்லை! இருக்கிறது! எல்லாம், எல்லாமும் இருக்கிறது, எல்லாமும் எனக்காக; இந்த பாபுசிங் குஜாருக்காக!" வெறிபிடித்தவன் போல என்மீது படர்ந்தான்.

நான் முடிவு செய்து கொண்டேன்.

'இவனைத்தான் முதலில் கொல்ல வேண்டும்! இனிமேல் துள்ளுவதில்லை. கத்துவதில்லை! தந்திரத்தால்தான் இனி சாதிக்க வேண்டும்!'

இனித்தான் புதிய பூலானை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள்!

(தொடர்ந்து வரும்)

# கப்பலேறும் அரச மரியாதை

இளவரசர்கள் என்றாலே விவகாரமான ஆட்களாகத்தான் இருப்பார்கள் போலிருக்கிறது.

சமீபத்தில் சர்ச்சையில் சிக்கியிருப்பவர் ஜப்பான் இளவரசர்.

உலகமே வியக்கும் வகையில் ஜப்பான் இளவரசர் அகிஷினோவும், சிகோவும்



திருமணம் செய்து கொண்டனர். அவர்களது ஜோடிப் பொருத்தத்தைக் கண்டு உலகமே மூக்கின்மேல் விரலை வைத்தது.

யார் கண் பட்டதோ தெரியவில்லை, இப்போது ஜப்பான் இளவரசரும் அவர் மனைவி இளவரசி சிகோவும் விவாகரத்து செய்ய நினைக்குமளவுக்கு பிரச்சனை முற்றி விட்டது.

இளவரசர் அகிஷினோவின் புதிய காதல்தான் பூசலுக்குக் காரணம்.

திருமணமான புதிதில் சிகோவின் அழகில் மயங்கிக் கிடந்த இளவரசர் இப்போது மாறிவிட்டார். மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள் கதைதான்.

அடிக்கடி தாய்லாந்துக்கு விஜயம் செய்கிறாராம் இளவரசர். அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் ஜப்பான் சென்றபோது அங்கு மாபெரும் வரவேற்புக் கொடுக்கப்பட்டது. விருந்தும் வழங்கப்பட்டது. வரவேற்பிலும், விருந்திலும் ஜப்பான் இளவரசர் காணப்படவில்லை.

தாய்லாந்துக்கு முக்கிய காரியமாகச் சென்றுவிட்டார் என்று கூறப்பட்டது. ஜப்பான் பத்திரிகைகள் அதனை நம்பவில்லை. தாய்லாந்தில் மோப்பம் பிடித்து உண்மையைக் கண்டறிந்துவிட்டன.

தாய்லாந்தில்தான் இளவரசரின் அழகிய காதலி இருக்கிறாளாம். அடிக்கடி அந்தக் காதலியுடன் களிப்பாக இருந்து விட்டு வருகிறாராம் இளவரசர்.

ஜப்பான் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளை இளவரசர் மறுத்திருக்கிறார். மறுப்பை யாரும் நம்பவில்லை.

இளவரசி சிகோவின் தந்தையார் தனது மருமகனின் இரகசியக் காதல் தொடர்பாக ஜப்பான் சக்கரவர்த்தியிடம் புகார் செய்துள்ளாராம்.

இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ் போல ஜப்பான் இளவரசரும் சிகோவை விவாகரத்து செய்தாலும் ஆச்சரியமில்லை என்று சொல்லுகின்றன ஜப்பான் பத்திரிகைகள்.

இங்கிலாந்தைப் போலவே ஜப்பானிலும் அரச குடும்பத்தினருக்கு பயங்கர மரியாதை இருந்தது. இளவரசர் விவகாரத்தால் அந்த மரியாதை கப்பலேறிக் கொண்டிருக்கிறது.

ஜப்பான் அரச குடும்பத்துக்கு நெருக்கமானவர்கள் விவகாரம் விகாரமாகாமல் இருக்க சமரச முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

# அழகிகளுக்கு ஆதாயம்

பெங்களூரில் உலக அழகிப் போட்டி நடந்து முடிந்து விட்டது. முடி சூட்டிக் கொண்ட அழகி கிரீஸ் நாட்டுக்குப் பறந்து விட்டார்.

பாவம், முடி சூடாத அழகிகள் ஏமாற்றத்துடன் திரும்பியிருப்பார்கள் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை.

மும்பாயிலும், புதுடில்லியிலும் நட்சத்திர ஹோட்டல்களில் ஒரு மாதகாலம் தங்கியிருந்து விட்டு ஜாலியாகத்தான் திரும்பிப்போனார்களாம்.

நட்சத்திர ஹோட்டல் செலவு முதல் சகல செலவுகளையும் சில பிரபல புள்ளிகள் ஏற்றுக் கொண்டார்கள். அழகை ஆராதனை செய்யும் அப் புள்ளிகளை மகிழவைத்துவிட்டு பைநிறைய பணத்துடன் பறந்துபோய்விட்டார்கள் அழகிகள்.

அழகிப் போட்டிகளில் கலந்து கொண்டால் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வருபவர்கள் சிலர் மட்டும்தான். பெரும்பாலான அழகிகள் தங்கள் வருமானத்திற்கு விளம்பரம் செய்யவே கலந்து கொள்கிறார்கள்.

பெரும் கோடீஸ்வரப் புள்ளிகள்தான் அழகிகளின் குறி. அழகிப் போட்டிகளின் நடுவர்கள் சிலருக்கும் விசேஷ போனஸாக கவனிப்புக்கள் கிடைப்பதுண்டு.

உலக அழகிப் போட்டியில் வெற்றி பெறாவிட்டாலும் பெரும் புள்ளிகள் பலரை கவர்ந்தவர்களில் ஒருவர் தகிதி நாட்டு அழகி.

அவர் பெங்களூரில் தங்கியிருந்த போதே ஏனைய அழகிகளை விட்டுவிட்டு அவரைத்



தான் புகைப்படக்காரர்கள் துரத்தித் துரத்தி கிளிக் செய்தார்களாம்.

"அப்படி என்னதான் இருக்கிறது என்னிடம்? இப்படி புகைப்படம் எடுத்துத் தள்ளுகிறீர்களே? "என்று அவர் கேட்டதை இந்தியப் பத்திரிகைகள் அழகி உதித்த முத்தாக வெளியிட்டிருந்தன.

அழகிப் போட்டி முடிந்த கையோடு அவரை ஒரு பெரும்புள்ளி கொத்திச் சென்றுவிட்டார்.

அழகிப்போட்டியின் பின்னால் எத்தனை சுவாரசியமான விஷயங்கள்! எல்லாமே வியாபாரம்தான்!

# வளர்த்த பாசம்

சினிமாவில் வருவதுபோன்ற ஒரு உண்மைச் சம்பவம் இது.

அமெரிக்காவில் புளோரிடாவில் உள்ள மருத்துவமனை ஒன்றில், ஒரே சமயத்தில் பிறந்த குழந்தைகள் மாறிப்போய்விட்டனர்.

பாப்பரா என்னும் பெண்ணின் குழந்தை ரெஜினாவிடமும், ரெஜினாவின் குழந்தை பாப்பராவிடமும் மாறிப்போய்விட்டன.

கிட்டத்தட்ட பதினான்கு வருடங்களின் பின்னர் எப்படியோ பாப்பராவுக்கு உண்மை தெரிந்துவிட்டது. மருத்துவமனையில் நடத்தப்பட்ட பயலாஜிகல் பரிசோதனை மூலம் இரத்தத் தொடர்பு வேறாக இருப்பதையும் கண்டறிந்து கொண்டார்கள்.

பின்னர் றெஜினாவையும் கண்டுபிடித்து அவருக்கும் உண்மையை விளக்கினார்கள்.

பாப்பராவும், ரெஜினாவும் 'தங்கள் பிள்ளைகளைத் தாமே அழைத்துச் செல்ல முன்வந்தனர். ஆனால் சிறுமிகள் இருவரும் மறுத்து விட்டார்கள். வளர்த்த தாயுடனேயே



இருந்துவிட விரும்புவதாகச் சொல்லி விட்டார்கள். தாய்மாருக்கும் வளர்த்த பாசமே பெரிதாக இருந்தது அவர்களும் உடன்பட்டுவிட்டார்கள்.

# தமாஷ் திருடர்கள்

திருடர்கள் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். தமாஷ் திருடர்கள் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

இங்கிலாந்தில் உள்ள கோவென்ட்ரி நகரைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஜிம் பிரஷ்ன் வீட்டில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். ரெலிபோன் அடித்தது. எடுத்தார்.

"ஹலோ உங்களிடம் லான்ரோவர் டிஷ்கவரி இருக்கிறதா?" என்று கேட்டது குரல். லான்ரோவர் டிஷ்கவரி என்பது விலை உயர்ந்த கார்.

தொழிலதிபரும் தூக்கக் கலக்கத்துடன் "இருக்கிறது!" என்றார்.


"வெரிகுட்! இப்போது அந்தக் கார் உங்களுடையது அல்ல. எங்களுடையது. அதனை நாங்கள் எடுத்துக்கொண்டோம். அந்தக் காரில் உள்ள மொபைல் போனில்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். தாங்யூ...பை" என்று சொல்லிவிட்டு வைத்துவிட்டார்கள்.

தொழிலதிபர் அலறி அடித்து ஓடிவந்து வெளியில் பார்த்தார். அங்கு அவரது காரைக் காணவில்லை. வீட்டிலிருந்த வேறு பல பொருட்களையும் காரில் அள்ளிப் போட்டுக்கொண்டு போய் விட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



## மலையும்–மலையும் மோதிக் கொண்டால்....

கடந்த ஆண்டில் மிகவும் விறுவிறுப்பாக எதிர்பார்க்கப்பட்ட குத்துச் சண்டை போட்டி இதுதான். இரண்டு மலைகள் பயங்கரமாக மோதிக்கொண்டன. மைக் டைசனும், எவாண்டர் ஹொலி ஃபீல்ட்டும் களத்தில் இறங்க முன்னரே, அவர்களில் வெல்லப்போவது யார் என்று பல்லாயிரம் பேர் பந்தயம் கட்டிவிட்டார்கள்.


நவம்பர்-9,1996ல் அந்த மோதல் நடைபெறறது. 11வது ரவுண்டில் இரத்தம் சொட்டச் சொட்ட மைக் டைசன் தோல்விகண்டார். உலக அதிபாரக் குத்துச்சண்டை சாம்பியன் பட்டத்தை ஹொலி ஃபீல்ட் கைப்பற்றினார். இப்படம் ஆறாவது ரவுண்டில் கிளிக் செய்யப்பட்டது.

குத்துச் சண்டைப் புலியான மைக்டைசனுக்கு இது இரண்டாவது தோல்வி. 1990ல் பாஸ்ரர் டக்ளஸிடம் 10வது ரவுண்டில் தோல்வி கண்டவர் டைசன். ஆனால் டைசன் அடிபட்ட புலி. மறுபடி எழுவார் என்கிறார்கள் அவரது ரசிகர்கள். '96ல் மறக்க முடியாத நிகழ்வுகளில் ஒன்றாக இந்த மலைகளின் மோதலும் அமைந்துவிட்டது.

## நேற்று-அவள் இன்று-அவன்

→ இந்தியாவில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஷைமா என்னும் சிறுமி ஆணாக மாறிய செய்தியை அறிந்திருப்பீர்கள். அறியாதவர்களுக்கு சுருக்கமாக ஒரு விளக்கம்.

தனது பெற்றோருக்கு கடைசிப் பிள்ளையாகப் பிறந்தவள் ஷைமா. ஆரம்பத்தில் பிரச்சனை இல்லை. நாள் செல்லச் செல்ல ஷைமாவின் உடலில் மாற்றங்கள் தெரியத் தொடங்கின. ஷைமாவின் உடலில் ஆண் இன உறுப்புக்கள் வளர்வது கண்டுபிடிக்கப்பட்டது.



பாதி ஆணாகவும், பாதி பெண்ணாகவும் இருக்கிறது குழந்தை. உங்களுக்கு ஆண் குழந்தை வேண்டுமா, பெண் குழந்தை வேண்டுமா? என்று சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா ஸ்டைலில் கேட்டனர் டாக்டர்கள்.

"ஆண்குழந்தைதான் வேண்டும்" என்றனர் பெற்றோர்கள். 4 மணிநேர அறுவைச் சிகிச்சை மூலம் கலப்படமில்லாத ஆணாக மாறினாள்(ன்) ஷைமா. பெயரும் ஷைன்குமார் என்று மாற்றப்பட்டது. 96இல் நடந்த அதிசயங்களில் ஒன்றாகியும் விட்டது.

இப்போது ஷைன்குமார் கொழுகொழுவென்று இருக்கிறான். விளையாடுகிறான். அவனைப் பலகலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென்று அப்பா, அம்மா அப்பப்பா கனடா சித்தப்பா..... (மன்னிக்கவும் ரேடியோவில் பிறந்தநாள் வாழ்த்துக் கேட்ட பழக்கதோசம்). ஷைன்குமாரும் அவன் தாயாரும்தான் படத்தில் காணப்படுகின்றனர். ■

## தகவல் பெட்டி

↓ பாதாளக் கிணற்றில் பயங்கர சைக்கிள் ஒட்டம் பலர் பார்த்திருக்கலாம். சர்க்கஸ் நிகழ்ச்சிகளில் நடைபெறுவது வழக்கம்.

ஆனால் ரயில் தண்டவாளத்தில் சைக்கிள் ஓட்டும் முயற்சி இதுதான் முதல் தடவை. தமிழ்நாட்டைச் சேர்ந்த கணேசன் என்ற மாணவரே இந்தச் சாதனையைச் செய்திருக்கிறார்.

ஐந்து நிமிடத்தில் இரண்டு கிலோமீட்டர் தூரம் தண்டவாளத்தில் சைக்கிள் ஓடி காண்பித்துள்ளார். இந்தச் சாதனையை அடுத்து மேலும் பல திட்டங்களை கைவசம் வைத்திருக்கிறார் கணேசன். இந்திய நாட்டு மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் ரயில் தண்டவாளத்தில் சைக்கிள் ஓடிச் செல்லப்போகிறாராம். ரயில்வே அமைச்சுக்கு எழுதி அனுமதி கேட்டிருக்கிறார்.

ஆற்றுப் பாலங்கள்மீது ரயில்வே தண்டவாளம் இருந்தால் அவற்றைக் கடப்பது அபாயமானது. (நினைக்கவே நமக்கு வயிற்றைக் கலக்குகிறது) அதற்கான பயிற்சியை செய்துவருகிறார் கணேசன்.


அதனைத் தொடர்ந்து தண்டவாளத்தில் மோட்டார் சைக்கில் ஒட்டவும்முயற்சி செய்யப்போகிறாராம்.

யாழ்ப்பாணத்தில் பிறந்திருந்தால் கணேசன் இந்தச் சாதனைகளை நினைத்தும் பார்த்திருக்க மாட்டார். ஏன் சொல்லுங்கள்? அங்குதான் தண்டவாளமே கிடையாதே! (கடிதான் ஹி.ஹி)

## தண்டவாளத்தில் சைக்கிள் ஓட்டம்



## அதிசயக் கோழிக்குஞ்சு



← கோழிக்கு எத்தனை கால்? இரண்டு என்பீர்கள். அது வழக்கமான பதில். படத்தில் இருக்கும் கோழிக்கு நாலு கால்கள்.

இந்த அதிசயக் கோழிக்குஞ்சை தமிழ்நாட்டில் இடைப்பாடி என்ற ஊரில் கண்டுபிடித்திருக்கிறார்கள். எப்படிக் கண்டுபிடித்தார்கள்? அது ஒரு சின்னக் கதை.

இடைப்பாடி கிராமத்தில் உள்ள கணக்கன் என்பவரும் அவரது நண்பர்களும் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அப்போது கழுகு ஒன்று தனது காலில் ஒரு கோழிக்குஞ்சுடன் பறந்துவந்தது. அதைக் கண்ட கணக்கனும் நண்பர்களும் கழுகைக் கல்லால் எறிந்து விரட்டினர். கழுகு கோழிக் குஞ்சை போட்டுவிட்டுப் பறந்துவிட்டது.

கணக்கன் கோழிக்குஞ்சுக்கு தண்ணீர் கொடுத்தார். அப்பொழுதுதான் கோழிக்குஞ்சின் காலைக் கவனித்தார். நான்கு கால்கள் இருந்தன.

விஷயமறிந்து ஊரவர்கள் திரண்டுவந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகப் பத்திரிகைகளிலும் இச்செய்தி வெளியாகியுள்ளது. கோழியை மீட்ட புண்ணியத்தில் கணக்கன் பெயரும் பிரபலமாகிவிட்டது. நன்மை செய்தால் நன்மை விளையும். இது நீதிக்கதையல்ல நிஜக்கதை. ■

## வாழ்க வளர்க

→ உயரமாக இல்லையே என்று சிலர் வருத்தப்படுவது உண்டல்லவா. அவர்களை 'வாழ்க, வளர்க' என்று வாழ்த்தினால் பூரித்துப்போவார்கள்.

ஆனால் இந்தியாவில் உத்திரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த கயும் அலியிடம் போய் 'வாழ்க வளர்க' என்று வாழ்த்தினால் உதைதான் விழும். கயும் அலியின் உயரம் இன்றைய நிலவரப்படி 7 அடி. வயது 20. இப்படியே விட்டால் நெடு நெடுவென்று வளர்ந்துவிடுவார் என்று டாக்டர்கள் கூறியுள்ளனர். அதாகப்பட்டது கயும் அலிக்கு வளரும் வியாதி பிடித்திருக்கிறது.

10 வயதாக இருக்கும்போது கயும் அலியின் உயரம் 5 1/2 அடி. அவரது உயரத்தைப் பார்த்து கூடைப்பந்து அணியில் சேர்த்துவிட்டார்கள். 17வது வயதில் உத்திரப்பிரதேச மாநில பொலிஸ் அணியில் விளையாடினார் கயும் அலி. அப்போது அவரது உயரம் 6 அடி 8 அங்குலம்.

உயரமாக இருந்தால் கூடைப்பந்து விளையாட்டில் தூள்கிளப்பலாம். இந்தியாவில் நெடு நெடு கூடைப்பந்து விளையாட்டு வீரர்கள் இல்லாத குறையை கயும் அலி தீர்க்கப்போகிறார் என்று நம்பினார்கள். இந்திய கூடைப்பந்து அணியிலும் சேர்க்கப்பட்டார். கயும் அலிக்கு மகா சந்தோசம். அப்போதுான் விதி விளையாடியது. கனவுகளில் மிதந்த கயும் அலி மஞ்சள் காமாலை நோயில் வீழ்ந்தார். ஹோமோன் சுரப்பியில் பாதிப்பு ஏற்பட்டது. அந்தப் பாதிப்பால் கிடு கிடுவென்று நம்மூர் விலைவாசிபோல உயரத் தொடங்கினார் கயும் அலி. உடலும் பலவீனமானது.


டில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞான மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார். ஊன்றுகோலுடன்தான் நடமாடுகிறார்.

கயும் அலி வளராமல் வாழவேண்டுமானால் (உயரத்தில்) நீண்டகாலச் சிகிச்சை தேவை என்று டாக்டர்கள் கூறியுள்ளனர். அதனால் இந்திய கூடைப்பந்து அணியில் விளையாடும் கயும் அலியின் ஆசை நிராசையாகிவிட்டது.



கயும் அலியின் உயரம் 7அடி. உலகில் இன்று வாழும் மனிதர்களில் உயரமானவர் ஆலம் சன்னா. பாகிஸ்தானைச் சேர்ந்தவர் அவரது உயரம் 7அடி 7 1/4 அங்குலம். அவரது வயது 40. விட்டால் கயும் அலி அவரது உயரத்தை தாண்டிவிடுவார் போலிருக்கிறது.

## "கடவுளே கடவுளே"



நம்நாட்டிலும் சைக்கிள் ஒட்டப் போட்டிகள் நடப்பதுண்டு. சென்ற ஆண்டு நடைபெற்ற சைக்கிள் போட்டிகளில் மறக்கமுடியாத போட்டி இது.

1996 ஜூலை 19ம் திகதி இப்போட்டி ஃபிரான்ஸில் நடைபெற்றது. 'டுவர் டி ஃபிரான்ஸ்' சைக்கில் ஒட்டப்போட்டி, என்று இதற்குப் பெயர். 226.5 கிலோமீட்டர் தூரத்தைக் கடக்க வேண்டும்.

வழக்கமான போட்டிதான். காட்சிதான் புதிது. சைக்கிள் ஒட்டப் பந்தய வீரர்களுக்கு வழியில் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லாமல் தோன்றிய ஒரு ரசிகர் கூட்டம் உற்சாகக் குரல் எழுப்பியது. நல்லவேளையாக தமிழ்ப்பட ஸ்டைலில் 'கடவுளே கடவுளே' என்று சைக்கில் ஒட்டப் போட்டி வீரர்கள் மயங்கிவிழவில்லை.

சென்ற ஆண்டின் தமாஷான சம்பவங்களில் இதுவும் ஒன்றாகிவிட்டது. துணிச்சல்கார ரசிகர்கள்! ஆனாலும் இப்படியா மிரட்டுவது?!

www.padippakam.com

## இரண்டுவிதமான கதை

தமிழ் சினிமா படக்கதைகளை இரண்டுவிதமாகப் பிரிக்கிறார்கள். ஒன்று, ஆழ்வார்பேட்டைக் கதை. இன்னொன்று கோடம்பாக்கம் கதை.

கோடம்பாக்கம் கதை என்றால் வழக்கமானபாணிக் கதையாம். ஆழ்வார்பேட்டைக்கதை என்றால் புதுமையான, அல்லது சர்ச்சையான கதையாம். மணிரத்னம், பாலசந்தர், கமல்ஹாசன் ஆகியோர் சென்னையில் உள்ள ஆழ்வார்பேட்டையில்தான் குடியிருக்கிறார்கள்.

## தினந்தோறும் முரளி

முரளி-தேவயானி நடித்த பூமணி படம் நன்றாக வந்திருக்கிறது. சமீபத்தில் வெளியாகி, பெரிய படங்களுடன் தாக்குப்பிடித்து ஓடிக்கொண்டிருக்கிறது.

முரளி புதிதாக நடிக்கும் படத்துக்கு 'தினந்தோறும்' என்று பெயர் சூட்டியுள்ளனர். கதாநாயகி யார் என்பது இன்னமும் முடிவாகவில்லை.

மணிவண்ணன், கிட்டி, ஆர்.பி. விஸ்வம் ஆகியோர் நடிக்கின்றனர். திரைக்கதை, வசனம், இயக்கம் நாகராஜ். சண்டைப் பயிற்சி: விக்கிரம்தர்மா. இசை: புதிய இசையமைப்பாளர் ஓவியன். பாடல்கள்: வைரமுத்து, ஒளிப்பதிவு: அப்துல் ரகுமான்.

## வருகிறது மின்சாரக் கனவு

ஏ.வி.எம் பட நிறுவனத்தின் ஐம்பதாவது ஆண்டுவிழாவோடு வெளியாகும் படம் மின்சாரக் கனவு. பிரபுதேவா வளவளவென்று பேசும் பாத்திரத்தில் நடிக்கிறார். 'கிளைமாக்ஸ்' காட்சியில் தனது பேச்சுத் திறமையால் கஜோலின் முடிவை மாற்றுகிறார் பிரபுதேவா. அரவிந்தசாமியும் நடித்திருக்கிறார். விரைவில் திரைக்கு வருகிறது.

'மின்சாரக் கனவு' நாயகி கஜோல் நடனமாடுவதில் ரசிகர்களின் மனம் கவர்ந்தவர். இந்தியில் தனக்குப் போட்டியாக வளர்ந்துவரும் நடிகை கஜோல் என்று மாதுரி டிக்ஷித்தே சொல்லியிருக்கிறார்.

இந்தியில் 'நம்பர் வன்' இடத்தை பிடிக்கப்போகும் கஜோலை தமிழ்ப்பட ரசிகர்களுக்கும் பிடிக்காமல் போகுமா?

## வக்கீல் ஒதுங்கினார்

ஸ்ரீதேவி இரவு பகலாக உழைத்துச் சேர்த்த சொத்துக்களை உரிமையாக்க உறவினர்கள் திட்டம் போட்டார்களாம். நீதிமன்றத்திலும் வழக்குப் போட்டார்களாம்.

உறவினர்களுக்காக ஆஜரான வக்கீலை அழைத்து மனம்விட்டுப் பேசினாராம் ஸ்ரீதேவி. மனம் மாறிவிட்டார் வக்கீல். ஸ்ரீதேவிக்கு எதிராக வழக்கில் ஆஜராக மாட்டேன் என்று ஒதுங்கிக் கொண்டாராம்.

## மினி சினி

* கமல் தயாரித்து நடித்த 'சதிலீலாவதி' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்தவர் ஹீரா. இதைத் தொடர்ந்து கமலுடன் 'அவ்வை சண்முகி'யில் நடித்தார். தற்போது இந்தியில் கமல் தயாரித்து நடிக்கும் 'லேடீஸ் ஒன்லி' படத்தில் ஹீரா நடிக்கிறார்.
* 'என் ராசாவின் மனசிலே', 'வால்டர் வெற்றிவேல்' 'காலம் மாறிப் போச்சு' போன்ற படங்களில் நடித்த ராஜசந்தர், தனது பெயரை இப்போது நிர்மல் என்று மாற்றி வைத்துள்ளார்.
* ஸ்ரீதரின் 'வெண்ணிற ஆடை' படத்தில் ஜெயலலிதாவுடன் அறிமுகமான இன்னொருவர் நிர்மலா. ஜெயலலிதாவைப் போன்று இவரும் மக்கள் திலகத்துடன் இணைந்து சில படங்களில் நடித்தார். 'வெண்ணிற ஆடை' நிர்மலா இப்போது பி.வாசு இயக்கும் 'வாய்மையே வெல்லும்' படத்தில் நடிக்கிறார்.
* 'என்டே பொம்முக்குட்டி அம்மைக்கு' என்ற மலையாளப் படத்தில் பேபி ஷாலினியைக் குழந்தை நட்சத்திரமாக அறிமுகப்படுத்தியவர் பாசில். இப்போது அவரே ஷாலினியைக் கதாநாயகியாக மலையாளப் படம் ஒன்றில் அறிமுகப்படுத்துகிறார்.
* 'மகாநதி' படத்தில் 'ஸ்ரீரங்க ரங்க நாயகி...' என்ற பாடலைப் பாடிய ஷோபனா, 'மகாநதி' படத்திற்குப் பின் 'அரவிந்தன்' படத்திற்கு எஸ்.பி. பாலசுப்பிரமணியத்துடன் இணைந்து ஒரு பாடலைப் பாடியுள்ளார். இப்பாடலுக்கு யுவன்சங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.
* 'உழவன்', 'பசும்பொன்' ஆகிய படங்களில் பிரபுவுக்கு தம்பியா நடித்தவர் விக்னேஷ். இவரை 'அருணாச்சலம்' படத்தி ரஜினிக்குத் தம்பியாக நடிக்க அணுகினார்கள். இவர் வேறொ படத்தில் அதே திகதிகளில் நடித்துக்கொண்டிருப்பதா அந்த வாய்ப்பு நழுவிவிட்டது.
* விஜயகுமார்-மஞ்சுளா தம்பதிகளின் முதலாவது மகள் வனித வும், மூன்றாவது மகள் பேபி ஸ்ரீதேவியும் படங்களில் நடித் வருகிறார்கள். இவர்களின் இரண்டாவது மகள் பிரீத தெலுங்குப் படமொன்றில் கதாநாயகியாக அறிமுகமாகவுள்ளா
* இயக்குநர் சிகரம் கே. பாலசந்தரின் உதவியாளர் சரவ இயக்கும் 'காதல் மன்னன்' படத்தில் பரத்வாஜ் என இசையமைப்பாளரை அறிமுகப்படுத்துகிறார். இவர் தெலுங்கி ரமணி பரத்வாஜ் என்ற பெயரில் பல படங்களுக் இசையமைத்துள்ளார்.
* கார்த்திக்-ரக்ஷனா நடித்த 'பூவரசன்' படத்தைத் தயாரித்தவ கார்த்திக்கின் மனேஜர் கபார். அடுத்து இவர் தயாரிக்கு படத்திலும் கார்த்திக்கே கதாநாயகனாக நடிக்கிறார்.
* 'கூட்டாளி', 'ராமன் அப்துல்லா' ஆகிய படங்களில் கதாநாயகியா நடித்து வருபவர் ஈஸ்வரி ராய். இவர் சீதா பார்த்திபனி தம்பி கதாநாயகனாக நடித்த 'கவிதை பாடும் அலைக என்ற படத்தில் ஜனனி என்ற பெயரில் அறிமுகமானவர்.



ஷில்பா ஷெட்டி



"தாகம் எடுக்கிற நேரம்
வாசல் வருகுது மேகம்
மதுமழை பொழியுமா
மலர் வனம் நனையுமா?
இனி சந்தனப் பூக்களில்
சிந்தும் மகரந்தம்."

ஐஸ்வர்யா ராய்
படம்: ஜீன்ஸ்

## உளவுத்துறையில் 7 சண்டைகள்

### விஜயகாந்தின் 125வது படம்

விஜயகாந்த் நடித்து தீபாவளிக்கு வெளியான படம் அலெக்சாண்டர். தீபாவளிப் படங்களில் வசூலில் மூன்றாம் இடத்தை பெற்று இப்போதும் ஓடிக்கொண்டிருக்கிறது.

1978ல் 'இனிக்கும் இளமை' படம் மூலம் அறிமுகமானவர் விஜயகாந்த். இது வரை 123 படங்களில் நடித்து முடித்து விட்டார். 124வது படம் 'தர்மசக்கரம்' அதில் ரம்பாவுடன் முதன்முதலாக ஜோடி சேர்ந்துள்ளார் விஜயகாந்த்.

விஜயகாந்தின் 125வது படம் உளவுத்துறை. விஜயகாந்தின் ஜோடிகளாக மீனாவும், சங்கவியும் நடிக்கின்றனர். படத்தில் 7 சண்டைக் காட்சிகள் இருக்குமாம். விமானத்துக்குள்ளும் ஒரு சண்டைக்காட்சி எடுக்கப்படுமாம்.

கடற்படை அதிகாரியாக விஜயகாந்த் நடிக்கிறார். பெரும்பாலான காட்சிகள் கடலில்தான் படமாக்கப்படும். கடலுக்கு அடியிலும் சண்டைக் காட்சி எடுக்கப்பட உள்ளது.

இது விஜயகாந்தின் சொந்தப்படம். பெரும் பொருட்செலவில் எடுக்கப்போகிறார். ஷா என்னும் புதிய இசையமைப்பாளர் அறிமுகமாகிறார். வசனம்: லியாகத் அலிகான். திரைப்படக் கல்லூரி மாணவன் ரமேஷ் செல்வன் இயக்குகிறார். டிசம்பர் 13இல் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

## ஜெயராம்-சுருதி ஜோடி

பாலச்சந்தர். இயக்கத்தில் சர்ச்சைகளை கிளப்பியுள்ள படம் 'கல்கி'. தீபாவளிக்கு வெளியான படங்களில் அவ்வை சண்முகிக்கு அடுத்த இடத்தில் இருக்கிறது கல்கி. முதலில் வசூல் நிலவரம் சரியாக இருக்கவில்லை. படத்தின் கதை பற்றி எழுந்த சர்ச்சைகள் விளம்பரமாக அமைந்துவிட்டன. இப்போது வசூல் நிலவரம் ஓ.கே.

'கல்கி' பட நாயகி சுருதிக்கும் புதிய புதிய தமிழ்ப்பட வாய்ப்புக்கள் தேடிச் செல்லுகின்றன.

ஜெயராமுடன் ஜோடியாக சுருதி நடிக்கப்போகும் புதிய படம் 'ராஜாமகள்.' இந்தப் படத்தின் கதையும் புதுமையாக இருக்குமாம்.

வெற்றிப்பட இயக்குநர் குருதனபால் இதனை இயக்கப்போகிறார். இசை: சிற்பி பாடல்கள்: பழனிபாரதி. கவுண்டமணி, பிரகாஷ்ராஜ், மணிவண்ணன், கீதா உட்பட பலர் நடிக்கின்றனர்.

## 'கடவுள் ரெடி'

'அசுரன்' படத்தை இயக்கியவர் வேலு பிரபாகரன். தற்போது 'சிவன்' படத்தை இயக்கி வருகிறார். 'சிவன்' படம் முடிந்ததும் அவர் இயக்கப்போகும் புதிய படத்தின் பெயர் என்ன தெரியுமா? 'கடவுள்'.

'கடவுள்' படத்தில் அருண்பாண்டியன்- ரோஜா ஜோடியாக நடிக்கின்றனர். மன்சூரலிகான், மணிவண்ணன், மனோரமா, ராதாரவி, ஜனகராஜ் ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இசை: பிரதீப்ரவி. பாடல்கள்: வைரமுத்து. வசனம்: பாலகுமாரன்.

## ரஜினி படம் எங்கே?

ரஜினியின் 'அருணாச்சலம்' வேகமாக வளர்ந்து வருகிறது. ஆனாலும் படத்தின் 'புகைப்படங்களை' இன்னமும் வெளியிடவில்லை. அதனால் தமிழக சினிமா சஞ்சிகைகள்கூட ரஜினியின் முன்னைய பட ஸ்டில்களை வெளியிட்டு 'அருணாச்சலம்' படச் செய்தியை பிரசுரிக்கின்றன. அதனால் பத்திரிகையாளர்கள் ரஜினியின் உதவியை நாடியிருக்கிறார்கள். விரைவில் 'அருணாச்சலம்' பட ஸ்டில்கள் வெளியாகும்.

## அந்த மூன்றுபேர்

அநேகமாக சகல தமிழ்ப்படங்களிலும் அந்த மூன்று நடிகர்கள் நடித்துக்கொண்டிருக்கிறார்கள். மணிவண்ணன், கவுண்டமணி, பிரகாஷ்ராஜ் ஆகியோர்தான் அந்த மூன்றுபேர்.

மணிவண்ணனுக்கும், பிரகாஷ்ராஜ்க்கும் 96ம் ஆண்டு அமோகமான ராசியான ஆண்டு.

## குறைந்த இறக்குமதி

95ம் ஆண்டில் தமிழ்ப்படங்களில் மும்பாய் நடிகைகள் பலர் முகம் காட்டினார்கள். (முகம் மட்டுமா காட்டினார்கள்?) 96ம் ஆண்டில் மும்பாய் நடிகைகள் மீதான மோகம் குறைந்திருந்தது. புது முகங்களைத் தேடிப்பிடித்து நடிக்க வைத்தார்கள்.

ஷில்பாஷெட்டி, மனிஷா கொய்ராலா, ஊர்மிளா, ரவீனா ராண்டன், என்று பல மும்பாய் நடிகைகள் தமிழுக்கு வந்தது 95 இல் தான்.

97 இல் எப்படியோ?

## "பாடலில் இல்லை அ

தமிழ்ப்பட உலகில் இப்போது பி பாடலாசிரியர் பழனிபாரதி. 'பெ முதல் 'அருணாச்சலம்' படம் வரை எழுதி முடித்துவிட்டார்.

"பாடல்களில் செக்ஸ் உ காட்டலாமா? தவறு இல்லையா?" நீண்டதொரு விளக்கம் தந்திரு பாரதி.

"செக்ஸ் என்பது ஒவ்வொரு ம இருப்பதுதான். அதை அருவருப் வெளிப்படுத்துவதுதான் தவறு. அ யாகவோ வேடிக்கையாகவோ சொல்

கண் பார்வையே இல்லாத அ வீரராகவ முதலியார் மான்குள பெண்ணுடைய அல்குல்" என்று கிறார்.

மாரளவு தண்ணியிலே
மன்னி மன்னிப் போற
பெண்ணே—உன்
மார்புக்கு கீழிருக்கும்
மாதுளங்காய் என்ன வில

இது நமது நாட்டுப்புறப்ப கம்பன் சீதையை வர்ணித்த அளவ சினிமாப் பாடல்களில் யாரு எழுதியதில்லை. இலக்கியத்தில் ரசிக்க முடிந்ததை ஏன் சினிமாவில் ரசிக்க முடியாது?" என்று கேட்கிறார் பழனிபாரதி.



முகப்பில்
பிரபுதேவா
ஷில்பாஷெட்டி

விக்ரம்-மகேஸ்
படம்: உல்லா


படிப்பகம்

www.padippakam.com


ஓவியா
படம் காதல்படிகள்

# சினிவிசிட்

# வலையில் வீழ்ந்தார் நக்மா!
## மலேசியாவில் புது அனுபவம்

நட்சத்திர கலைவிழாக்களுக்கு செல்லும் நடிகைகள் சிலர் வேறு பல சேவைகள் மூலம் பை நிறையப் பணத்தோடு திரும்புவது பரகசியம்.

மலேசியாவுக்கு நட்சத்திரக் கலைவிழா நடத்தச் சென்ற நக்மா நிகழ்ச்சி ஏற்பாட்டாளரின் வலையில் வீழ்ந்ததுதான் பரபரப்பான சங்கதி.

திரைமறைவில் நடந்த சங்கதியை மலேசிய வார இதழ் ஒன்று முன் பக்கத்தில் வெளியிட்டு சந்திக்கு கொண்டுவந்திருக்கிறது.

'அரும்பு' என்னும் மலேசிய வார இதழ் வெளியிட்டுள்ள செய்தியை அப்படியே தருகிறோம்.

ஆர்ப்பாட்டம், ஆரவாரத்துடன் நடத்தப்பட்ட ஏ.ஆர்.ரகுமானின் இன்னிசை நிகழ்ச்சிக்குப் பின்னே பல திடுக்கிடும், மனம் நோகும் கசப்பான சம்பவங்கள் அரங்கேறியுள்ளன.

இது ஒரு புறமிருக்க நிகழ்ச்சியைக் காண 40 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்தனர். அத்தனை பேருக்கும் பெருத்த ஏமாற்றம். ஏனெனில் ரசிகர்கள் ஏ.ஆர்.ரகுமானின் இசையை மட்டும் கேட்க முடிந்ததே தவிர பேச்சையோ, பாடல்களையோ கேட்கமுடியவில்லை. மைக் சிஸ்டம் சரியாக இல்லாமையால் எதிரொலியானது இசை நிகழ்ச்சியை சரியாக ரசிக்க முடியாமல் செய்துவிட்டது.

இன்னிசை கச்சேரி ஏமாற்றத்துடன் முடிந்தபின்னர் நடைபெற்ற சம்பவம் ஒன்று திடுக்கிட வைக்கக்கூடியது.

நவம்பர் 3ம் திகதி இரவு 11 மணிக்கு சென்னைக்கு தமிழக நடிகர்கள் பயணமாக இருந்தனர். அன்று காலை பத்துமணிக்கெல்லாம் அவர்கள் ஹோட்டல் அறைகளைக் காலி செய்ய வேண்டும் என்று பணிக்கப்பட்டனர். எல்லா நடிகர் நடிகைகளும் காலையிலேயே ஹோட்டலைவிட்டுப் புறப்பட்டனர்.

ஆனால் நடிகை நக்மா மட்டும் ஹோட்டலைவிட்டு வெளியேறமுடியாத நிலை. தமிழ்நாட்டின் பிரபல நடிகர் ஒருவரோடு தொலைபேசியில் பல மணிநேரம் பேசினாராம் நக்மா. போன் பில் பயங்கரமாக வந்துவிட்டது. கிட்டத்தட்ட 4 ஆயிரம் ரிங்கிட் செலுத்தவேண்டும்.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அப்பணத்தைக் கட்டுமாறு நக்மாவை பிடித்துக் கொண்டார்கள். கொண்டுபோன பணத்தில் பொருட்கள் வாங்கி விட்டார். உடனடியாக தமிழ்நாட்டிலிருந்தும் பணம் தருவிக்க முடியாது. வெளியே தெரிந்தாலும் வெட்கக்கேடு.

இறுதியில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் ஒருவரின் இச்சைக்கு நக்மா இணங்கிப் போகவேண்டியிருந்தது. நக்மாவை தன் வலையில் வீழ்த்தத்தான் குறிப்பிட்ட நிகழ்ச்சித் தயாரிப்பாளர் பணத்தைக் கட்டுமாறு நெருக்குதல் கொடுத்திருக்கிறார். இவ்வாறு 'அரும்பு' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நக்மா மலேசியாவில் இருந்து நீண்ட நேரமாக பேசிக்கொண்டிருந்த நடிகர் யார் தெரியுமா சரத்குமார்.

நக்மாவும்- சரத்குமாரும் முன்னர் பிரபு-குஷ்புபோல நெருக்கமாகி விட்டார்கள். கோடம்பாக்க சினிமா உலகில் சமீபகால மங்களமான கிசு கிசு அதுதான்.

# பாலாவின் மகன் அறிமுகம்

தமிழ்ப் படங்களுக்கு பெயர் சூட்டுவதற்கு நல்ல பெயர் தேடிக் களைத்துப் போனார்கள். அதனால் ஆங்கிலப் பெயராகவே சூட்டிவிட்டார்கள்.

படத்தின் பெயர்: 'வான்டெட்'. சாதாரண படமல்ல, பிரமாண்டமாகத் தயாராகப்போகும் படம். பிரபலங்களின் வாரிசுகள் ஒன்று சேர்ந்து படத்தை உருவாக்கப் போகிறார்கள். கங்கை அமரவின் மகன் வெங்கட், பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் மகன் எஸ்.பி.பி. சரண் இருவரும் கதாநாயகர்களாக நடிக்கிறார்கள். எஸ்.பி.பி. சரண் அமெரிக்காவில் பி.பி.ஏ. படித்தவர். இதுதான் அவருக்கு முதல் படம்.

படத்தின் கதை, வசனம் எழுதுபவர் பிரேம்ஜி. இவரும் கங்கை அமரனின் மற்றொரு மகன். படத்துக்கு இசை: யுவன் சங்கர்ராஜா. அவர் இளையராஜாவின் மகன்.

கதாநாயகியாக நக்மாவின் தங்கை ரோஷினியும், மந்த்ராவும் நடிக்கின்றனர்.

மணிவண்ணன், கவுண்டமணி, செந்தில் ஆகியோருடன் கங்கை அமரனும் நகைச்சுவை நடிகராக அறிமுகமாகிறார். எஸ்.பி. பாலசுப்பிரமணியமும் முக்கிய வேடமொன்றில் நடிக்கிறார்.

# நாசரின் 'தேவதை'

'அவதாரம்' படத்தை இயக்கியவர் நடிகர் நாசர். படம் நன்றாக இருந்தும் வசூலில் தோல்விகண்டது. ஜனரஞ்சகமாக அமையவில்லை என்ற விமர்சனம் எழுந்தது.

'அவதாரம்' படத்தின் தோல்வியோடு நாசர் இயக்குநர் வேலைக்கு கும்பிடு போட்டுவிட்டார் என்றே கருதப்பட்டது.

ஆனால், சத்தமே இல்லாமல் ஒரு படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார் நாசர். படத்தின் பெயர்: 'தேவதை' கதாநாயகனாக நடிப்பவர் வினீத். கதாநாயகி புதுமுகம். பெயர்: கீர்த்தி. ஏனைய விபரங்கள் இதுவரை சஸ்பென்ஸ்.


அரவிந்தசாமி-சாக்ஷி
படம் புதையல்

# காதல் கலவரம்

ரவிச்சந்திரன் 'கல்கி' பட நாயகி சுருதி இணைந்து நடித்த கன்னடப் படம் ஒன்று தமிழுக்கு மொழி மாற்றப்படுகிறது. படத்திற்கு தமிழில் சூட்டியுள்ள பெயர் 'காதல் கலவரம்'.

பானுப்பிரியாவை பார்க்க விருப்பம் உள்ளவர்கள் இப்படத்தில் அவரைத் தாராளமாகக் காணலாம். அவரும் தாராளமாகவே நடித்திருக்கிறார்.

..."ாசம்"

...க இருக்கும் ...ள்ளி' படம் ...ாடல்களை

...ள் தலை ...கேள்விக்கு ...ார் பழனி

...ுக்குள்ளும் ...முறையில் ...வெளிப்படை ...தவறில்லை. ...காலக் கவி ...போன்றது ...ர்ணித்திருக்

# ஊர்மிளா சவாரி

சஞ்சய்தத் சிறையிலிருந்து வந்தபின் சிலகாலம் ஓய்வாக இருந்தார். இப்போது மீண்டும் நடிக்கத் தொடங்கிவிட்டார். நடிக்கத் தொடங்கினாலே யார் மீதாவது பிடிப்பு வரத்தானே செய்யும்.

சஞ்சய்தத்தின் அபிமானம் பெற்றிருப்பவர் 'ரங்கீலா', 'இந்தியன்' படங்களின் மூலம் புகழ்பெற்ற ஊர்மிளா. சஞ்சய்தத்தின் முதுகில் ஊர்மிளா சவாரி செய்யும் அட்டகாசமான காட்சிகளை வெளியிட்டுள்ளன மும்பாய் சஞ்சிகைகள்.

அதனைப் பார்த்துவிட்டு முகம் சுளித்தவர்களில் முக்கியமானவர் நடிகர் ஜாக்கிஷெரப். ரங்கீலா படப்பிடிப்பில் ஊர்மிளாவுடன் அவர் அடித்த கூத்துக்கு யார் முகம் சுளிப்பதாம்?


பிரபுதேவா-கஜோல்
படம் மின்சாரக்கனவு

# பிரபுதேவாவை மறக்க முடியாது
## ஷில்பா ஷெட்டி பாராட்டு

'மிஸ்டர் ரோமியோ' படத்தின் மூலமாக தமிழ்ப்பட ரசிகர்களின் நெஞ்சங்களைக் கிள்ளியவர் ஷில்பாஷெட்டி.

ஆனால் ஷில்பாஷெட்டியின் நெஞ்சத்தை கிள்ளியவர் பிரபுதேவாதான். "நானும் இந்தியில் எத்தனையோ ஹீரோக்களுடன் நடித்துவிட்டேன். பிரபுதேவாவைப் போல் ஒரு துடிப்பான ஹீரோவைப் பார்த்ததில்லை" என்று சொல்லி இருக்கிறார் ஷில்பா.

இந்தியில் படங்களில் நடிக்கும்போது நடன இயக்குநர்கள் எப்படி நடன அசைவுகள் இருக்க வேண்டும் என்று சொல்லித் தருவார்கள். பெரும்பாலும் என் தொப்புள் அழகை வெளிப்படுத்தும் நடன அசைவுகள்தான் இருக்கும். ஆனால் பிரபுதேவாதான் என் உடலமைப்புக்கு எந்த மாதிரியான நடனம் ஒத்துவரும் என்று சொல்லித்தந்தார். அதனால்தான் 'மிஸ்டர் ரோமியோவில் என் நடனத் திறமை முழுவதும் பளிச்சிட்டது' என்றும் புகழ்ந்திருக்கிறார்.

"பிரபு தேவா கூச்ச சுபாவம் உள்ளவர். அதனால் நான்தான் அவருக்கு தைரியம் கொடுக்க வேண்டியிருந்தது. இந்திப்பட ஹீரோக்கள் சிலர் அப்படியில்லை. கொஞ்சம் அசந்தால் உண்டு இல்லையென்றாக்கி விடுவார்கள். முரட்டுத்தனமாகவும் 'டூயட்' காட்சிகளில் நடந்துகொள்வார்கள். பிரபுதேவா மிக இயல்பாக நடந்துகொண்டார். அவரை நான் மறக்கமாட்டேன். மீண்டும் அவருடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் மகிழ்ச்சியோடு நடிப்பேன்." என்று மறைமுகமாக மனுப்போட்டிருக்கிறார் ஷில்பாஷெட்டி.

# முகமுறிவு

நடிகை மீனாவும் ரம்பாவும் ஒருவரை ஒருவர் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொண்டு செல்கிறார்களாம். 'அருணாச்சலம்' படத்தில் ரம்பா வாய்ப்பைப் பிடித்தது மீனாவுக்குக் கோபமோ? விஷயம் அதுவல்லவாம். தெலுங்குப் பட தயாரிப்பாளர் ஒருவர் தொடர்பாக ஏற்பட்ட மோதல்தான் முகமுறிவில் வந்து நிற்கிறதாம்.

மீனாவுக்கு பல வழிகளிலும் உதவிய குறிப்பிட்ட தயாரிப்பாளர் இப்போது ரம்பா புராணம் பாடுகிறாராம்.

# பழிக்குப் பழி

நடிகை ரவீனா ராண்டன் அக்ஷய்குமாரை தீவிரமாகக் காதலித்தது தெரிந்த சங்கதி. அக்ஷய்குமார் மலர் பல தாவும் வண்டாக பல நடிகைகளுடன் நெருக்கமாக இருக்கிறார். இறுதியாக ஐஸ்வர்யா ராயுடன் காணப்படுகிறார். அக்ஷய்குமாரை பழிக்குப் பழி வாங்க வேண்டாமா? ரவீனா ராண்டன் இப்போது வேறு ஒரு நடிகருடன் சுற்றுகிறார். அந்த நடிகர் சஞ்சய்கபூர். சஞ்சய்கபூரின் பிறந்தநாள் விழாவில் ரவீனாதான் பிரதம விருந்தாளர்.

# கஜோலும் கானும்

இந்தியில் வேகமாக முன்னேறிவரும் நடிகை கஜோல். நடிகர் அஜய் தேவ்கானை கஜோல் திருமணம் செய்யப்போவதாக பேச்சு அடிபடுகிறது.

இதற்கிடையே நடிகர் சல்மான்கானின் சகோதரர் தயாரிக்கும் படம் ஒன்றில் நடிக்க பெரும் தொகையான சம்பளம் வாங்கியிருக்கிறார் கஜோல். அதனைச் சாக்காக வைத்து கஜோலை அடிக்கடி சந்திக்கிறார் சல்மான்கான்.

கஜோலும் சல்மான்கானுடன் காரில் வெளியே சுற்றுவதாகத் தகவல். எங்கு போய் முடியுமோ?

# குஷ்புவின் 'தாலி புதுசு'

குஷ்பு, ராம்கி இணைந்து நடித்த 'இரட்டை ரோஜா', 'எனக்கொரு மகன் பிறப்பான்' இரண்டும் வெற்றிப்படங்களாக அமைந்தன. இரண்டு படங்களையும் இயக்கியவர் கேயார்.

கேயார் இயக்கத்தில் ராம்கி, குஷ்பு இருவரும் புதிய படமொன்றில் மீண்டும் ஜோடி சேருகிறார்கள். 'தாலிபுதுசு' என்று படத்திற்கு பெயர் சூட்டியுள்ளனர். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தமிழில் சுரேஸ் நடிக்கும் படமும் இதுதான்.

மணிவண்ணன், ராஜேஷ், செந்தில் ஆகியோரும் நடிக்கவுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com



அட் வைவஸ்

# டேக் இட் ஈஸி

டேக் இட் ஈஸி

வாழ்க்கை வாழ்வதற்கே. எப்படியும் வாழலாம் என்று வாழ்பவர்களும் இருக்கிறார்கள். இப்படித்தான் வாழ வேண்டும் என்று தமக்கென ஒரு வாழ்க்கை நெறியினை வகுத்துக்கொண்டு வாழ்பவர்களும் இருக்கிறார்கள்.

எது எவ்வாறாக இருப்பினும், உங்கள் வருங்காலத்தை எண்ணி உங்கள் வாழ்க்கைப் பாதையைச் சிறிது தானும் மாற்றி அமைத்துக் கொண்டால் சிரமமில்லாமல் வாழ்ந்து



சிறப்படையலாம்.

நல்ல வாழ்க்கைக்கு உடல் நலமும் உள நலமும் அவசியம். இந்நலன்களைப் பெற பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. அன்றாட வாழ்க்கையில் ஒரு சிறு மாறுதலைச் செய்தால் அதுவே பெரு நன்மையைத் தரும் என்று கூறுகிறார் ஷியான் சேவர் என்ற உடல்-உளவள ஆய்வாளர்.

பல சஞ்சிகைகளில் மாதர்களுக்கான உடற்கூற்றியல் பற்றிய அறிவுரைகளை வழங்கிவரும் இவர், தற்போது, எழுதிக் கொண்டிருக்கும் 'வாழ்க்கைக்கான அளவுப் பொருத்தங்கள்' என்ற நூலிலிருந்து பெறப்பட்ட 'உங்கள் வளமான வாழ்வுக்கு 12 வழி'களைத் தருகிறோம்:

1. பழமையானவற்றை ஒருபுறம் ஒதுக்கி விடுங்கள். எதிர்காலம் வெறுமனே சுருண்டு படுக்கும் படுக்கையாக இருக்காமல் உங்களைத் துள்ளிக்குதித்து சுறுசுறுப்பாக இயங்க வைக்கத் தூண்டும் கருவியாக இருக்கட்டும்! பயிற்சியை காலம் தாழ்த்தாமல் இன்றே ஆரம்பித்து விடுங்கள்.

கொழுப்பற்ற, இனிப்புக்குறைவான உணவே உங்களுக்கு உகந்தது. இதனால் நீங்கள், எப்போதும் சோம்பலற்று சுறுசுறுப்பாக வாழமுடியும்.

2. தினசரி 42 நிமிட நேரம் ஓரளவு வேகமாக நடவுங்கள். தனிமையில் நடக்க முடியாவிட்டால் உங்கள் நெருக்கமான சிநேகிதிகளை உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். இதனால் உங்கள் உடம்பிலுள்ள திசுக்களுக்கு நல்ல ஊட்டம் கிடைப்பதற்கேற்றவகையில் இரத்த ஓட்டம் வேகமடையும்; சோம்பல் பறந்தோடிவிடும்.

3. வெண்ணெய் (பட்டர்) வாய்க்கு உருசியாகத்தான் இருக்கும். பட்டாணி, பூண்டு, இஞ்சி, கொத்தமல்லிக்கீரை இவற்றுடன் சிறிதளவு உப்பையும் சேர்த்து அரைத்த பச்சடியை எலுமிச்சைப்புளிவிட்டு சேர்த்து உணவில் சேர்த்துக்கொள்ளலாம். இதனால் நல்ல சக்தியைப் பெறலாம். பட்டரை மறந்து விடுங்கள்!

4. பாரம் தூக்கும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இடுப்புப் பிடிப்பு, முதுகுவலி போன்ற பிரச்சனைகள் உள்ளவர்கள் எத்தகைய பாரங்களையும் தூக்க முற்படலாகாது. மேற்படி உபாதைகள் இல்லாதவர்களும் கூட கீழே இருக்கும் ஒரு பொருளை மேலே தூக்கும்போது, கவனம் தேவை, முதுகை வளைக்கலாகாது. முழங்காலை மடக்கி, மூச்சை உள்ளிழுத்து தசைகளுக்கு அழுத்தம் கொடுத்துத்தான் பின்னர் பொதியைத் தூக்க வேண்டும்.

5. உங்கள் உடலுக்கு பழரசங்கள், குளிர்ப்பானங்கள் போன்றவற்றைவிட வெறும் தண்ணீரே சிறந்தது. ஒவ்வொரு நாளும் 8 கிளாஸ் தண்ணீர் அருந்துங்கள். வெள்ளரிக்காய், காறட், கீரைவகைகள் போன்றவற்றையும் போதுமான அளவு உட்கொள்ளலாம். இவற்றில் போதுமான அளவு விட்டமின்களும் தாதுக்களும் புரதங்களும் உள்ளன.

6. பாதங்களில் பித்த வெடிப்புக்கள் தோன்றி உபாதை கொடுப்பதுடன் அழகினையும் கெடுத்துவிடும். எப்போதும் பாதங்களை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பித்த வெடிப்பு உள்ளவர்கள் வெந்நீரால் பாதங்களை சுத்தமாகக் கழுவித்துடைத்து விட்டு 'வெஸ்லின்' களிம்பினை அல்லது வெண்ணெய்யைத் தடவி வர குணமாகிவிடும். குதி உயரமில்லாத பாதணிகள் பயன்படுத்தலாம்.

7. எந்த நேரத்திலும்- எதற்கும் பதட்டப்படாமல் நிதானமுடன் இருக்கப்பழகிக் கொள்ளுங்கள். ஏதாவது முக்கியமான பணியிலீடுபட்டுக்கொண்டிருக்கும் போது, முன்புறம் வீட்டு மணியை யாரோ அழுத்துகிறார்கள், என்று வைத்துக் கொள்ளுங்கள். அவசரமோ ஆத்திரமோ இல்லாமல்- கையிலிருக்கும் பணியினை வைத்துவிட்டுப் போய்க் கதவைத் திறவுங்கள். அவசரப்படுவதனால் ஆத்திரம்மேலிட்டு மன அழுத்தம் ஏற்படலாம். இவ்வாறு அடிக்கடி அழுத்தம் ஏற்படுவதனால் இரத்தக் கொதிப்பு, ஆஸ்துமா, தொடர் தும்மல் போன்றவை வந்துவிடும், இச்சமயங்களில் அமைதியாக நின்று சில தடவைகள் ஆழமாக மூச்சை உள் இழுத்து விட்டபின்னர் வாயிற் கதவைத்திறக்கச் செல்லலாம்.

8. அதிகமான உப்பு உங்கள் சிறுநீரகத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம். உப்புடன் மிளகுதூள் மற்றும் கறுவாப் பொடி சேர்ப்பதனால் உப்பினால் ஏற்படும் பாதிப்புச் சமனாகும்.

9. காலையிலோ அல்லது மாலையிலோ சிறிதளவு நேரம் தியானத்தில் அமர்வது உள-உடல் பாதிப்புக்களிலிருந்து நிவாரணம் கிடைக்க வழி கோலும். இதற்காகத் தனியான நேரம் ஒதுக்க முடியாதவர்களும்கூட, தாங்கள் அலுவலகத்திலிருக்கும் போதே, நாற்காலியிலிருந்த வண்ணமே புலன்களை ஒரு நிலைப்படுத்தி தியானத்தில் ஈடுபட முடியும்.

10. குளிர்சாதன (உணவுப் பாதுகாப்பு)ப் பெட்டிகளை வீட்டில் வைத்திருக்கும் பெண்கள் மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அப் பெட்டிக்குள்ளிருக்கும் தின்பண்டங்கள் உங்கள் வாயில் நீரூறச் செய்யக்கூடும். அவை உங்களுக்கு உண்ணும்போதுமட்டும் உற்சாகத்தையும் உவப்பையும் தரும். ஆனால் உங்கள் அழகிய தோற்றத்தைக் கெடுத்து விடும். அதுமட்டுமல்லாமல் தேகாரோக்கியத்தையும் பாதிக்கும்.

11. பலவித நோய்களுக்குமாக உங்கள் வீட்டிலுள்ளவர்களும் (நீங்களும்) அடிக்கடி மருந்து- மாத்திரைகளை வாங்கி வைத்திருப்பீர்கள். ஒவ்வொருவருடைய மருந்துகளும் தனித்தனியாக வைக்கபட்டிருக்க வேண்டும். மருந்துக் கடைகளில் மருந்து- மாத்திரைகள் வாங்கும்போது அவற்றின் இறுதிக் காலம்பற்றித் திட்டவட்டமாகப் பார்த்து வாங்க வேண்டும்.

12. நீங்கள் எந்தவகையிலும் தாழ்ந்தவர்களல்ல. தாழ்வு மனப்பான்மைக்கு எந்த வகையிலும் இடம் தரலாகாது. சில சந்தர்ப்பங்களில் சில பிரமுகர்களுடன் உறவாடும்போது, உங்களிடமில்லாத ஏதோ சில அம்சங்கள் அவர்களிடம் இருக்கக் கூடும். இதனால் அத்தகைய ஆற்றல் உங்களிடம் இல்லையே என்ற ஏக்கம் உங்களிடம் தலைகாட்ட இடமளிக்கலாகாது. அவர்களிடம் விவாதிப்பதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்த்து, உங்கள் கதைகளைக் கட்டுப்படுத்தி, அவர்கள் கூறுவதைக் கேட்டுக் கொள்வது நல்லது.

அவர்களிடம் சில திறமைகள் கூடுதலாக இருந்தால், உங்களிடம் வேறுபல துறைகளில் ஆற்றல் கூடுதலாக இருக்கும். எல்லாரும் எல்லாத்துறையிலும் விற்பந்நராக இருக்க மாட்டார்கள் அல்லவா?

# சுமைதாங்கியாக நினைக்க வேண்டாம்!

## கவனிக்க வேண்டிய கழுத்தழகு!

'சங்கு போன்ற கழுத்துடையவள்' என்று இலக்கியத்தில் படித்திருக்கிறோம். பளிச் சென்றிருக்கும் வழுவழுப்பான கழுத்தே ஒரு பெண்ணுக்கு அணிகலன்! கவர்ச்சியைக் கூட்டிக்காட்டும் அற்புதமான பகுதி. ஆனால் எத்தனை பெண்கள் கழுத்தைப் பளபளப்பாக, அழகாகப் பேணிக்காக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்? பெரும்பாலான பெண்களுக்குக் கழுத்து- நகைகளைச் சுமக்கும் சுமைதாங்கி- வீட்டில் ஆடைகளைத் தொங்கிவிடும் 'ஸ்டான்ட்' போல. அதற்கு மேல் கழுத்துக்கு எந்த மரியாதையும் கொடுப்பதில்லை.

ஒவ்வொரு பெண்ணும் சற்றுக் கழுத்தைப் பேணிக்காப்பதில் அக்கறை காட்டினால் அதை உண்மையாக்க முடியும். அழகுசாதனப் பொருட்களை விற்கும் கடைகளில் கழுத்துக்கான 'நெக் கிறீம்' நிறைய விற்கப்படுகின்றன. தரமான கம்பெனியின் தயாரிப்பா என்பதைப் பார்த்து வாங்குவது அவசியம்.

'நெக் கிறீம்'களுக்குப் புகழ்பெற்ற சுவிற்ஸர்லாந்து, ஃபிரான்ஸ் போன்ற நாடுகளில் தயாரிக்கப்படும் கிறீம்கள் கூட- சற்றுச் சிரமம் பாராமல் பெரிய கடைகளில் ஏறி, இறங்கினால் கிடைக்கும். நடுத்தர வர்க்கத்தின'ருக்குக் கூடக் கட்டுப்படியாகும் விலைதான். காலை, மாலை இரண்டு வேளைகளிலும் சிறிது வழித்துக் கழுத்தில் போட்டுக் கொண்டு இலேசாக சிறிது நேரம் மஸாஜ் செய்யவேண்டியது தான்.

கிறீம் போட்டுக் கொள்வதற்கு முன்பு சில விஷயங்களைக் கவனிக்க வேண்டும். தினமும் முகத்தைக் கழுவுவதைப் போன்று கழுத்தையும் நல்ல சோப்பால் தேய்த்துக் கழுவுவது முக்கியம். துடைத்து லேசாக உலர்ந்தவுடன் கிறீமைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துத் தடவ வேண்டும்.

நல்ல கிறீம் என்பது பளபளப்பான ஈரப்பசையைக் கொடுப்பதுடன் கழுத்து தசைகளில் தொய்வு ஏற்படாமல் இறுக்கத்தையும் ஏற்படுத்தும். இந்த இறுக்கத்தை ஏற்படுத்துவதற்காகவே சில விசேஷ கலவைகளைச் சேர்த்திருப்பார்கள்.

எல்லோருக்கும் ஒரே 'நெக் கிறீம்' ஒத்து வருவதில்லை. சில பெண்களுக்கு எப்பொழுதும் கழுத்துப்பகுதி உலர்ந்திருக்கும். சிலர் 24 மணிநேரமும் ஏ.சி.யிலேயே உட்கார்ந்திருப்பார்கள். இன்னும் சிலர் காலையிலிருந்து பொழுது சாயும்வரை வெய்யிலிலேயே அலைவார்கள்.

கொஞ்ச நேரம் ஏ.சி.யில் உட்கார்ந்திருந்தால் அடுத்த சில மணி நேரம் வெய்யிலில் அலையும் பெண்களும் உண்டு. இப்படிப்பட்ட பெண்கள், தங்களுக்கேற்ற 'நெக் கிறீம்'களை அழகு நிலையங்களில் உள்ள நிபுணர்களைக் கலந்தாலோசித்துக் கொண்டு வாங்க வேண்டும்.

அடுத்து, மசாஜ் செய்து கொள்வது. கிறீமை தடவிக்கொள்வதோடு வேலை முடிந்து விடுவதில்லை. முறையாக மசாஜ் செய்யும்போதுதான் முழுப்பலனையும் எதிர்பார்க்க முடியும்.

இன்னொரு முக்கியமான விஷயம்! ஏற்கனவே கழுத்தில் மடிப்புக்கள் அல்லது கோடுகள் இருந்தால் அதைக் கிறீம் தேய்த்து மசாஜ் செய்வதன் மூலம் போக்கி விட முடியாது. இதனால் புதிய சுருக்கங்கள் வருவதை மட்டுமே தடுக்க முடியும்.

நிரந்தரமாக விழுந்து விட்ட சின்னச் சின்ன மடிப்புகள், சுருக்கங்களை பிளாஸ்டிக் சேர்ஜரி மூலமாக மட்டுமே சரி செய்ய முடியும்.



கழுத்து மசாஜ் என்பது அழகுக்கு மட்டுமல்ல; கழுத்தில் தாங்க முடியாத வலியைக் குணப்படுத்துவதற்கும்தான். தொடர்ந்து டைப் அடிக்கும் வேலை, நீண்ட தூரம் கார் ஓட்டுவது போன்ற பல காரணங்களால் கழுத்துத் தசைகள் இறுகிப்போய் தீராத வலியைக் கொடுக்கும்.

இரவில் படுத்தால் பெரும் அவஸ்த்தையாகிவிடும். இப்படி அவஸ்த்தைப்படும் பெண்களுக்குக் கழுத்து மசாஜ் ஓர் அற்புத மருந்து. மசாஜ் செய்யும்போது கழுத்து என்பது மிகவும் நுண்ணிய ஓர் அங்கம் என்பதை மறந்து விடக்கூடாது. ஏடாகூடமாகச் செய்தால் எக்கச்சக்கமாகக் கழுத்தில் சுளுக்கு ஏறிக்கொண்டு மருந்தே நோயாகி விடும். கவனம்.

தொண்டையின் இரண்டு புறமும் இரு கைவிரல்களையும் வைத்துப் பதித்து மெதுவாகத் தாடையை நோக்கி நீவி விடுவது. திரும்பவும் தொண்டையை நீக்கி வருவது. பின்கழுத்தில் ஒரு கையும், தாடையில் ஒரு கையும் வைத்துக்கொண்டு மெதுவாக அழுத்தம் கொடுப்பது. இது போன்று கழுத்து மஸாஜில் சிலவகைகள் உள்ளன.

உங்களுக்கு எது சிரமம் இல்லாமல் பலனளிக்கும் என்பதை அருகிலுள்ள அழகு நிலையங்களில் தெரிந்து கொண்டு அதன் பின்னர் வீட்டிலேயே தொடரலாம்.

தொடர்ந்து பயிற்சி செய்தால் ஆறே மாதத்தில் நல்ல பலன் கிடைக்கும். "ஆமையின் கழுத்து மாதிரி இருந்த உன் கழுத்து எப்பிடிடி இவ்வளவு அழகாச்சு?" என்று நிச்சயம் உங்கள் தோழி ஆச்சரியத்தால் வாய் பிளப்பாள்.

# கிடைத்த பதவியும் இழந்த பெண்ணும்

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வீழ்ச்சிக்குப் பின்னர், தமிழக பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் வெளியிட்ட கருத்து இது:

பெண்கள் எதிலேயிருந்து விடுதலையாக வேண்டும்? ஆண் மக்களுடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலையாக வேண்டும். ரொம்ப சரி. இன்னும் அடிப்படையாக அவர்கள் எதிலேயிருந்து விடுதலையாக வேண்டும்? நகை மோகத்திலிருந்து விடுதலையாக வேண்டும். அழகு மோகத்திலிருந்து விடுதலையாக வேண்டும். ஆணுக்கு நான் நிகர் என்று மெய்யாகவே உணர்தல் வேண்டும். ஆணை மயக்க ஆண்டவனால் படைக்கப்பட்ட ஒரு ரூபம் என்று தன்னை நினைத்துக் கொண்டிருக்கிற வரை பெண்ணை யார் விடுதலை செய்ய முடியும்? இதைத்தான் 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்' என்று பாரதியார் சொன்னார்.

இந்தத் தேசத்தை நாம் கொடிய அடிமைச் சங்கிலியிலே இருந்து விடுதலை செய்து விட்டோம். எண்ணற்ற பொருளாதாரத் தடைகளில் இருந்து விடுதலை செய்து விட்டோம். பெண்ணுக்கு உயர்வு வருவதற்கு ஒரு சமூகத்தின் உயர்ந்த பீடத்திலே ஏறி அமர்வதற்கான வழிமுறையை, வாழ்க்கை முறையை, துணையை நாம் உருவாக்கியிருப்பது சுதந்திரத்தின் விளைவு. அந்தப் பெண் தன்னையே சீரழித்துக் கொள்கின்ற மடமை, தங்கம், வைரம், பொன், வெள்ளி, பட்டு.... அய்யோ! இவளுக்கு விடுதலை நாம் வாங்கிக் கொடுத்தாலும் போய் மாட்டிக் கொள்வாள்.

சமூகமும், அரசும் ஒரு தனி மனிதனை எந்த அளவுக்கு உயர்த்தினாலும், அவர்களுக்கு ஆன்ம விடுதலை இல்லையென்றால், அவர்கள் தாங்களே போய்ப்புகுந்து சிறைப் பட்டுக்கொள்வார்கள். இதற்கு இன்னும் என்ன சாட்சியம் வேண்டும்?

இதை நான் மிகவும் வருத்தத்தோடு சொல்லுகின்றேன். ஒரு பெண் பெரிய பீடத்தில் ஏறுகிறபோது, பாரதியின் சீடர்கள் என்ற முறையில், ஆயிரம் விமர்சனம் இருந்த போதும் நாங்கள் அதற்காக இறுமாந்தோம், பெருமைப்பட்டோம், மார் தட்டினோம். இதைச் சுதந்திர இந்தியா செய்யும். எங்கள் அரசியல் நிர்ணயச் சட்டம் இந்த



உரிமையை, இந்த மேன்மையை ஒரு சாதாரணக் கடைப்பெண்ணுக்குத் தரும் என்பதை வாழ்க்கையில் நாங்கள் காட்டினோம்.

ஆனால் ஆன்ம விடுதலை இல்லையென்றால், அந்த பாரதியார் வெளிச்சம் இல்லையென்றால், அவர் வைத்த அக்கினிக்குஞ்சு இவள் மனதில் பற்றவில்லை என்றால் உங்கள் விடுதலை வெறுமே வெளிப்புறமான, பொருள் சம்பந்தப்பட்ட விடுதலையாகத்தான் பொய்த்துப் போகும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



வாரம் ஒரு பட்டுச் சேலை AX

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-01-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## சாய்ந்தமருது வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | திருமதி. றிஃபாயா ஃபாருக் |
| | 53/A,ஆசுப்பத்திரி வீதி, சாய்ந்தமருது-09. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்துவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது சுகந்தினி

## சிலோன் குல்பி கேக்

தேவையான பொருட்கள்:

முட்டை-5

தேங்காய்ப்பால் - 1 டம்ளர்

வெல்லம் - 300 கிராம்.

செய்முறை:

முதலில் வெல்லத்தை அடுப்பில் சிறிது நீருடன் கொதிக்க வைக்கவும். வெல்லம் கரைந்தவுடன் இறைக்கி விடவும். பிறகு முட்டையை ஒரு பெரிய பாத்திரத்தில் உடைத்து ஊற்றி அதனுடன் தேங்காய்ப்பாலும் கலந்து நன்றாக மிக்ஸியில் அடிக்கவும். பிறகு இறக்கி வைத்த, ஆறிப்போன வெல்லத்துடன் முட்டைக் கலவையைச் சேர்த்து ஒரு மூடியுள்ள சிறிய பாத்திரத்தில் போட்டு நன்றாக மூடிவிடவும். பிறகு அடுப்பில் இட்லி சட்டியை வைத்து அதில் பாதி, அளவு தண்ணீர் ஊற்றவும். தண்ணீர் நன்றாகக் கொதித்ததும், மூடிவைத்த சிறிய பாத்திரத்தை அதில் வைக்கவும். ஆவி பிடித்த பின் சிறிய பாத்திரத்தை வெளியே எடுத்து ஃபிரிட்ஜில் ஒருநாள் முழுவதும் வைக்கவும். பின்னர் எடுத்து வெட்டிப் பரிமாறலாம். வாசனைக்காக ஏலக்காய்ப் பொடியைத் தூவலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## அன்று முதல் இன்றுவரை

குட்டிக்குழந்தையாக ஜெயலலிதா





-நடிகையாக-
ரசிகர் மனங்களில்.



எம்.ஜி.ஆர். மனதில் இடம்பிடித்து கட்சியில் பிடித்துக்கொண்ட பதவி கொள்கைப் பரப்பு செயலாளர். (1983)



சட்டப் பேரவையில்
எதிர்க்கட்சி தலைவியாக
அடிபட்ட காட்சி.
அனுதாப அலை.



மஹாமகத் திருவிழாவில் உயிர்த்தோழியுடன் தீர்த்தாபிஷேகம். நெரிசலில் சிக்கிப் பலர் சாவு!



செல்வியின் செல்வாக்கை பறக்கவிட்ட ஆடம்பரத் திருமணம்



இன்று

## கனவுகளில் கிடந்தெடுத்த ஆசைகள்

வான வில்லின் வர்ணங்களை அள்ளியெடுத்து
காற்றுக்கு பூசி கவர்ச்சிப் படுத்த வேண்டும்!

சூரியனைக் கண்டதும் பயந்தெழுந்து ஓடும்
பனித்துளிகளுக்கு வெயிலை எதிர்த்து வெற்றி
பெற
பயிற்சி கொடுக்க வேண்டும்!

ரோஜாவைத் தீண்டினால் கூர் தீட்டப்பட்டு
குத்த வரும் முட்களை தென்றலை கிழித்தொரு
உறை தைத்து மூடிவிட வேண்டும்!

குயிலை கூட்டிப்போய் இசைப்புயல் ரஹ்மானின்
இசையிலொரு பாட்டுப் பாடச் சொல்ல வேண்டும்!

கறுப்பை அணிந்து கொண்டு வெளிச்சத்தை
கொள்ளையடிக்கவரும் இரவை அடித்துத் துரத்தச்
சொல்லி ஒரு பெரிய பிரம்பாய்ப் பார்த்து
பகலின் கைகளில் கொடுக்க வேண்டும்!

வானத்தின் நீலத்தை பிழிந்தெடுத்து அந்த
மை தொட்டு காற்றில் என் கவிதையை எழுதி
தினமுரசுக்கு அனுப்ப வேண்டும்!

எங்கள் ஊர் சிற்றருவியில் சூரியனை குளிக்க
வைத்து
மேகத்தில் தலை துவட்டி விட வேண்டும்!

அந்தரத்திலொரு அழகான வீடு கட்டி அங்கு
நான் மட்டும் குடியேற வேண்டும்.

கொக்காகல- பீ.எஸ். அன்பரசி.

## தேர்தல் முடிவு

மனிதனோடு
'யுத்தம்'
'சமாதானம்'
என்பன
தேர்தலில் குதித்தன.
-0-
ஐந்து
எழுத்துக்களைப் பெற்று
'சமாதானம்'
முன்னணி வகித்தது.
-0-
நான்கு
எழுத்துக்களைப் பெற்று
யுத்தம்
மனிதனோடு
சமநிலையில் நின்றது.
-0-

அறுதிப்
பெரும்பான்மையின்றி
ஆட்சியமைப்பதில்
இழுபறி.
-0-
மனிதனை யுத்தம்
அவசரமாக
விலைக்கு வாங்கியது.
-0-
இறுதியில்...
எட்டு எழுத்துக்களுடன்
யுத்தம்- மனிதன்
கூட்டணி
காலவரையறையற்ற
ஆட்சியமைக்க...
'குண்டு' மணி
'ஷெல்'வராஜா
புதிய
ஜனாதிபதியானார்...!

எஸ். பிரபா.

# தேன் கிண்ணம்

## கடன் வாங்கிப் பார்!

கடன் வாங்கிப் பார்–!
உன்னைச் சுற்றி–
கருவட்டம் தோன்றும்!
0–0–0
இதயத்தில் இடி இறங்கும்!
0–0–0
மாதமொரு முறை
மனிதத்தலைகளுக்குள் மறையும்
திருடனாவாய்–!
0–0–0
ஊனாய் இருக்கவே
ஒவ்வொரு நிமிடமும் பிரியப்படுவாய்!
பைத்தியமென்றாலும்
பல்லிளிப்பாய்!
அறிவாளி என்றால்
அப்படியில்லை என்பாய்!
பர்சின் கனத்தையே
பார்வையால் அளவெடுப்பாய்!
0–0–0
வாழ்த்துக்கள், வசைமொழிகள்
வாசற் படியிலே விட்டுவிடுவாய்!
0–0–0
சூடு, சுரணை
உன்னிடமிருந்த
சுவடும் இருக்காது!
0–0–0
எதற்கும் ஒருமுறை–
கடன் வாங்கிப்பார்!
இரண்டில் ஒன்று நிச்சயம்–
மானமிழந்த மனிதன் அல்லது மரணம்.

இப்னு ஹஸன்– வாழைச்சேனை.

## என் நினைவுகளுக்கு அப்பால்......

நான்
சிரித்துக்கொண்டேன்....!
இரவுகளோடல்ல–
இதயத் தோடுதான்!
***
நான்
எழுந்து கொண்டேன்...!
படுக்கையோடல்ல–
உன்
நினைவுகளுடன் தான்!
***
நான்
செதுக்கிக் கொண்டேன்...!
உன் முகத்தையல்ல–
உறவுகளின்
விமர்சனங்களைத்தான்...!
***
காதலுக்காய்
வேண்டுவது.....,
தோல்விக்காக
அஞ்சுவது.....
இனி–
என் வாழ்விலிருக்காது.
***
நான்
எனக்குள்–ஒரு
ஒப்பந்தம்
செய்து கொண்டேன்;
தரிசனமில்லாத
இந்த–
காதலை இனி
நேசிப்பதில்லையென்று!
***
சூரியனின்
உதிர்வில்தான்
நிலா ஒளிகிறது
என்றால்,
எனக்குள்
உன் உதிர்வு...!
..........?

பொத்துவிலூர் நிலா

## மழை!

மழைக்கு ஏன்
கறுப்புக் கொடிகள்?
▫▫
மழை உன்
எதிரியா?
▫▫
நீ
பிடிக்க வேண்டியவை
குண்டு துளைக்காத
கேடயங்கள்
தானே...?
▫▫
மழைத்துளி
உன்மேல்
விழுந்தால்
நீ ஒன்றும்
செத்துவிடமாட்டாய்!
▫▫
இனிமேலாவது
குடை பிடிப்பதை
நிறுத்து!
அது பழங்காலத்தவர்
பாவித்த பொருள்!
▫▫
நீ இப்போது
புது மனிதன்!
புத்தி சாதுர்யம்
நிறைந்தவன்!
▫▫
நவீன கால
(குண்டு) மழைக்கு
குடை பிடி!
இதில்
நனைந்தால்
தலை துவட்ட
முடியாது!
கண்கள்
இரண்டும்
நாக்கும்
பூமியை
நோக்கும்!

மாரிமுத்து யோகராஜன்–
அக்கரைப்பற்று–08.

## வீதிக்கு வா!

என்
வீதியும் விழியும்
ஒருமுறைதான்
உன் வரம் பெற்றது.
***
நீ
எனக்குள் அறிமுகம்;
எனக்கு நானே
அறிமுகமானேன்.
***
உன் மூச்சு
தொட்ட காற்று
எனக்குள்
சுவாசமானபோதே
எனக்கான இதயம்
உனக்காக ஏங்கியது.
***
உன்னை கண்டபோது
எனக்குள்
எத்தனை அவசரம்....?

செடிவைத்த நேரம்
பூப்பறிக்க
எண்ணுவதுபோல...!
***
காற்றின் தீண்டலும்
குற்றம் என்றுதான்
போர்வைக்கு
உன் தோற்றம் தேடி
தோற்றுப் போகிறேன்.
***

வானவில் வளைந்ததும்
உன்னைத் தேடி.
இன்று என்
இதயம் புளுங்கி
விழி வழி வழிவதும்
உன்னைத் தேடி!
***

நிலவே!
என் வீதிக்கு வா!
உனக்காக ஒரு செடி–
பாரிவரவின்றி
பரிதாபம்– வாடுது!

எம்.ஐ.எம்.
இஸ்ஹாக்.

## துளி விடும் இரு விழிகள்

நான் அழுகிறேன் என்பதால்
நீ அழவேண்டாம்;
ஊரார் கண்டால் கேலியாகும்–
நீ 'வாழ வேண்டியவள்...!'
••
நெருப்புக்குள் வீழ்ந்தாலும்
உருகாமல்–
'வெடிக்க மட்டுமே தெரிந்த
உப்புக் கட்டிகள்தான்–
மனித(ர்) உள்ளங்கள்...!'
••

அதனால் என்ன...?
எத்தனையோ காதலர்களுக்கு
இவர்கள் கொடுத்த பரிசு–
'கண்ணீர்...!'
••
நீ அழாதே...!
நிறுத்து;
உன் கண்ணீரில் கரைந்து
கிடக்கிறது
என் இதயம்.
••

கண்மணி...!
நீ இல்லாத என் வாலிபம்,
சமாதானம் இல்லாத
இலங்கையாய்...!
••

இன்னும் இரவுகள் வரும்;
ஆனால்–
நான் தூங்காமலேயே
விடிந்து விடும்...!
••
என் மனமும்
ஆட்சி மாறிய
அரசாங்கம் மாதிரி–
பழசுகளை எல்லாம்
தோண்டிப் போடும்!
••

நீ என்னை
நினைக்கவேண்டாம்!
ஏனெனில்–
'நீ வாழ வேண்டியவள்...!'
••
நாளைக்கும்
காகம் கத்தும்;
ஆனால் எனக்கு–
உன் கடிதம் வந்து
சேராது....!

சிந்தனைப் பித்தன்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(05.01.97 தொடக்கம் 11.01.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | - சூரியன், புதன், வெள்ளி. |
| மகரம் | - வியாழன். |
| மீனம் | - கேது, சனி. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |

★ சந்திரன்– துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், செலவு அதிகம் | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனக் கலக்கம், தொழில் மந்தம். | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், அந்நியர் பகை. | மு.ப. 10 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பயனுள்ள செயல். | பி.ப. 1 மணி |
| சனி- முயற்சி பலிதம், பண வரவு. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 3 மணி |
| திங்கள்- அந்நியர் பகை, வீண் தொல்லை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பலவித பேறு, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் கஷ்டம், குடும்ப பிரிவு. | பி.ப. 4 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், பொருள் வரவு. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| சனி- முயற்சி மேன்மை, தொழில் சிறப்பு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 4 மணி |
| திங்கள்- உறவினர் நன்மை, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்தொல்லை நீங்கும், முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |
| புதன்- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. 3 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- அந்நியர் பகை, வீண் கஷ்டம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி மேன்மை, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- பலவித பேறு, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் நன்மை, பண வரவு. | பி.ப. 3 மணி |
| புதன்- கடன் தொல்லை நீங்கும், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பெரியோர் மகிழ்ச்சி, உறவினர் உதவி. | பி.ப. 3 மணி |
| சனி- காரிய சித்தி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழிலில் பிரச்சனை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், கௌரவ மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- காரிய சித்தி, கடன் தொல்லை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| சனி- பெரியோர் பகை, காரியத்தடை. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- கௌரவ மிகுதி, மனப் போராட்டம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், பொருள் நஷ்டம். | பகல் 12 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, வீண்குறை கேட்டல். | பி.ப. 1 மணி |
| சனி- பொருள் பேறு, முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பண நெருக்கடி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| புதன்- இனசன நன்மை, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- பொருள் பேறு, குடும்ப சுகம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| சனி- தொழில் விருத்தி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வீண் மனஸ்தாபம், பொருள் பேறு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- உயர்ந்த எண்ணம், காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, இனசன நன்மை. | மு.ப. 9 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| சனி- செலவு மிகுதி, பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- கடன்தொல்லை நீங்கும், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம் தீரும், மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- இனசன நன்மை, பொருள் பேறு. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவதிகம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன் - தொழில் மந்தம், பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- மறைமுக எதிர்ப்பு, காரிய சித்தி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 4 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- இனசன நன்மை, பயனுள்ள செயல். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| புதன்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், வீண் முயற்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், காரியக்கேடு. | பி.ப. 4 மணி |
| சனி- உறவினர் உதவி, பொருள் வரவு. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி மேன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் பலிதம், பொருள் வரவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், தொழில் மந்தம். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் சிறப்பு, காரியசித்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7



படிப்பகம்





## சுண்டெலியாம் சுண்டெலி

சுற்றிச் சுற்றிப் பார்க்குதாம்
சின்னஞ் சிறு சுண்டெலி
தின்ன வைக்கும் பண்டங்களை,
திருடித் தின்னும் சுண்டெலி!

பூனை கண்ட மாத்திரத்தில்
பதுங்கிச் செல்லும் சுண்டெலி!
வீட்டில் உள்ள பண்டமெல்லாம்
வீணாக்கும் சுண்டெலி!

குட்டிக் கண்கள், பற்கள் கொண்ட
குழந்தை போன்ற சுண்டெலி!
இடுக்கி வைத்த போதும் கூட
மிடுக்காய்த் தப்பும் சுண்டெலி!

எங்கள் வீட்டு அடுக்களையில்
ஏராளமாய்ச் சுண்டெலி!
பிள்ளையாரின் வாகனமாம்-எனக்கும்
பிடித்த சுண்டெலி!

ஆர்.திருப்பதிராஜ்.

வலிமையுடையது தெய்வம்-நம்மை
வாழ்ந்திடச் செய்வது தெய்வம்:
மெலிவுகண் டாலும் குழந்தை
-தன்னை
வீழ்த்தி மிதித்திட லாமோ?
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கர்வம் கொள்ளாதே!

மழை மேகம் கண்டு தோகை விரித்தாடியது ஆண்மயில் ஒன்று. தன் தோகையின் பலவர்ணங்களையும், அழகையும் கண்டு கர்வப்பட்டுக் கொண்டது அந்த மயில்.

தன்னைப் போல் அழகான பறவை உலகில் ஒன்றுமில்லை: தனக்கு நிகர் யாருமில்லை என்று எண்ணி பக்கத்தில் இருந்த பறவைகளை ஏளனமாகப் பார்த்துக் கேலி செய்யத் தொடங்கியது.

முதலில் தனது எதிரே இருந்த காகத்தைப் பார்த்து,

"ஏ காகமே! நீயும் ஒரு பறவையா? உனது இறக்கைகளைப் பார், கன்னங்கரேல் என்று பார்க்கச் சகிக்கவில்லை. எனது தோகையைப் பார்! எனக்குள்ள அழகில் ஆயிரத்தில் ஒரு பங்காவது உனக்குண்டா?" என்றது.

காகத்தால் ஒன்றும் பேசமுடியவில்லை. அது பேசாமல் இருந்தது. மயிலுக்குப் பெருமை தாங்கவில்லை. அப்போது சிட்டுக்குருவி ஒன்று காகத்திற்குப் பக்கத்தில் வந்தமர்ந்தது. இதைக் கண்ட மயில்,

"ஏ, சிட்டுக்குருவியே! என் அழகைப் பார்த்தாயா? என் கழுத்தையும், உன் கழுத்தையும் பார்! அழகே இல்லாத நீ வாழ்ந்து தான் என்ன பயன்?" என்று கேலி பண்ணியது.

சிட்டுக்குருவிக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. அதுவும் மௌனமாக இருந்தது.

மயிலுக்குத் தலைகால் புரியவில்லை. இனி யாரைக் கேலி பண்ணலாம் என்று சுற்றிலும் நோட்டமிட்டது மயில். இவ்வளவு நேரம் மயில், காகத்தையும், சிட்டுக்குருவியையும் கேலி பேசியதை அந்த மரத்திற்குக் கீழே இருந்து ஒரு கொக்கு அவதானித்துக் கொண்டிருந்தது. இந்தக் கொக்கை மயில் பார்த்து விட்டது.

"ஏய் கொக்கே! நீ இங்கேயா இருக்கிறாய்? அவலட்சணமான நீண்ட கால்களையும், நீண்ட கழுத்தையும், நீண்ட அலகையும் கொண்டிருக்கிறாய். என் அழகான தோகைக்கு முன் இவையெல்லாம் ஈடாகுமா?" என்றது மயில்.

கொக்கிற்குக் கோபம் வந்துவிட்டது.



மற்ற இரு பறவைகளையும் போல் இல்லாமல் அது மயிலைப் பார்த்து,

"அறிவு கெட்ட மயிலே! நீ இவ்வளவு நேரமும் பேசியதைக் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். காகத்தைப் பார்த்து இழிவாகப் பேசினாய். மனிதர்கள், மயிலைப் போல் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று சொல்லுவதில்லை. காகத்தைப் போல ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள்.

சிட்டுக் குருவியைப் போல் உன்னால் உயரப் பறக்கமுடியுமா? அல்லது அதைப் போல் உன்னால் அழகான கூட்டைத்தான் கட்ட முடியுமா?

என்னை, உனது அழகோடு ஒப்பிட்டாய். என்னைப் போல் உன்னால் கடல், குளங்களில் மூழ்கி எழமுடியுமா?

கடவுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமைகளையும், ஆற்றல்களையும் கொடுத்திருக்கிறார். நீயோ கர்வம் கொண்டு வீண் பெருமை பேசி வருகிறாய். இனிமேலாவது கர்வம் கொள்ளாமல் இருக்கக் கற்றுக்கொள்," என்று கோபமாகக் கூறியது.

இவற்றைக் கேட்டு வெட்கித் தலை குனிந்த மயில், அந்த இடத்தை விட்டு ஓடிச்சென்று விட்டது.

## வாரம் ஒரு நாடு

### செனகல்

தலைநகர்- டாக்கர்
பரப்பு- 1,96,162 சதுர கிலோ மீட்டர்
மக்கள் தொகை- 83 இலட்சம்
மொழி - ஃபிரெஞ்சு, உள்நாட்டுப் பேச்சு மொழிகள்
எழுத்தறிவு- 35%
சமயம்- இஸ்லாம், பழங்குடி சமயம்
நாணயம்- ஃபிராங் (சீ.எஃப்.ஏ)
தனிநபர் வருமானம்- 780 டொலர்.

**அமைவிடம்:**

செனகல், மேற்கு ஆபிரிக்க முனையில் அமைந்துள்ளது. இந்நாட்டின் தென் பகுதியில் காம்பியா என்ற நாடு 200 மைல் உள்ளே அமைந்துள்ளது.

**வரலாறு:**

முன்னர் ஃபிரெஞ்சுக் குடியரசாக இருந்த செனகல் 1960ல் தனியாட்சி உரிமையுடைய குடியரசானது. காம்பியாவுடனான ஓர் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, 'செனகாம்பியா' என்னும் கூட்டமைப்பு உள்ளது. பொருளாதார நிலைகளை மட்டும் செனகாம்பியா கவனித்து வருகிறது. இரண்டு நாடுகளும் தனித்தனியாக தொடர்ந்து இருக்கும்.

120 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் உள்ளது.. ஜனாதிபதி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.



**பொருளாதாரம்:**

விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகியன முக்கிய தொழில்கள். இரும்புத் தாது, ஃபொஸ்பேட் ஆகியவை இங்கு அதிகமாகக் கிடைக்கின்றன.

## பிறமொழிகளில் திருக்குறள்

திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர் என்பது எல்லாருக்கும் தெரியும். திருக்குறள் பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

* 1730 ம் ஆண்டு வீரமா முனிவர் திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார்.
* 1767ல் எம்.ஏரியல் என்பவர் திருக்குறளை ஃபிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தார்.
* 1803ல் கமரெர் என்பவரால் திருக்குறள் ஜெர்மன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.
* 1885ல் ஈ.கே.ரொபின்சன் என்பவரால் திருக்குறள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.
* 1887ல் கனுபர்த்தி வெங்கட்ராம ஸ்ரீ வைத்தியநாதா என்பவரால் தெலுங்கில் மொழி பெயர்க்கப்பட்டது.
* 1915ல் திவான் பகதூர் கோவிந்தபிள்ளை அவர்களால் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.
* 1922 ல் அப்பா தீட்சிதர் அவர்களால் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.01.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 174
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 172

பரிசுக்குரியவர்:
பி. நிரோஷினி,
நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ரா. நிரோஷா, ஸ்ரீ சன்முகா இந்து மகளிர் வித்தியாலயம், திருகோணமலை. | எல். ரஜுவ், இ/ பரியோவான் த.ம.வி., இறக்குவானை. |
| சா. முரளிதாஸ், க.மு. இராமகிருஷ்ணா கல்லூரி, அக்கறைப்பற்று. | எஸ்.எச். பாத்திமா நஸ்னா, சாஹிரா தேசிய கல்லூரி, கம்பளை. |
| செல்வி ∴பாத்திமா ∴பய்ஹா ∴பாரீஸ், மொலந்த பிட்டிய வீதி, மாத்தளை. | செல்வி யோகினி திருக்கணேசன், வ/ சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| பூ. துவாரகன், தமிழ் மத்திய மகாவித்தியாலயம், வவுனியா. | செல்வன் யுடீஷன், றஜித் ஜோனஸ், வாசல வீதி, கொழும்பு-13. |
| எம். முஹம்மட் நிலூஜான், கஹு/ஜீலான் மு.ம. கல்லூரி, பாணந்துறை. | எச். ஆர். எப். ஹஸ்லா பானூ, மத்ரஸா ஒழுங்கை, மன்னார் வீதி, புத்தளம். |

## நன்னம்பிக்கை முனை

ஆபிரிக்காவின் தென் முனைக்கு நன்னம்பிக்கை முனை என்று பெயர். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னரே போர்த்துக்கேய மாலுமி பர்தலோமியஸ் டயஸ் இதைக் கண்டுபிடித்தார். இவர் ஆபிரிக்காவின் மேற்குக் கடற்கரை வழியாகக் கடற்பயணம் செய்து ஆபிரிக்காவின் தென் முனைவரை வந்தார்.

கடும் புயலும், சூறாவளியும் அவர் பயணத்தைத் தொடர முடியாது தடுத்தன. இருப்பினும் பல இன்னல்களுக்கிடையே அவர் தென் முனையை அடைந்து பின்னர் திரும்பினார். டயஸ் கண்டுபிடித்த இடத்திற்கு முதலில் புயல் முனை எனப் பெயரிட்டார். அந்த இடத்தை அவர் சென்றடைய பல துன்பங்களைச் சந்தித்ததால் அவ்வாறு அதற்குப் பெயரிட்டார்.


ஆனால் போர்த்துக்கேய மன்னர் இந்தக் கண்டுபிடிப்பு எல்லாருக்கும் பல வழிகளில் பயன்படுமாதலால் இதற்கு நன்னம்பிக்கை முனை என்று பெயரிட்டார்.



## பிஞ்ச் பேர்ட்

பிஞ்ச் பேர்ட் எனப்படும் பறவைகள் மிகவும் சிறிய உருவமுள்ளவை. இவை பூபி பேர்ட் எனப்படும் பெரிய பறவையின் இறக்கைகளில் உட்கார்ந்துகொள்ளும். முதலில் பிஞ்ச் பேர்ட் தனது அலகால், பூபி பேர்ட்டின் இறகுகளைக் கோதிக் கொள்ள ஆரம்பிக்கும். இப்படி ஆரம்பித்து பூபி பேர்ட்டைக் கொத்தி அதிலிருந்து வரும் இரத்தத்தைக் குடிக்கும். தனக்குப் போதுமான அளவு இரத்தத்தை பிஞ்ச் பேர்ட் குடித்து விட்டுப்பறந்துவிடும்.

அது மட்டுமல்லாமல், மலைப்பிரதேசங்களில் கூடு கட்டி முட்டையிடும் பறவைகளின் முட்டைகளையும் திருடிக் குடிக்கும். இது எப்படி முட்டைகளைத் திருடுகிறது என்று தெரியுமா? முட்டைகளை மெதுவாகக் கால்களில் உருட்டிக் கொண்டு வந்து பாறைகளில் மோதி உடைத்துவிடும். பின்னர் உடைந்த முட்டையைக் குடிக்கும்.



## இரவீந்திரநாத் தாகூர்

பாரதநாட்டின் தலைசிறந்த புதல்வர்களுள் இரவீந்திரநாத் தாகூரும் ஒருவர். இவர் ஒரு சிறந்த புலவர், கல்விமான், நாடகாசிரியர், கதாசிரியர், வேதாந்தி, சுதந்திரத்துக்காகப் போராடிய வீரர்: அத்துடன் இவர் ஒரு நடிகரும்கூட. இவ்வாறு பல துறைகளிலும் ஆற்றல்மிக்கவர்களைக் காண்பது அரிது. தாகூருடைய 'கீதாஞ்சலி' கவிதைத் தொகுப்புக்கு, 1913ம் ஆண்டு இலக்கியத்துக்கான நொபல் பரிசு வழங்கப்பட்டது.

கிழக்கு மற்றும் மேற்கத்தைய கலாசாரச் சிறப்பம்சங்களை இணைக்கும் நோக்குடன் 'சாந்தி நிகேதன்' எனும் பன்னாட்டுக் கல்வி நிறுவனத்தை 1901ம் ஆண்டில் தொடங்கினார். இதுவே இன்று, மேற்கு வங்காளத்தில் 'விஸ்வ பாரதி' பல்கலைக்கழகமாக விளங்குகிறது.



கல்கத்தாவில் பல்துறையிலும் சிறப்புமிக்க குடும்பத்தில் 1861ம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி இரவீந்திரநாத் தாகூர் பிறந்தார். 1941ஆகஸ்ட 8ம் திகதி காலமானார். தாகூரின் பேராற்றலை மெச்சிய பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு 'சேர்' பட்டம் வழங்கி கௌரவித்தது. 1919ல் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில், சுதந்திரப் போராட்டவீரர்களை மிலேச்சத்தனமாகக் கொன்று குவித்த பிரிட்டிஷ் ஆட்சியைக் கண்டிக்கும் முகமாக தனது சேர் பட்டத்தை வேண்டாம் என்று துறந்துவிட்டார் தாகூர்.

'ஜனகனமன...' என்று தொடங்கும் இந்தியாவின் தேசிய கீதத்தை தாகூரே எழுதினார். இந்தியாவில் இந்தி மொழி பேசுவோரே மிகப் பெரும்பான்மையாக இருந்தபோதிலும், தாகூர் எழுதிய வங்காள மொழிப்பாடலே அனைத்து இந்தியாவிலும் ஒரே முகமாக ஏற்றுக் கொண்ட தேசிய கீதமாக விளங்குவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

## ஒரு வரிச் செய்திகள்

- அன்னாசிப் பழத்தின் தாயகம் பிரேஸில் ஆகும்.
- பேரீச்சம் பழத்தின் தாயகம் சவுதி அரேபியா ஆகும்.
- கொய்யாப்பழத்தின் தாயகம் அமெரிக்கா ஆகும்.
- தோடம்பழத்தின் தாயகம் சீனா ஆகும்.
- தக்காளிப் பழத்தின் தாயகம் அயர்லாந்து ஆகும்.
- பப்பாளிப் பழத்தின் தாயகம் மெக்ஸிக்கோ ஆகும்.
- தக்காளிப் பழத்திற்கு முதலில் வைக்கப்பட்ட பெயர் லவ் அப்பிள்.
- ஜப்பான் நாட்டின் தேசிய பழம் பெர்ஸிமன் பழமாகும்.

www.padippakam.com

"நா ன் மற்றொரு திருமணத்துக்கு இன்னும் தயாரில்லை கணேஷ்! நான் என் செல்வத்தை எல்லாம் துறக்க வேண்டும். முதலில் நான் ஏழையாக வேண்டும். எனக்கு மன நிம்மதி வேண்டும்....அதிருக்கட்டும்: நீங்கள் ஏன் பாஸ்கரைச் சந்தேகிக்கிறீர்கள்?"

எனக்கு ஒரு பிரச்சினையில் சுவாரஸ்யம் ஏற்பட்டு விட்டதென்றால் பதில் தெரியும் வரை அதைவிடமாட்டேன். இதில் எனக்கு சுவாரஸ்யம் ஏற்பட்டு விட்டது. எனக்கு கொஞ்சம் அதிர்ஷ்டமும் உண்டு. இல்லாவிட்டால் நான் நேற்று அடிபட்டு இறந்திருப்பேன். என் கேள்விக்குச் சரியான பதில் சொல்லுங்கள். இந்த பாஸ்கர்-இவனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

பதற்குமுன் பாஸ்கர் அடிபட்டான், தாடையில் அவன் கண்ணாடி எகிறி விழுந்தது.

பாஸ்கர் தன் தாடையைத் தடவிக் கொண்டான். வாயில் ஒற்றி இரத்தம் வருகிறதா என்று பார்த்துக் கொண்டான். அப்புறம் கீழே கம்பளத்தில் கிடந்த

சுழன்றன.

யோசித்தான்.

டெலிபோனைப் பார்த்தான்: அனிதாவின் வீட்டு நம்பரைச் சுழற்றினான்.

வெகுநேரம் அடித்தது. அவன், சலித்து, வைத்த பிறகு மணி அடித்தது.

"கணேஷ் பேசுகிறேன்."

"மோனிக்கா, நான் இன்னும் உன்னுடைய லாயர்தான். உன் நலனுக்காகத்தான் அல்லும் பகலும் உழைக்கிறேன்."

"எங்கே உழைக்கிறாய்? பெட்ரூமிலா?"

"ஸ்ட்ராங் வோர்ட்ஸ் பார்ட்னர். நான் என்ன செய்யவேண்டும்?" இதோ மண்டியிட்டுக் கொண்டிருக்கிறேன். 'என்னை நீ மன்னிப்பாயா ப்ளீஸ்'

# 08 அனிதா இளம் மனைவி

## இதுவரை

அவர்கள் இளம் காதலர்கள்-ஆனந்த்-மல்லிகா.

இருவரும் சந்தோஷமாக இருக்க தனியான மலைப் பகுதிக்குச் சென்றனர். அங்கே புதர் ஒன்றுக்குள் ஒரு பிணம் கிடக்கிறது. ஆனந்த் பொலிசாருக்கு அறிவிக்கிறான். பொலிசார் வருகின்றனர். அது ஓர் ஆண் பிணம். கொல்லப்பட்டவர் ஷர்மா என்று கண்டறிந்து அவரது வீட்டுக்குச் சென்று அவர் மனைவியிடம் விசாரிக்கிறார்கள். மனைவி பெயர் அனிதா. ஷர்மாவின் இரண்டாவது மனைவி. கொலையான ஷர்மாவின் முதல் மனைவியின் மகள் மோனிக்கா. சட்டத்தரணி கணேஷின் உதவியை நாடுகிறாள் மோனிக்கா.

அனிதாதான் தன் அப்பாவை- சொத்துக்காக கொலைசெய்திருக்கிறாள் என்று சந்தேகிக்கிறாள் மோனிக்கா.

கணேஷ் அனிதாவிடம் விசாரணை நடத்துகிறான். அனிதாவின் இளமையும், அழகும் கணேஷையும் கலவரப்படுத்துகின்றன. விசாரணையை முடித்து விட்டுச் சென்ற கணேசுக்கு அவசரமாக போன் செய்கிறாள் அனிதா. உடனே அனிதாவிடம் செல்கின்றான் கணேஷ். தன்னை யாரோ கொல்ல முயற்சித்ததாகக் கூறும் அனிதா அவனைத் தன்னுடன் தங்குமாறு வேண்டுகிறாள். அங்கே இரவு அந்த மர்ம மனிதனின் தாக்குதலு க்கு ஆளாகின்றான்.

மறுநாள் இன்ஸ்பெக்டர் ராஜேஷைச் சந்திக்கும் கணேஷ் மீண்டும் அனிதாவின் வீட்டுக்குச் செல்கிறான். பாஸ்கர் நொண்டியபடி நடப்பதை அவதானிக்கிறான்.

உயில் விஷயம் பற்றி மோனிக்கா வினவ, குளித்துவிட்டு வந்த அனிதாவின் மேல் கணேஷின் கவனம் திரும்பவே, அவனைக் கோபமாகத் திட்டித்தீர்த்துவிட்டு வெளியேறுகிறாள்.

அனிதாவை மணக்க விரும்புவதாக கூறுகிறான் கணேஷ்.

இனி......



கண்ணாடியை எடுத்துத் துடைத்துப் போட்டுக் கொண்டான். கணேஷ் இரண்டு கைகளையும் கராட்டி பாணியில் வைத்துக் கொண்டு எதிர்ச் சண்டையைத் துவக்கக் காத்திருந்தான்.

பாஸ்கர் சொன்னான்- "நான் உன்னுடன் சண்டையிடமாட்டேன். நான் ஞாபகம் வைத்துக்கொள்வேன். எனக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். போ, மோனிக்கா காத்திருக்கிறாள்! அவளையும் போய்க் கெடு! போ!"

கணேஷ் மறுபடி பாய்ந்த போது அவன் ஒதுங்கிக் கொண்டான். கணேஷ் கீழே விழாமல் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து பாஸ்கரை நோக்கி நிதானமாக நடந்தான். பாஸ்கர் சிரித்தான். "உண்மை! உண்மை கசக்கிறது."

"ரத்தம் புளிக்கப் போகிறது உனக்கு!"

"எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள். ஈஸி லாயர், ஈஸி! இந்த வீட்டு பர்னிச்சர் எல்லாம் நீ கனவில் கூட வாங்க முடியாத செல்வங்கள்!"

கணேஷ் அவன் மேல் பாய்ந்தான். அவன் கழுத்தைப் பிடித்தான்.

"கணேஷ்!" அனிதாவின் குரல்!

கணேஷ் நிறுத்திவிட்டான்.

"மிஸஸ் ஷர்மா, உங்கள் லாயர் நம் வீட்டுக்கு நிறையச் சேதம் விளைவிக்கிறான்," என்றான் பாஸ்கர். தன் உடைகளைத் தட்டிக் கொண்டு.

"என்ன சண்டை இது பாஸ்கர்?"

"நான் ஒரு விரலைக்கூட உயர்த்தவில்லை மிஸஸ் ஷர்மா!"

"உங்கள் செக்ரட்டரி என்னிடம் உதைபட்டுச் சாகப் போகிறான்."

"என்ன சொன்னான்?"

"சில உண்மைகளை!" என்றான் பாஸ்கர்.

"மறந்து விடுங்கள், அனிதா!"

"கணேஷ், இந்த வீட்டில் சென்ற தினங்களில் நடந்துள்ள ரகளைகள் போதாதா?"

"அனிதா, இந்த செகரட்டரிக்குப் பேசத் தெரியவில்லை. இவனிடம் சற்று ஜாக்கிரதையாக இருங்கள். அவ்வளவுதான் சொல்வேன்."

"என் வாக்கியங்களும் அதுவே மிஸஸ் ஷர்மா."

"நீ வெளியில் வா!" என்றான் கணேஷ். திடீரென்று நான் ஏன் சின்னப் பையன் போல் நடந்துகொள்கிறேன் என யோசித்தான். பாஸ்கர் சொன்னது ஒரு விதத்தில் உண்மையாக இருப்பதாலோ? உண்மை ஏன் உறுத்துகிறது? அதில் குற்றம் இருக்கிறது, ஏனோ அனிதாவிடமிருந்து விலக நினைத்தான். "நான் மறுபடி மாலை உங்களைச் சந்திக்கிறேன், அனிதா!"

"இன்று மாலை நான் வெளியே செல்ல வேண்டி இருக்கும்."

எங்கே என்று கேட்க விழைந்த ஆசையைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான் கணேஷ்.

"சரி, நாளை சந்திக்கலாம்." என்றான். பாஸ்கர் அறையில் இல்லை.

●●●

அன்றிரவு கணேஷ் வெகு நேரம் எழுதிக் கொண்டிருந்தான். எழுதி எழுதி அடித்தான். சக்கரங்கள் ஒன்றுடன் ஒன்று குறுக்கிட்டு மலர்களாக மலர்ந்து மேலும் சிக்கலாகி மேலும் சுற்றி மேலும் மேலும்

கணேஷ் உட்கார்ந்தான். "நான் பாஸ்கரைச் சந்தேகிக்கிறேன் என்று ஏன் நினைக்கிறீர்கள்?"

"நீங்கள் பாஸ்கரைக் கேட்ட கேள்விகள் எனக்குக் காதில் விழுந்தது."

"அனிதா, உங்கள் கணவர் இறந்த முறையில் ஒரு மர்மம் இருக்கிறது. உங்கள் நலனிலும் பாதுகாப்பிலும் எனக்கு அக்கறை உண்டு. உங்கள் கணவர் இறந்த பத்து நாட்களுக்குள் உங்களையும் யாரோ தாக்க முயற்சிக்கிறார்கள்! உங்களுக்கு காவலான என்னையும் தாக்க முயற்சிக்கிறார்கள்! உங்கள் கணவரைக் கொன்றவன் வேலைக்காரன் கோவிந்த் என்று வைத்துக் கொள்வோம். பணத்துக்காக அவரைக் கொன்றான் என்றால், உங்களையும் என்னையும் கொல்லக் காரணம்? மேலும்...." கணேஷ் தயங்கினான், அதை அவளிடம் சொல்லலாமா வேண்டாமா என்று.

"மேலும்?"

"உங்கள் கணவர் இறந்த விதம் அவ்வளவு சிம்பிளானதல்ல."

"ஏன்?"

"அவர் உடம்பில் சாட்டையடிக் காயங்கள் இருந்தனவாம்."

"காட்! யார் சொன்னார்கள்!"

"இன்ஸ்பெக்டர் ராஜேஷ்."

"அவர் என்னிடம் இதைச் சொல்லவில்லையே! சவுக்கடியா!"

"நீங்கள் உங்கள் கணவரின் உடலைப் பார்த்தீர்களே? கவனிக்கவில்லையா?"

"ஷர்ட் அணிந்திருந்ததால் முகத்தைப் பார்த்தேன். நான் அவரை அதிகநேரம் பார்க்க விரும்பவில்லை."

"புரிகிறது!"

"கணேஷ் என்னை யார் கொல்ல விரும்புகிறார்கள்?"

"நீங்கள் இறந்துவிட்டால் லாபமடையக் கூடியவர் யார்?"

"ஓ! நோ! மோனிக்கா ஒருத்திதான்!"

"என்று, உயில் சொல்கிறது. ஆனால் மோனிக்கா இல்லை இது- ஐ நோ மோனிக்கா!"

"எனக்கும் அவளைத் தெரியும். நிச்சயம் அவளில்லை"

"பின் யார்?"

"கண்டுபிடித்துச் சொல்கிறேன். நான் கொஞ்சம் சோம்பேறி. ஆனால்

"மிகவும் திறமை உள்ளவன்: ஆனால் கோழை. சற்றுப் பயந்தவன்; கொலைக்கும் அவனுக்கும் சம்பந்தமே இருக்க முடியாது."

"கோவிந்த்?"

"அவன் அவருடனேயே இருந்தான். ஒரு விதமான மெய்க்காப்பாளன் மாதிரி. அவனை நான் அதிகம் கவனித்ததில்லை. இன்னும் உங்கள் லிஸ்டில் யார் யார் இருக்கிறார்கள்?"

"வேறு சிலர்- பெயரில்லாதவர்கள், பெயர் உள்ளவர்கள்...."

"நான் அதில் இருக்கிறேனா?"

கணேஷ் புன்னகைத்தான், "அனிதா. என்ன இது! உங்களை நான் சந்தேகப்படுவேனா? உங்களுக்காகத்தான்- உங்கள் பத்திரத்துக்காகத்தான் நான் இவ்வளவு

## நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன்

## சுஜாதா

பாடுபடுகிறேன்."

கணேஷ் கீழே இறங்கியபோது பாஸ்கர் நின்றுகொண்டிருந்தான்.

"பாஸ்கர், நான் உங்களை நேராக ஒரு கேள்வி கேட்கிறேன். நேராகப்பதில் சொல்ல வேண்டும்."

பாஸ்கர் மௌனமாக இருந்தான்.

"நேற்று என்னைத் தாக்க முயற்சித்தது நீங்கள் தானே?"

"இல்லை. நீ ஒரு மிக மோசமான அமெச்சூர். நீ நிறைய விஷயங்களைக் கற்பனை செய்து கொள்கிறாய்?"

"நேற்று இரவு நீ எங்கிருந்தாய்?"

"எங்கள் கிளப்பில் சீட்டாடிக் கொண்டிருந்தேன். எட்டுப் பேர் பத்துப் பேர் சாட்சிகள் இருக்கிறார்கள். ஆனால் நீ யார் என்னைக் கேட்க? உனக்கு நான் எந்த விதத்திலும் பதில் சொல்லக் கடமைப்பட்டவன் அல்ல."

"பாஸ்கர், ஒன்று மட்டும் ஞாபகம் வைத்துக்கொள். என் பெயர் கணேஷ். கணேஷை அடித்துவிட்டுத் திரும்பப் பெறாமல் இதுவரை எவரும் தப்பித்ததில்லை."

"என் பெயர் பாஸ்கர். என்னை முட்டாள் தனமாகச் சந்தேகிப்பவர்கள் கடைசியில் துக்கமடைவார்கள்."

"அனிதாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்!"

"நீதான் இருக்கிறாயே பிஸ்கட் போட்டால் உடனே ஓடி வந்து கவ்வித் தின்ன!"

அவன் அந்த வாக்கியத்தை முடிப்

டெலிபோனில் மோனிக்கா வெடித்தாள்:

"கணேஷ் நான் உனக்கு எவ்வளவு பணம் தரவேண்டும்? கணக்குத் தீர்த்து விடுகிறேன்."

"அவ்வளவு சுலபத்தில் தீர்க்கிற கணக்கில்லை இது. எங்கிருந்து பேசுகிறாய்?"

"உன் தாத்தாவின் வீட்டிலிருந்து."

"அவர் சொர்க்கத்தில் இருக்கிறார். அங்கே எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா?"

"ஹா ஹா ஹா? எவ்வளவு ஹாஸ்யம்!"

"கேள் மோனிக்கா, கேள். நான் சைக்காலஜி தெரிந்தவன். எனக்கு நீ மறுபடி டெலிபோன் செய்வதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? என்னுடன் நீ சமாதானம் செய்து கொள்ள விரும்புகிறாய் என்று."

"தவறு. நான் உன்னை நேரில் பார்க்க விரும்பவில்லை. அதனால்தான் டெலிபோனில் கூப்பிடுகிறேன். நீ ஒரு...."

"ஸ்ட்ராங் வோர்ட்ஸ் மை டியர் கர்ல், நிச்சயமாகச் சொல். நீ என்னைப் பார்க்க விரும்பவில்லை?"

"இந்த யுகத்தில் இனி இல்லை."

"சரி, நான் இப்பொழுது அங்கே வரப் போகிறேன்."

"நோ அட்மிஷன்."

"மோனிக்கா!"

"என்ன?"

"தனியாகத்தானே இருக்கிறாய்?"

"ஆம், நான் இப்பொழுதுதான் வந்தேன். என் சினேகிதனுடன் வெளியே போயிருந்தேன். சினேகிதன்!"

"குட் மோனிக்கா. மற்றொரு சிநேகிதன் என்கிற முறையில் எனக்கு ஓர் உதவி செய்வாயா?"

"முடியாது மாட்டேன்."

"என்ன உதவி என்றால்...."

"முடியாது. அனிதா வந்ததும் கேட்டுக் கொள்."

என்று கேட்க வேண்டுமா? ரோஜாப்பூ அனுப்பவேண்டுமா?"

"கணேஷ், ஸோப் போடுவதை நிறுத்து. என்ன வேண்டும் என்று சொல்."

"உன் அப்பாவின் அறையை நான் சோதனை போட வேண்டும். அப்புறம் அனிதாவின் அறையை."

"சரி, நானும் உடனிருப்பேன்."

"சரி," என்று கணேஷ் ஒப்புக் கொண்டான்.

★★★

"இதுதான் என் அப்பா," என்று மேஜைமேல் மாலை போட்டுக் கொண்டிருந்த வரைப் போட்டோவில் காட்டினாள். அவர் காலரில்லாத இந்தியக் கோட்டு அணிந்திருந்தார். தலைமயிர் அதிகமில்லை. இரண்டு பக்கத்திலும் பின் வாங்கியிருந்தார். பெரிய நெற்றி, அடர்த்தியான புருவங்கள், மிக மெல்லிய உதடுகள், அவரது பொதுவான தோற்றம் நினைத்ததைச் சாதிக்கும் ஒருவரைத்தான் ஞாபகப்படுத்தியது.


அறையில் தூசு படிந்திருந்தது. ஒரு வாரம் ஒருவரும் உள்ளே வரவில்லை என்பதை உணர்த்தியது.

கணேஷ் மேஜையின் அறையை இழுத்துப் பார்த்தான், அதில் சில பேனாக்களும், ஒரு ஸ்டேப்ளர், ஒரு செக் புத்தகம், ஒரு என்கேஜ்மெண்ட் புஸ்தகம் (அதை விசிறினான். துல்லியமாக உபயோகப்படுத்தப்படாமல் இருந்தது) சில காகிதங்கள்.


மேஜைமேல் ஒரு 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' இருந்தது. கணேஷ் அதன் தேதியைப் பார்த்தான், 19. தூக்கிப் போட்டான். மறுபடி எடுத்தான். தேதி என்ன? 19. அந்த 19 உறுத்தியது.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எம். கனகராசா.
வயது: 20
முகவரி: 1, பாடும்மீன் ஒழுங்கை, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி.




பெயர்: எம். திவ்யா.
வயது: 19
முகவரி: 67/46, ஃபுளோர்ஸ் லேன், தெமட்டகொட, கொழும்பு-09.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம்.




பெயர்: கே. கஜேந்திரன்.
வயது: 28
முகவரி: P.O.BOX-1910, BEIRUT,LEBANON.
பொழுதுபோக்கு: உதைபந்து. வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: டி. றில்வான்.
வயது: 20
முகவரி: 48/9, பீர் சாய்பு வீதி, கொழும்பு-12.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: பாத்திமா பஸானா.
வயது: 25
முகவரி: 75/3, மொஹிடீன் மஸ்ஜிட் வீதி, மருதானை, கொழும்பு-10.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எம். றஸீப்.
வயது: 26
முகவரி: P.O.BOX-2166, DOHHA, QATAR.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: எம். முகமட் லாபீர்.
வயது: 22
முகவரி: கம்பிரிகஸ்வெவ, அநுராதபுரம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். பைஸர்.
வயது: 20
முகவரி: 42, குருநாகல் வீதி, தம்புள்ள.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். ஹபீப்.
வயது: 24
முகவரி: 386, புதுப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று-06.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஆர். ராஜா.
வயது: 30
முகவரி: பெலவன் கந்தை எஸ்டேட், அவிசாவளை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: என். சிவராஜன்.
வயது: 28
முகவரி: JOHS.HØIRUPSVES-3-1-45,5800NYBORG FYN,DENMARK.
பொழுது போக்கு: ரீ.வி., பேனா நட்பு.

பெயர்: ஏ. இன்பராஜ்.
வயது: 23
முகவரி: 191, மூன்றாம் கட்டை, பசறை வீதி, பதுளை.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு.



படிப்பகம்

www.padippakam.com

# தூக்கு மேடைக் குறிப்பு

ஜூலியஸ் பூசிக்

10

எதிர் அறையின் வெளிச் சுவரில் கதவுக்கு அருகே பெல்ட்டும் வேறு சில பொருட்களும் தொங்குகின்றன.

சிறைக் கதவு திறக்கப்படும் போதெல்லாம் நான் அவற்றை ஆவலுடன் உற்று நோக்குகிறேன். அவை சிறிது நம்பிக்கையை அளிக்கின்றன.

உன்னைக் கைது செய்யும்போது அவர்கள் உன்னை நினைவு இழந்து விழும்வரையில் அல்லது சாகும்வரையில் அடி அடியென்று அடிக்கலாம்.

ஆனால் அதற்கு முன்னர் நீ தற்கொலை செய்து கொள்ளாமல் இருக்கும் பொருட்டு, முன் எச்சரிக்கையாக உன்னுடைய டை, பெல்ட், உள்ளாடை ஆகியவற்றை எடுத்துப் பத்திரப்படுத்துகிறார்கள்.

சாவை விளைவிக்கக்கூடிய இந்த அபாயகரமான ஆயுதங்கள், நீ வேறு இடத்திற்கு அல்லது கடின வேலை முகாமுக்கு, அல்லது தூக்கு மேடைக்கு அனுப்பப்படும்வரை சிறைக்காரியாலயத்தில் பத்திரமாக இருக்கும்.

உன்னை அனுப்புவது என்று தீர்மானித்தவுடன், உன்னை உத்தியோக சம்பிரதாயங்களுடன் அழைத்து அவற்றை உன்னிடம் திரும்பித் தருவார்கள்.

ஆனால் அவற்றை நீ உன் அறைக்கு எடுத்துப்போகக்கூடாது. அறைக்கு வெளியிலுள்ள சுவரில் தொங்கவிடவேண்டும்.

நீ வண்டியில் ஏறிப் பிரயாணத்தை தொடங்கும்வரை அவை அங்கேயே தொங்கும்.

அவற்றைப் பார்த்தவுடன் அந்த அறையில் யாரோ ஒருவர் கட்டாயப் பிரயாணத்துக்கு ஆயத்தமாகிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்துவிடும்.

இப்படித்தான் இங்கு நாங்கள் வாழ்கிறோம். சென்ற வருடம், சென்ற மாதம், நேற்று, நாளை– நம்பிக்கைக்கு இருப்பிடமான 'நாளை'யின் பேரில் எங்கள் கவனம் தினமும் திரும்புகிறது.

உன் விதி தீர்மானிக்கப்பட்டு விட்டது, நாளைக்கு மறுநாள் நீ சுட்டுக் கொல்லப்படலாம்! பரவாயில்லை! நாளைவரை உயிருடன் வாழ்! அது எல்லாவற்றையும் மாற்றினாலும் மாற்றும்!

நிலவரம் நிலையற்று இருப்பதனால் நாளைக்கு என்ன நேரும் என்பது யாருக்குத் தெரியும்?

நாளைகள் கழிகின்றன. ஆயிரக்கணக்கானோர் மடிகிறார்கள். அவர்களுக்கு நாளை என்பது இனியில்லை.

ஆனால் உயிருடன் இருப்பவர்கள் இந்தக் குன்றாத நம்பிக்கையுடன் வாழ்வை நீடிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மனோநிலையில் மிக மிக அபத்தமான வதந்திகள் கிளம்புகின்றன.

யுத்தம் முடிவுறுவதைப் பற்றி ஒவ்வொரு வாரமும் ஒரு வசீகரமான கதை பவனி வரும். ஒவ்வொருவரும் புன்னகை செய்து அதை மற்றவரின் காதில் ஓதுவர்.

அப்படிப்பட்ட செய்திகளை நம்பாமலிருக்க, நீ சிரமத்துடன் முயற்சிக்கிறாய். வீண் நம்பிக்கைகளை அடக்க முயற்சி செய்கிறாய்.

ஏனெனில், வீண் நம்பிக்கை ஒருவனுடைய மனோதிடத்தை வலுப்படுத்துவதற்குப் பதில்– இறுதியில் பார்க்கப்போனால்– பலவீனப்படுத்துகிறது!

வெற்றி மனப்பான்மை, வெற்றி விரைகிறது என்ற நம்பிக்கை பொய்களைக் கொண்டு வளர்க்கப்படக் கூடாது. வளர்க்கவும் முடியாது!

யுத்தம் எந்த ஒரு குறிப்பிட்ட விதத்தில் முடியப்போகிறதோ, அந்த நிலைமையைத் தெளிவாகப் பார்க்கின்ற உண்மையைக் கொண்டே அது வளர்க்கப்பட வேண்டும்.

உண்மையின் பேரில் ஒருவனுக்குள்ள அடிப்படையான பற்று அவனது உள்ளத்திலேயே இருக்கிறது.

ஒருநாள் அவகாசம் விதியை நிச்சயிக்கக் கூடியதாக இருக்கும். உனக்குக் கிடைக்கும் அந்த ஒருநாள் அவகாசம், நீ விட்டுப் பிரிய மறுக்கும் உயிருக்கும், உன்னை மிரட்டுகிற சாவுக்கும் இடையே உள்ள எல்லைக் கோட்டை அழிக்கக்கூடிய நாளாகவும் இருக்கலாம்.

மனித வாழ்க்கையில் அநேக நாட்கள் இருக்கவில்லை. எனினும், நீ அந்த நாட்களை வெகு விரைவாக, இன்னும் வேகமாகக் கழிக்க விரும்புகிறாய்.

நாளை நேற்றாகி விட்டது. நாளை மறுநாள் என்றாகி இருக்கிறது. பிறகு அதுவும் கழிகிறது. உள்ளாடை, பெல்ட் முதலியவை இன்னும் எதிர் அறை வெளிச் சுவரில் தொங்குகின்றன.

## இராணுவச் சட்டம் 1942

சரியாக ஓராண்டுக்கு முன் நடந்தது இது:

அவர்கள் எங்களை வராந்தாவில் வரிசையாக நிற்க வைத்தனர்.

அப்போது எங்களிடையே தோழர் விக்டர் சைனிக் நிற்கிறார். அவர்தான் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர்களில் உயிருடன் இருந்த கடைசி நபர். 1941 பெப்ரவரியில் கைது செய்யப்பட்டவர்.

நெட்டை மரம் போன்ற ஒரு எஸ்.எஸ். படை அதிகாரி அவருடைய கண்ணுக்கு எதிரே ஒரு துண்டு வெள்ளைக் காகிதத்தைக் காட்டுகிறான்.

அந்தக் காகிதத்தில் 'விடுதலை உத்தரவு' என்று பெரிய எழுத்துக்களில் அச்சிட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்தது. அவன் குரூரமாகச் சிரித்தவாறு சொல்கிறான்:

"ஏ யூதப் பயலே! இதைப்பாரடா; இந்த உத்தரவு வரும் வரையில் தப்பிப் பிழைத்து விட்டாய்! பாரடா உன் விடுதலை உத்தரவு."

அத்துடன் வார்த்தையை நிறுத்தி, கை ஜாடையால் விரல்களைக் கழுத்தைச் சுற்றிக் கொண்டுவந்து, விக்டருடைய தலை உருளும் என்று சொல்கிறான்.

1941ம் வருட இராணுவச் சட்டத்தின் போது முதலில் கொல்லப்பட்டவர் ஒட்டோ சைனிக். இப்போது 1942ம் வருட இராணுவச் சட்டத்தின்போது முதலில் கொல்லப்படுபவர் அவருடைய சகோதரரான விக்டர் சைனிக்.

விக்டர் சைனிக்கின் தலையைச் சீவ, அவர்கள் கூறுவதுபோல 'அறுவடை'க்காக விக்டரை அவர்கள் தள்ளிப்போனார்கள்.

வெளியே ஒரு அதிகாரியை போராளிகள் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். சிறை அதிகாரிகள் கைதிகள்மீது அதற்காக வஞ்சம் தீர்த்தார்கள்.

பஸ்களில் எங்களை அழைத்துப் போகும்போது எஸ்.எஸ்.படையினர் கைதிகளை துப்பாக்கிக் கட்டைகளால் குத்தினார்கள். பஸ் அரைமைல் தூரம் போவதற்குள் டஜன் கணக்கான கைதிகளின் முகத்தில் இருந்தும், வாயில் இருந்தும் இரத்தம் சொட்டும்.

என்கூடப் பஸ்ஸில் வருபவர்களுக்கு அவ்வளவு கஷ்டமில்லை. ஏனெனில் என் மீசை அநேக தமாஷ் விளையாட்டுக்களுக்கு ஏற்ற சாதனமாக விளங்குகிறது.

எஸ்.எஸ்.படையினர் என் மீசையுடன் விளையாடுவதால் மற்றவர்களை அடிக்க அதிக நேரம் கிடைப்பதில்லை.

பஸ் நொடியில் குலுங்கினால் எஸ்.எஸ். முரடன் பஸ்சின் வாரைப் பிடிப்பதுபோல என் மீசையைப் பிடித்து தொங்குவான். இது அவர்களுடைய பொழுதுபோக்குக் காரியங்களில் ஒன்று.

விசாரணை எப்போதும் பின்வருமாறு முடிவுற்றது.

"நாளைக்குள் வழிக்கு வராவிட்டால், நாளையே உன்னைச் சுட்டுக் கொன்று விடுவோம்!"

இந்தக் கூற்றில் இப்போதெல்லாம் எவ்வித பயங்கரமும் இருப்பதாகத் தோன்றவில்லை.

ஒவ்வொரு நாள் மாலையிலும் அவர்கள் வராந்தாவில் நின்று பெயர்களைக் கூப்பிடுவார்கள்.

ஒரு நொடி நேரத்திற்குள் ஐம்பது, நூறு, இருநூறு கைதிகள் கையும், காலும் கட்டப்பட்டு, மோட்டார் காரில் கிடத்தப்பட்டு, கசாப்புக் கடையின் அறுவை இடத்திற்குப் போகும் ஆடுகளைப்போல ஒரேயடியாக கொல்லப்படுவதற்காக, கோபிலிஸி என்ற இடத்திற்கு அனுப்பப்படுவர்.

அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் என்ன?

முதலாவதாக அவர்கள்மீது ஒரு குற்றமும் நிரூபிக்கப்படவில்லை. அவர்கள் கைது செய்யப்பட்டனர். எந்தப் பெரிய வழக்கிலும் அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. மேற்கொண்டு விசாரிக்க அவர்கள் தேவைப்படவில்லை.

ஆகவே அவர்கள் கொலைப்பீடத்தில் உபயோகப்படுத்தப்படலாம்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒரு தோழர், சிலேடையான ஒரு கவிதையை ஒன்பது பேருக்கு முன்னிலையில் வாசித்துக் காட்டினார்.

அதற்காக கவிதை வாசித்தவரும், அதைக் கேட்டவர்களும் கைதுசெய்யப்பட்டனர். இப்போது அவர்கள் சாவு அறைகளில் அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

> **மிக மிக அபத்தமான வதந்திகள் கிளம்புகின்றன! யுத்தம் முடிவுறுவதைப் பற்றி ஒவ்வொரு வாரமும் ஒரு வசீகரமான கதை பவனிவரும்(!)**

சட்ட விரோதமான துண்டுப்பிரசுரத்தை விநியோகித்த பெண் கைது செய்யப்பட்டாள். அவள் ஒருபோதும் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களிடமும் ஒரு ஆதாரம் கூட இல்லை.

இருந்தபோதிலும் அவர்கள் அவளுடைய சகோதரர்களையும், சகோதரிகளையும், சகோதரர்களின் மனைவிகளையும், சகோதரிகளின் கணவன்மாரையும் கைது செய்தனர்.



இப்போது அனைவரையும் சேர்த்துக் கொல்லப்போகிறார்கள்.

ஏனெனில், சந்தேகமானவர்களின் குடும்பங்கள் முழுவதையும் கருவறுப்பதுதான் இந்த இராணுவச் சட்டத்தின் இலட்சியம்.

ஒரு தபால்காரன் தவறுதலாகக் கைது செய்யப்பட்டான். தன்னை விடுதலை செய்துவிடுவார்கள் என்று நம்பியிருந்தான். கொலைப்பீடத்திற்கு அனுப்பப்படுகிறவர்களின் வரிசையில் தள்ளப்பட்டான். அவனையும் வண்டியில் ஏற்றிச் சென்று சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.

மறுநாள் தான் அது தவறு என்று அவர்கள் கண்டுபிடிக்கிறார்கள். தபால்காரனின் பெயர் உடைய வேறு ஒருவன் சுட்டுக் கொல்லப்பட இருந்தான். அவன்தான் என்றெண்ணி தபால்காரனைச் சுட்டு கொன்றுவிட்டார்கள்.

மறுநாள் அந்த மற்றவனையும் சுட்டு சாகடித்தார்கள். இப்போது தவறு திருந்தி எல்லாம் சரியாகிவிட்டன. அவர்கள் சுட்டுக் கொல்லும் நபர்கள் யாவரும் தண்டிக்கப்பட்டவர்கள்தானா என்பதை நிச்சயிக்க யாருக்கு அவகாசம் எடுத்துக்கொள்ள முடியும்?

அப்படிச் சரிபார்ப்பதில்தான் என்ன பயன்; அவர்களுடைய இலட்சியம் தேசம் முழுவதையும் கொன்றுவிடுவதென்று இருக்கும்போது!

அன்று இரவு 'விசாரணை'யை முடித்துத் திரும்பிவர வெகு நேரமாகிவிட்டது. சுவருக்குப் பக்கத்தில், ஆற்றல்மிக்க செக் நாட்டு நாவலாசிரியர் விலாடிமீர் வான்சூரா நிற்கிறார்.

அவருடைய காலடியில் அவருடைய பொருட்கள் அடங்கிய ஒரு சிறு மூட்டை கிடக்கிறது. அதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குத் தெரியும். அவருக்கும் தெரியும்.

நாங்கள் ஒரு நொடி நேரம் கையைப் பிடித்துக் கொள்கிறோம். தொலை தூரத்தை, நம் உயிர்களுக்கு அப்பால் உள்ள வெகுதூரத்தைக் கண்களால் உற்று நோக்கிக்கொண்டு தலையைச் சிறிது தாழ்த்தினாற்போல அவர் நின்று கொண்டிருப்பதை மாடிவராந்தாவிலிருந்து நான் பார்க்கிறேன்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு அவருடைய பெயரை அவர்கள் கூப்பிடுகிறார்கள்.

சிலநாட்களுக்குப் பிறகு அதே சுவருக்குப் பக்கத்தில் மிலொஷ் கிராஸ்னி நிற்கிறார். இவர் தைரியம் மிகுந்த புரட்சி வீரர். சென்ற வருடம் அக்டோபரில் கைது செய்யப்பட்டார்.

சித்திரவதையினாலோ, அல்லது தனிமைக் கொடுமையினாலோ அவரது உள்ளம் உடைந்து தளரவில்லை.

சுவருக்கு அப்பால் சிறிது முகத்தைத் திருப்பி, பக்கத்தில் நிற்கும் காவல்காரனிடம் எதையோ விளக்கிக் கொண்டிருக்கிறார். என்னை சட்டென்று பார்க்கிறார். உடனே புன்னகை செய்கிறார். விடைபெற்றுக் கொள்ளும் பாவனையில் தலை வணங்குகிறார். பிறகு காவல்காரனிடம் பேச்சைத் தொடருகிறார்.

"இது உங்களுக்கு உதவவே உதவாது. இன்னும் எங்களில் அநேகர் மடியப் போகிறோம். ஆனால் இறுதியில் நீங்கள் முறியடிக்கப்படுவீர்கள்.!!" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.

பிணங்கள் மலைபோல் குவிகின்றன. அவர்கள் இப்போதெல்லாம் பத்துக் கணக்கிலோ, நூற்றுக்கணக்கிலோ எண்ணுவதில்லை; ஆயிரக்கணக்கில் எண்ணுகிறார்கள்.

புதிய இரத்தத்தின் வாசனை மிருகங்களின் மூக்கைத் துளைக்கிறது.

அவர்கள் எல்லோருமே இரவு வெகு நேரம்வரையிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும்கூட ஓய்வில்லாமல் 'உழைக்கிறார்கள்'. அவர்கள் எல்லோருமே எஸ்.எஸ். சீருடை அணிந்திருக்கிறார்கள்.

இது அவர்களுடைய திருவிழா, நரபலி விழா.

அவர்கள் தொழிலாளர்களை, ஆசிரியர்களை, எழுத்தாளர்களை, விவசாயிகளை எல்லோரையும் கொல்லுகிறார்கள். ஆண்களைப், பெண்களை, குழந்தைகளைச் சாகடிக்கிறார்கள். முழுக் குடும்பங்களையும் வெட்டிச் சாய்க்கிறார்கள்.

முழுக் கிராமங்களையும் வேரோடு அழித்து, எரித்துச் சாம்பலாக்குகிறார்கள்!

தோட்டாச்சாவு– பிளேக் நோய்போல நாட்டில் எங்கும் பரவி, வித்தியாசம் எதுவும் பாராட்டாமல் எல்லோரையும் அணைத்துக் கொள்கிறது.

ஆனால் இந்தப் பயங்கரத்திலும் மக்கள் வாழ்கிறார்கள்.

இது நம்பமுடியாதுதான்; ஆனால் உண்மை. மக்கள் இன்னும் வாழ்கிறார்கள், உண்கிறார்கள், உறங்குகிறார்கள், அன்பு செலுத்துகிறார்கள். ஆயிரத்தெட்டு விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்.

அவர்களுடைய மனதை பயங்கர உணர்ச்சி அழுத்துகிறது. ஆனால் அதை அவர்கள் பொறுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் தலை வணங்கவில்லை. அடிபணியவுமில்லை.

(தொடர்ந்து வரும்)

# அம்மா வந்தாள்

ரூபராணி

சங்குப்பாட்டி வெற்றிலை உரலை 'டங்டங்' என்று இடித்துக் கொண்டிருந்தாள். தாழ்வாரத்தில் தூங்கிக் கிடந்த சொறி நாய் ஒன்று அடிக்கடி தலையைத் தூக்கி வள் வள் என்று குரல் எழுப்பியது.

சுகந்தி கோழிக்கூட்டுப் பக்கம் பார்வையை மேயவிட்டாள். அந்த வெள்ளைப் பேட்டுக்கோழி எவ்வளவு அன்போடு அதன் குஞ்சுகளை அணைத்தபடி கிடப்பதைக்கண்டு ஆச்சரியத்தில் நெகிழ்ந்து போனாள். என்ன நினைத்தாளோ "பாட்டி பாட்டி." என்று கத்தியவள் ஓடிச்சென்று சங்குப்பாட்டியின் எதிரே உட்கார்ந்தாள்.

"என்னம்மா..?" பாசத்தோடு பேத்தியை விழித்தாள் பாட்டி.

"ஏன் பாட்டி இந்தக் குஞ்சுக் கோழிகளுக்கெல்லாம் அம்மா... யாரு...?"

"அந்த வெள்ளைக் கோழிதான்!" பாட்டி பொக்கை வாயைத் திறந்து சொன்னாள். இடித்த வெற்றிலையை வாயில் குதப்பி விட்டு உரலை ஒரு ஓரமாக உருட்டி விட்டாள் பாட்டி.

"பாட்டி...! எனக்கு அம்மா இரு...க்...கா?" கண்கள் பளபளக்கச் சுகந்தி கேட்டாள்.

"இருக்கே.." பாட்டி அந்த ஏழு வயதுச்சிறுமியை இழுத்துத் தன் மடியில் வைத்தாள்.

"அம்மா எப்படி இருப்பா..? சொல்லு பாட்டி....!"

"அழகாருப்பா....!"

"ஹாய்.. எங்க ரீச்சர் மாதிரியா?"

"ஆமா ஒன்னோட ரீச்சர் மாதிரியேதான்!"

"எங்க ரீச்சர் நெத்தில தெனம் வட்டமாய்ப் பொட்டு வைப்பா... கூந்தல் ரொம்ப நீளம் பாட்டி.. வடிவான சேலை கட்டி வருவா. நாங்கல்லாம் நியூ பிஞ்ச் கொடுப்பம்!"

"சுகந்திக்கண்ணு.. உன்னோட அம்மாவும் அப்படித்தான் இருப்பா. நீ வேணும்னாப் பாரேன்...!"

"பாட்டி அம்மா என்னோட நேசமா?"



"இல்லாமலா..?"

"அப்போ என்னவிட்டு ஏன் போனா?"

"காசு சம்பாதிக்கப்போயிருக்கா. இந்தா பார்... நீ போட்டிருக்கிற சட்டை; இந்த வெளயாட்டுச் சாமான் எல்லாம் ஒனக்காக உன் அம்மா வாங்கினது தான். அவ சீக்கிரம் வருவாகண்ணு!"

பாட்டி சொன்னதெல்லாம் சுகந்தியின் மனதில் பசுமையாகப் பதிந்துவிட்டன. அம்மாவை நினைக்கும்போது ரீச்சரும், ரீச்சரை நினைக்கும் போது அம்மாவும் அவள் பிஞ்சு மனதில் சதிராடிச் செல்வது வழக்கமாகிவிட்டது.

அந்தச் சிறிய பள்ளிக்கூடம் காலை ஏழரை மணிக்கெல்லாம் சுறுசுறுப்படைந்துவிடும். "குட் மோணிங் ரீச்சர்..." முகம் மலர்ந்து கூறினாள் சுகந்தி.

சாந்தா ரீச்சர் சிரித்த முகத்துடன் பதில் வணக்கம் சொன்னாள்.

"ரீச்சர்... உங்களுக்காக றோஜாப் பூ கொண்டு வந்திருக்கிறேன்."

ரீச்சர் அதைவாங்கித் தன் நீண்ட சடையில் செருகத் தவறுவதில்லை.

சுகந்தி, ரீச்சரின் சேலைத் தலைப்பை மெதுவாகத் தொட்டுப்பார்ப்பாள். ஒவ்வொரு சமயம்.. ரீச்சரின் இடுப்பைக் கட்டியணைத்து விட்டு ஓடுவாள். சுகந்தி தன் மீது வைத்த பாசத்தைப் புரிந்து கொண்ட ரீச்சர் பதில் அன்பு காட்டுவது வழக்கமான செயலாகிவிட்டது. சுகந்திக்கு இரண்டு வயதாயிருக்கும் போதே அவள் அப்பா கடலில் குளிக்கப் போய் அதில் மாண்டு போன பரிதாபத்தைச் சங்குப்பாட்டி சொன்னது சாந்தா ரீச்சரின் நினைவில் உறுத்தியது. நல்லாயிருந்த குடும்பம் நலிந்து போனதும் அவள் அறிந்த விஷயமே. சுகந்தியின் அம்மா பக்கத்து வீட்டுப் போதகர் ஒருவரின் தயவால் பிள்ளைப் பராமரிப்புப்பணிக்காக இத்தாலி சென்ற கதையும் சங்குப்பாட்டி சொல்லி வைத்திருந்தாள்.

> **"குழந்தைகளின் ஆசைகளும் எதிர்பார்ப்புக்களும் எவ்வளவு வினோதமானவை"**

குழந்தைகளின் ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் எவ்வளவு வினோதமானவை! சாந்தா ரீச்சர் நினைவுகளில் இருந்து தன்னைக் கத்தரித்துக் கொண்டாள். மூன்றாம் தவணைப் பரீட்சை முடிந்த மகிழ்ச்சியில் மாணவர்கள் தம் விருப்பம்போல் விளையாடிக் கொண்டிருந்தனர். சாந்தா ரீச்சர் வகுப்பறையில் பாடக் கொப்பிகளை ஒழுங்கு செய்துகொண்டிருந்தாள். "ரீச்சர்.... சுகந்தியைப் பிறின்சிப்பல் கூப்பிடுகிறார்." பத்தாம் ஆண்டுப் பையன் சொன்னான்

"அதோ.." என்று ரீச்சர் கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருந்த சுகந்தியைக் காட்டிவிட்டு றெஜிஸ்ரரைப் புரட்டினாள். போன வேகத்தில் திரும்பிய சுகந்தியின் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

"ரீச்சர்! சுகந்தியின் அம்மா வந்திருக்கிறா. ஆனா 'அது அவங்க அம்மா இல்லையாம்.. யாரோ வந்திருக்கிறாங்க என்று ஓடிவந்திட்டா..." சுகந்தியின் நண்பிகள் சாந்தா ரீச்சரிடம் அவசர அவசரமாகச் செய்தி சொன்னார்கள்

ரீச்சரின் முகத்தில் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் கணப்பொழுதில் அப்பிக் கொண்டன. சுகந்தியைக்கையில் பிடித்துக் கொண்டு வகுப்பறையைவிட்டு வெளியே வந்தாள் சாந்தா ரீச்சர். அங்கே.. முழு நீளக் காற்சட்டை, மேற்சட்டை அணிந்து ஒட்வெட்டிய முடியுடன் அம்மா... நின்று கொண்டிருந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

# மனிதர்கள்

**லறீனா-ஏ.ஹக்**

**வருவதாகச் சொல்லிச் சென்றவன் வந்தான். ஆனால்... அவன் வந்த கோலம்....?**

இருள் மங்கை உலகை அரவணைத்திருக்க, மின்மினிப் பூச்சிகள் மட்டும் சின்னச்சின்ன வெளிச்சப் பொட்டுக்களாய் ஆங்காங்கே பறந்து கொண்டிருந்தன. இருட்டை வெறித்தவளாய், சன்னல் கம்பிகளைப் பற்றியபடி கற்சிலை போல் ஆடாது அசையாது நின்றிருந்தாள் சுமனா.

அவளது கண்கள் கண்ணீரை மழையெனப் பொழிந்துகொண்டிருந்தன. 'ஹூம்...ம்!' இதயமே பிளந்து கொண்டதைப் போல், பெருமூச்சொன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது. சின்னஞ்சிறுமியாய் அவள் உலாவித்திரிந்த அந்த வளவு, சரத், கௌரி, பாத்திமா, கேசவன் அனைவரோடும் மாம்பிஞ்சு பொறுக்கியெடுத்து, உப்புத்தூவி உண்ட அந்த மாமரத்தடி, ஊஞ்சலுக்குப் பதிலாய் விழுதுகளை ஊஞ்சலாக்கித் தந்த ஆலமரம்... எல்லாமே... எல்லாமே.. இன்று அந்நியமாகிப் போனதாய் ஒருணர்வு அவளது இதயத்தை அழுத்தியது.

நண்பர்கள் ஐவரில் பாத்திமாவுக்கு விரைவில் திருமணம் முடிந்து, அவள் பக்கத்து ஊருக்குப் போய்விட, யௌவனமென்னும் வசந்தத்தை நுகர்ந்த சுமனாவும் சரத்தும் காதலால் கட்டுண்டனர்.

காலம் யாருக்காகவும் காத்திருக்கவில்லை. வடக்கில் போர் உக்கிரமடைந்தபோது, தெற்கில் கொடித்துவக்கு ஆராய்ச்சி போன்றோரின் நடத்தையும் மாறத்தொடங்கியது. அன்று படையினரில் கணிசமானோர் உயிரிழந்திருந்ததை வானொலிச் செய்தியைச் செவிமடுத்துக் கொண்டிருந்த ஆராய்ச்சி அறிந்து, பெரும் விசனமுற்றிருந்த வேளையில், வாசலில் கேசவனும் கௌரியும் வந்து நிற்பதைக் கண்டு அவரது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.



"உம்பலா மொக்கடத ஆவே?" (நீங்கள் ஏன் வந்தீர்கள்?)

"நிக்கங் சுமனவ பலண்ட ஆவா" (சும்மா, சுமனாவைப் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தோம்.)

"உம்பலாகே எவுன் அப்பே கொல்லோ மரணவா. அப்பி கொஹமத உம்பலவ மே வளவ்வட்ட எண்டதென்னே? பலயல்லா, ஆயே மெஹெறட்ட எண்ட எப்பா" (உங்கள் ஆட்கள் எங்கள் பொடியன்களைக் கொல்கிறார்கள். நாங்களெப்படி உங்களை இந்த வளவுக்குள் வரவிடுவது? போங்கள்; இனி இங்கே வரவேண்டாம்.)

ஆராய்ச்சியின் வார்த்தைகள் உள்ளத்தைப் புண்படுத்த அவமானத்துடன் தலை குனிந்து வெளியேற முயன்றபோது, தடுக்க முற்பட்ட சுமனாவின் கன்னத்தை ஆராய்ச்சியின் வலியகரம் பதம்பார்த்தது.

கொடித்துவக்கு ஆராய்ச்சியின் செல்வ மகள் சுமனா தன் தோழர்களுடன் தோட்டந்துரவுகளிலும், வயல்வரம்புகளிலும், ஓடைக் கரைகளிலும் துள்ளித் திரிந்ததைத் திடீரென இடை நிறுத்திக்கொண்டது ஏனென்று புரியாது, கேசவனும், சரத்தும் வியப்புற்றவர்களாய், கௌரியின் வீட்டுக்குச் சென்றனர். பெரியவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து கௌரியும் பாத்திமாவும் கிரகித்துக்கூறியதன் மூலம், சுமனா இனித் தங்களோடு விளையாட வரமாட்டாள் என்பதுமட்டும் அவர்களுக்குத் தெளிவாகப் புரிந்தது.

முழு ஊரும் ஆராய்ச்சியின் வீட்டுக்குப் போய் விருந்துண்ட அந்த நாளில், அந்தச் சிறுவர்கள் யன்னலுக்கூடாக எம்பியெம்பி பார்க்க, பாதி நாணமும் பாதி ஆவலுமாகப் புன்னகைத்தது சுமனாவுக்கு இன்றுபோல் நினைவிருந்தது.

பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்த சுமனாவை சுவர்க்கடிகாரம் சுயநினைவுக்குக் கொண்டு வந்தது. மெல்ல யன்னலை இழுத்து மூடிவிட்டு, கட்டிலில் சாய்ந்தாள். எனினும் தூக்கம் வரமறுத்தது.

சுமனாவின் வலது கரம், மெல்லத் தன் வயிற்றைத் தடவிப்பார்த்தது. 'குபுக்'கென மீண்டும் கண்ணீர் மடைதிறந்த வெள்ளமெனப் பாய்ந்தது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காய்க் கீழுதட்டைப் பற்களால் அழுத்தினாள். அதற்கு மேலும் தாளமாட்டாமல், தலையணையில் முகம் புதைத்து விசித்தாள். 'ஓ! சரத், நீங்கள் இப்படிச் செய்துவிட்டீர்களே! உங்கள் உயிரைக் குடித்த குண்டு, என்னையும், உங்கள் சிசுவையும் இப்படி நிர்க்கதியாக்கி விட்டதே!'

இராணுவத்தில் சரத் சேர்ந்தது சுமனாவுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. எனினும், சரத் கூறிய சமாதானங்கள் அவளைச் சற்றே அமைதிப்படுத்தின. நீண்ட நாட்களின் பின் விடுமுறைக்கு ஊர்திரும்பிய சரத், இரண்டே தினங்களில் மீண்டும் முகாமுக்குச் செல்லப்போவதை அறிந்த சுமனா வேதனையில் சுருங்கிப்போனாள். வழமையாக அவர்கள் இருவரும் சந்தித்துப் பேசும், பூவரசமரத்தடியில் சரத்தின் மார்பில் முகம்புதைத்துத் தேம்பினாள் சுமனா.

அவளைத் தேற்றவென இதழ்களில் முத்தமிட்டபோது, அவர்களிருவருமே தம் வசம் இழந்தனர். சுமனாவின் தலைமயிரை அன்போடு கோதிய சரத், அடுத்த முறை தான் வந்தவுடன் அவளை மணந்து கொள்வதாக உறுதியளித்தான்.

சரத் கூறியபடி வரவே செய்தான். எனினும், நன்கு மூடி, 'சீல்' வைத்த பெட்டிக்குள் பிணமாகத்தான் அவனால் வரமுடிந்தது. அழுதழுது அரற்றியவாறு பலதடவை மயங்கி விழுந்தாள் சுமனா.

மேற்கொண்டு என்ன செய்வது? என்ற வினா பூதாகரமாய் உருவெடுக்க, சுமனாவுக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது. எங்கோ, சேவல்கூவும் சத்தம் கேட்டதும் 'விருட்'டென எழுந்து நின்றாள். அரவம் எழுப்பாமல், மெதுவாக நடந்து போய், ஆழ்ந்து உறங்கும் அன்னையைப் பார்க்கிறாள். கண்ணீரோடு அவரது இரு பாதங்களையும் மானசீகமாய்ப் பற்றி வணங்கியவளாய்ப் பின்புறக் கதவைத் திறந்து கொண்டு வேகமாக நடந்தாள். அந்தக் கருக்கிருட்டு நேரத்திலும் எத்தகைய அச்சமுமின்றி நடந்த சுமனாவின் கால்கள், பௌத்த கோவிலும், பிள்ளையார் கோவிலும் எதிரெதிருள்ள சந்தில் சற்றே தயங்கி விட்டுத் தம் பயணத்தைத் தொடர்ந்தன.

ஊரின் எல்லையிலிருந்த ஆழமான கிணற்றுக்குள் குதிக்க முற்பட்ட சுமனாவை, இரு வலிய கரங்கள் நீண்டு தடுத்தன. கோபத்தோடு திரும்பிய சுமனா, கேசவனைக் கண்டதும், அவனது இருகரங்களுக்குள்ளும் முகம் புதைத்துக் கதறினாள்.

"சுமனா, சரத்தின் பிரிவு எங்கள் எல்லோரை விடவும் உன்னை அதிகம் பாதித்திருக்குமென்பது உண்மையே! ஆனாலும், அதற்காக, வயதான உன் தாயைத் தவிக்க விட்டு நீ இப்படி....?"

"கேசவன், என்னைச் சாகவிடுங்கள். திருமணமாகாத நிலையில், சரத்தின் வாரிசைப் பெற்று நான் ஊருக்கு முன் எப்படித் தலைகாட்ட முடியும்? நடத்தை கெட்டவள் என்ற பெயரோடு வாழ்வதா? அந்த அவமானத்தை விட.. ஐயோ! சரத்! நீங்கள் என்னை இப்படி நிர்க்கதியாகப் போட்டுவிட்டுப் போய்விட்டீர்களே!"

"சுமனா! உன் வயிற்றில் வளரும் சிசுவுக்காகப் பயந்து நீ சாகத் தேவையில்லை. நான்.. நான்.. இருக்கிறேன். உனக்காக நான் இருக்கிறேன் சுமனா!"

"கேசவன், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் தமிழர், நான் சிங்களப் பெண், சமூகம் இதை ஏற்குமா?"

"சமூகமென்ன சமூகம்! காலங்காலமாக இனத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும் ஒருவரை ஒருவர் கடித்துக் குதறிக் கொண்டு... சீச்சீ! நாங்கள் மனிதர்கள் சுமனா; மிருகங்களல்ல!"

"கேசவன்!" என்று ஆனந்தக் கதறலோடு அவனது மார்பில் முகம் புதைத்தாள் சுமனா. அவர்களுக்கு இப்பொழுது மொழியெதுவும் தேவைப்படவில்லை.

# அழைப்பு

**-கிண்ணியா அமீரலி-**



**'கப்பல்துறை அருகில்; கரை சேரத்தான்— தோணியில்லை!'**

ரமீஸ். நானாவுக்கு இனி இல்லை என்ற சந்தோஷம்.

பெரிய இடத்திலிருந்து அழைப்பு வந்தால்—

பெருமை வரத்தானே செய்யும்?

அந்த வெள்ளை என்வலப்பை மேலும் கீழும், மேலும் மேலும் பார்த்தார்.

இன்று காலையில்தான் அவருக்கு அந்த அழைப்பிதழ் வந்திருந்தது. மனைவியிடம் காட்டினார்.

"பார்த்தீங்களா எவ்வளவு பெரிய இடத்தில் இருந்து எனக்கு அழைப்பு வந்திருக்குன்னு......?"

"இஞ்ச எண்ட ஆத்திரத்தக் கௌறாம ...ஒழுங்கா.... மரியாதையா...வேல வெட்டி செய்ற வழியப்பாருங்க....."– ஆரம்பித்தாள்.

அவள் முடிப்பதற்குள், அவர் தொடர்ந்தார்:

"நான் போகணும்...!"

"ஆமா இவரு பெரிய இவ்வரு– இவரு போகாட்டி அங்கே ஒண்ணும் நடக்காது தானே"–நின்றாள்.

சனிக்கிழமை காலையில் நுஸ்ரத் முதலாளி அவருடைய புதிய பங்களாவுக்குக் குடிபோகிறார். ரமீஸ் நானாவும் ஊர்க்காரர் ஆனபடியால் அவருக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார் நுஸ்ரத் முதலாளி. பங்களா கொழும்பில் என்றாலும் பரவாயில்லை..... நடந்து சரி போகலாம்....

பாவம் ரமீஸ் நானா.

அவர் சில்லறைக்கு எங்கே போவார்....?

சிலாபத்துக்கு எப்படிப் போவார்?

'பெரியாற்று முனை'யில் நுஸ்ரத் முதலாளிக்குப் பெரிய 'மீன் வாடி' இருக்கிறது.

பல படகுகளுக்குச் சொந்தக்காரரான நுஸ்ரத் முதலாளியிடம்– ரமீஸ் நானாவை அழைத்துச் சென்று அவருக்கொரு வேலை போட்டுக் கொடுக்க யாருமே இல்லை. திறமையும், தகுதியும் இருந்து என்ன பண்ண...? 'கல்வியிலே நடை தளர்ந்தேன். கலங்க வில்லை. கையிருப்பிலுள்ள தமிழ் காக்கும் என்னை!'– என்று சொல்லும் ரமீஸ் நானா மிகவும் கஷ்டப்படுகிறார். 'கப்பல்துறை அருகில்; கரை சேரத்தான் தோணியில்லை. என்னுடைய சாராம்சம் இதுதான்: 'பேச்சு பல்லக்கு! தம்பி கால்நடை!'–என்று கவிதை எழுதிக் கொண்டிருக்கிறார்.

"நீங்க கட்டாயம் போகணுமா..?"

"யார் என்ன சொன்னாலும் சரி– நான் செய்றதுதான் சரி" என்று வாழும் ரமீஸ் நானா– மனைவி சொல்வதையா கேட்டுவிடப் போகிறார்....? இதோ...இன்று அவர் சிலாபம் போகிறார். பக்கத்து வீட்டுக்காரியிடம் வாங்கிய ஐநூறு ரூபாயை அடைப்பதெப்படி என்ற யோசனையில் ஆழ்ந்து போனாள் அவரது மனைவி.

# இறப்பு

**அ.கோகுலதீபன்**

பறவைகள் கீச்சிடும் சத்தத்தை வைத்துக்கொண்டே விடியப் போவதை அறிந்து கொண்ட குமரேசன் கூடத்திலிருந்து கண்களைக் கசக்கிக் கொண்டு வெளியேறினான். அருகிலிருந்த ஏனைய கூடாரங்களெல்லாம் அமைதியில் மூழ்கிக் கிடந்தன.

'இன்னும் மத்தவங்கள் எழும்பல்ல போல, சனங்கள் கூடுறத்துக்கு முன்னரே போனாத்தான். இந்த தடவையாவது ஊர் போகலாம்.' என்று எண்ணிக்கொண்டு கூடாரத்துள் நுழைந்தவாறு சேட்டை எடுத்த வண்ணம், மண்ணில் விரிக்கப்பட்ட கிழிந்த பாய்த் துண்டொன்றில் அயர்ந்து தூங்கும் தனது எட்டு வயது மகனின் தலையை வருடிவிட்டான்.

இந்தப் பிஞ்சுகள் படும் கொடுமைகளை ஆண்டவன் இன்னும் பார்க்கமாட்டானா? என்ற கேள்விபோல ஒரு பெருமூச்சொன்று வெளிப்பட்டு, அவனின் நிசப்தத்தைக் கலைத்தது. அப்போது அவனின் மனைவியும் எழுந்து விட்டதைக் கண்டதும்,

"விமலா....இண்டைக்கெண்டாலும் அனுமதி வசதிப்படுமான்னு பார்த்திட்டு வர்றன்." என்றபடி ஹாபரை நோக்கி நடந்தான்.

விமலா பெருமூச்சுவிட்டபடி "ம்.... எத்தின நாளா இவர் அனுமதி எடுக்கப் போறார்,...? இன்னும் கிடைக்கல. அது கிடைக்கிற வர நாம உயிரோட இருக்கமோ என்னவோ..?" என்று முணுமுணுத்தபடி தேநீர் வைக்கும் நோக்கத்துடன் முற்றத்திலிருந்த வேப்பமரத்தின் பட்ட தடிகளை முறித்துக்கொண்டாள்.

கடைசியாக யாழ்ப்பாணத்தில் நடந்த சண்டைக்குப் பயந்து வீடு, வளவு எல்லாவற்றையும் விட்டுப்போட்டு திருகோணமலைக்கு ஓடி வந்தவர்கள். இப்போது கப்பல் மூலம் யாழ் போக அனுமதியை எதிர்பார்த்து அலைகின்றான். சிலவேளை கப்பல் பயணம் திடீரென்று இடைநிறுத்தப் படுவதும் உண்டு. கிட்டத்தட்ட இங்கு வாழ்கின்றவர்களெல்லாம் இப்படி வந்தவர்கள்தான், ஊர் போக வசதியில்லாமல் 'அகதி'ப் பட்டம் வாங்கி தினமும் கஷ்டப்படுதுகள்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. அனேகமாக எல்லாக் கூடாரங்களுள் இருந்தவர்களும் எழுந்து விட்டார்கள். சில குடும்பத் தலைவர்கள் ஹாபருக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். சிலர் இருமிக்கொண்டும், ஒரு சிலர் தும்மிக் கொண்டும், தமது நோயை யாரிடமும் கூற முடியாதவர்களாக இரைந்து கொண்டிருந்தனர். இது அன்று மட்டும் புதிதல்ல. ஒவ்வொரு காலையிலும் அவதானிக்கக் கூடிய காட்சிகள்தான்.



எழுந்து வெளியே ஓடி வந்த குழந்தை "அப்பா....எங்கம்மா...?" என்று கேட்டான். "ஹாபருக்குப் போயிருக்கார்...." என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு ஒரு கோப்பையில் தேநீர் ஊற்றிக் கொடுத்தபடி, வெளியே எட்டிப் பார்த்தவள், பக்கத்தில் வசிக்கும் பொன்னம்மா அழுது கொண்டு ஓடி வருவதைக் கண்டதும், ஏதோ விபரீதம் நடந்து விட்டது என்பதை அறிந்து கொண்டாள்.

யாருக்கு? என்ன நடந்தது? என்பதை அறிய முன்னரே அவளது நெஞ்சம் படபடத்தது. கண்களில் நீர் சொட்ட ஆரம்பமாகிக் கொண்டிருந்தன.

"எண்ட வாயால எப்படியம்மா சொல்லுவன்...? நம்ம குமரேசன் நம்மளயெல்லாம் விட்டுட்டுப் போயிட்டானம்மா.....!" என்று விமலாவைக் கட்டிப்பிடித்தவாறு தலையிலடித்துக் கொண்டு கதறினாள் பொன்னம்மா.

"ஐயோ...என்ன அநாதையாக்கிட்டுப் போயிட்டிங்களா...?" என்று மறுபுறம் ஒப்பாரி வைத்துக்கொண்டு நிலத்தில் விழுந்தாள் விமலா. அவளின் மகனும் நடந்த செய்தியை அறிந்தவன் போல் "அப்பா....! அப்பா...!" என்று அவளின் கையைப் பிடித்து அழுது கொண்டிருந்தான். சனக்கூட்டம் அவ்விடத்தை ஆக்கிரமிக்க ஆரம்பித்தது.

"அவன் ஹாபருக்கு சென்றுகொண்டிருந்த நேரத்தில் முதலில் ஒரு குண்டுச் சத்தம் கேட்டதாம். பின்னர் அடுத்தடுத்து வெடிச்சத்தங்கள் கேட்டனவாம். யாருக்கோ வைத்த குறி குமரேசனுக்கு பட்டுவிட்டது. அந்த நேரம் பார்த்து போனானே பாவம். கெட்ட நேரம்தான்....ஆனால் பாருங்கோ..." யாரோ ஒருவர் தான் கண்டதையும் காணாததையும் விபரித்துக் கொண்டிருந்தார்.

# வரவேற்பு

**எம்.எச்.எம். தௌபீக்**



விடுதியின் ஓரமாக காரை நிறுத்திவிட்டு அங்குமிங்கும் நோட்டமிட்டவாறு விடுதிக்குள் நுழைந்தான் பிரபாகர். ஆங்காங்கே நரைமுடிகள் அரும்புவிட்டு இளமை விடைபெற்று முதுமையிடம் ஒப்படைக்கும் ஐம்பத்தைந்து வயதில் அடியெடுத்து வைத்திருந்தான் அவன். அப்படியானால் இந்த வயதில் விடுதிக்குள் இவனுக்கு என்ன வேலை? அதுதான் ஆசை! ஆசை யாரைத்தான் விட்டது?

உள்ளே செல்ல காலடி வைத்த பிரபாகருக்கு மனைவியின் ஞாபகம் வந்தபோது சற்றுத் தயக்கமாகத்தான் இருந்தது. தனது முதுமையையும் தலைக்குமேல் வளர்ந்த ஐந்து பிள்ளைகளையும் காரணம் காட்டி "இந்த வயதில் இதெல்லாம் எதற்கு?" என்று ஒதுங்கிப்போய் அவனது ஆசைகளை உதாசீனப்படுத்தும் அவள்தானே எல்லாவற்றிற்கும் காரணம், என்று அவனது உள் உணர்வுகள் தயக்கத்தைக் கலைக்க தைரியமாக உட்பிரவேசித்தான்.

விடுதிக்குள் ஒரு அம்மா கம்பீரமாய் அமர்ந்திருந்தாள்.

அந்த விடுதியை பரிபாலிப்பவர் அவராகத்தான் இருக்க வேண்டும். பிரபாகர் தன் தேவையைச் சொன்னான்.

வரிசையில் நின்று ஓரப்பார்வையால் பிரபாகரை அளந்து புன்னகை சிந்திகொண்டிருந்த அந்த சிட்டுக்களால் அவனின் உணர்வுகள் சந்தோஷ ரெக்கை கட்டிப் பறக்க, ஒரு சிட்டைத் தெரிவு செய்து காரில் ஏற்றிக்கொண்டு பறந்தான்.

பிரபாகரின் அருகில் அமர்ந்து ஓரப் பார்வையால் புன்னகைசிந்தி அவனிடம் அந்த சிட்டு நெருங்கி நெருங்கி வந்தபோது நாடி நரம்பெங்கும் மின்சாரம் பாய்ச்சப் பட்டது போன்ற உணர்வில் அந்த சிட்டின் தலையைத் தடவி முத்தமிட்டு தன் மடியில் சாய்த்துக் கொண்டு காரைச் செலுத்தினான்.

அந்தச்சிட்டின் அகோரப்பசியை அந்த பார்வையிலிருந்து அறிந்து கொண்ட பிரபாகர் அவன் எதிர்பார்த்த ஹோட்டல் வந்தபோது காரை நிறுத்தி உள்ளே அழைத்துச் சென்றான்.

பசியால் தவித்தவளுக்கு வயிறு நிறைய உணவு வாங்கிக் கொடுத்து பசியைத் தீர்த்து வைத்து காரில் ஏற்றிக்கொண்டு வீடுநோக்கி சென்ற பிரபாகருக்கு வீடு நெருங்க நெருங்க மனைவியின் பத்ரகாளி தோற்றம் கண்ணெதிரில் வந்து வந்து மறைந்து கொண்டிருந்தது. வீட்டிற்குள்ளிருந்து ஓடி வந்த அவன் மனைவி பிரபாகருடன் வந்தவளைக் கண்டு திக் பிரமை பிடித்தவள்போல் உற்று நோக்கிக்கொண்டிருந்தாள். பதிலுக்கு அவளும் ஓரப்பார்வையால் அவளைப் பார்த்து புன்னகை சிந்திக் கொண்டிருந்தாள்.

திடீரென்று பிரபாகரின் மனைவி தன் மனதில் என்ன நினைத்தாளோ... அந்த ஐந்து வயதுக் குழந்தையை வாஞ்சையோடு அணைத்து முத்தமிட்டுக் கொண்டிருந்தாள்.

பிறந்த பிள்ளைகள் ஐந்தும் ஆண்பிள்ளைகள் என்பதால் ஒரு பெண் குழந்தையை அனாதை விடுதியிலிருந்து எடுத்து வளர்க்க பிரபாகரன் ஆசைப்பட்டு சொல்லும் போதெல்லாம், "இந்த வயதில் அதெல்லாம் எதற்கு! இருக்கும் ஐந்து பிள்ளைகளும் போதும்!" என்று அவனின் தீராத ஆசைக்கு முற்றுப் புள்ளி வைத்துக் கொண்டிருப்பவள் குழந்தையை அனாதை விடுதியில் விட்டு விடும்படி ஆர்ப்பாட்டம் பண்ணுவாள் என்று எதிர்பார்த்த பிரபாகர் அவளின் செய்கை கண்டு திகைத்தே விட்டான்.

www.padippakam.com



## கண்ணுக்கு மை பழுது

இலக்கிய நயம் தருவது ரசிகன்

மாடத்துப்புறா மயங்கிக் கிடந்தது
மனமென்னும் கிண்ணத்தில் காதல் மது.

கடலுக்குள் மட்டுமா அலையடிக்கும்?
மனதுக்குள்ளும் அலை வந்து அடிக்கும்!
காதல் முன்னால்வர, கனவுகள் பின்னால் வரும்,
இதய வாசலில் வர்ணக்கோலம்-அவள்
இதயமெங்கும் இது நிலாக்காலம்!

பனியில் நனையும் பூக்கள் சிலிர்க்கும்
பனியெனப் பொழியும் நினைவில் நனைந்து
மனமென்னும் பூவும் சிலிர்க்கும் சிலிர்க்கும்!
கனவுகள் விரிந்து போர்வையாகும்!

இறுக்கி இழுத்துப் போர்த்துக் கொண்டாலும்
இமைகள் மூட விழிகள் மறுக்கும்!
கனவுப் போர்வைக்குள் மனம் உறங்காது
நினைவுப் போதைக்குள் மனம் வெறிகொள்ளும்!

மரத்தில் ஏறிக் கனி கொத்தும் கிளியாய்
மனத்தில் ஏறிய ஆசைகள் கொத்தும்!
மேகம் திரண்டால் மழைவந்து கொட்டும்
மோகம் திரண்டால் தாகம்தான் பெருகும்!

அவன் இல்லாத இரவு நீளமானது
அவன் இல்லாத உலகு நரகமானது
அவன் இல்லாத பொழுது வெப்பமானது
அவன் இல்லாத தனிமை முட்களானது!

மாடத்துப் புறா மஞ்சத்தில் புரண்டது
வேடன் எப்போது வருவான்? வினாதொடுத்தது!
வேடனைத் தேடும் புறா-அவன்
வேட்டையை ரசிக்கும் புறா!
விருந்தாக ஏங்கும் புறா-வில்லம்புகள்
படாமல் வருந்தும் புறா!

காதல் வில்லாகும்-அதில்
மோகம் அம்பாகும்.
வில்லுண்டு-அம்புண்டு-அதை
எடுக்கவும் தொடுக்கவும்
வேடன் இங்கு வரவேண்டும்!

மாடப் புறா தவித்தது-அதன்
மனதில் அலை அடித்தது!
மலர்ந்து விட்ட பூ இங்கே-அதன்
மனதைப் பிடித்த வண்டெங்கே?

விழிகள் விளக்காய் எரிகிறது
விடிய விடிய விழித்தெரிகிறது!

"தரவா தரவா சம்மதமா?- உன்னைத்
தர நீ சம்மதமா?
இறவா இறவா உறவிதுவா- என்னை
மறவா உறவாய் தொடர்ந்திடுமா?"
வினா தொடுத்தவன் எங்கே?
கனா வளர்த்தவன் எங்கே?

ஆடைக்குள் மறைத்த அழகுகள் போல-மன
ஓடைக்குள் ஆசை மறைந்திருக்கும்!
ஜாடையால் மோகம் முகம்காட்டும்-முக
மேடையில் வெட்கம் அரங்கேறும்!

'தாவியணைத்துக் கொள்ளாமல்-இவர்
தள்ளியிருந்து கொல்வது ஏனோ?
தழுவிக்கொள்ள கரங்கள் துடித்தும்
பாடம் பழகிக்கொள்ள தயக்கம் ஏனோ?'
மனதுக்குள் நினைப்பாள்-பார்வையினாலே
மலர்க்கணை தொடுப்பாள்!

வேல் எறிபட்ட மதயானைபோல-அவள்
மலர்க்கணை பட்டகாளை துடிப்பான்.
தும்பிக்கையை யானை சுழற்றும்-அவனோ
நம்பிக்கையோடு விழிகளைச் சுழற்றுவான்.
சுழன்ற விழிகள் சுற்றுலா நடத்த-இவள்
தேகமெங்கும் வெட்க விழா நடக்கும்!

'எட்ட நின்றால்தானே வெட்கம்-நெருங்கி
கிட்ட வந்துவிட்டால் என்ன?'
தனக்குள் கேள்வி அவனை நோக்கி.
தகிக்கும் வெப்பம் தேகம் முழுக்க!

'தீயை அணைக்கத் தீயே வருக-என்
தேகம் சாயத் தேகம் தருக!
தேனை அருந்தி தீஞ்சுவை பெறுக-என்
திருவே வருக, உருவைத் தருக'
என்றா அழைக்க முடியும்!

சம்மதம் என்று சொல்லவும் வெட்கம்-அவன்
பக்கம் வராமல் இருப்பதும் துக்கம்.

'மீட்டவா என்று யாழா அழைக்கும்?
தீட்டவா என்று ஓவியமா அழைக்கும்?
சூடவா என்று மலரா அழைக்கும்?
நாடிவா என்று நானா அழைப்பது?'
தவித்த மனம் தனக்குள் கேட்கும்.

எட்ட நின்றவன் நெருங்கி வந்ததும்
வட்ட நிலா தரையை நோக்கும்!
கட்டழகுகள் போருக்கு அழைக்க
தட்டமுடியாதவன் கட்டிக்கொள்வான்!

இனிய காவியம் இதழ்களில் ஆரம்பம்
முன்னுரைதானே முத்த முத்திரை.
மரத்தோடு கொடி ஒட்டிக் கொண்டது
கனியோடு அணில் தொற்றிக் கொண்டது
பனிமீது பூவும் பற்றுக்கொண்டது
தணியாத மோகத்தீ பற்றிக்கொண்டது.

இது என்ன புதுக்கதையோ-இது
யாரும் எழுதாத புதுப்பொருளோ?
இதழ்கள் இடம் மாறும்-நினைவு
தடுமாறும், கனவு நிஜமாகும்!
தேகம் ரகம் மாறும்- தேவை பரிமாறும்
தோகை இடம் பெயர -கானமயில்
தோகை காளை அவனாவான்!

'இன்று நினைத்தாலும் இதயம் நடமாடும்
என்று நினைத்தாலும் நினைவு பூத்தாடும்
வண்டு வரவேண்டும் வண்டு வரவேண்டும்
தேன் மொண்டு குடித்தாட-அந்த
வண்டு வரவேண்டும்!-மனமே
நீ சென்று கண்டு வரவேண்டும்-எங்கு
இருப்பாரோ, என்று வருவாரோ?
வந்து தரவேண்டும் வண்ணச் சுகம் யாவும்-அந்த.
வண்டு வரவேண்டும் என்று நீ பாடு!
கண்டு நீ பாடு, சென்று விடுதூது-என்
மனமே நீ சென்று விடுதூது!'

'காதல் வந்துவிட்டால் வயது போகாது
என்றும் பதினாறு-இளமை தேனாறு
காதல் வரலாறு கசந்து போகாது
சாதல் வரும்வரைக்கும் காதல் மாறாது
காத்திரு நீ தவறில்லை-வழி
பாத்திரு நீ பழுதில்லை!'
மனம் சொல்லிச் சிரித்தது.

'தேகம் தீயாச்சு-தென்றல் நெருப்பாச்சு
தாகம் கடலாச்சு-தண்ணீர் சூடாச்சு
வளையல் கழன்றாச்சு- கரங்கள் மெலிஞ்சாச்சு
தோளும் சிறுத்தாச்சு- தேகம் துரும்பாச்சு
நாளை அவர் வந்தால்-நீயோ
அவள் என்பார்! காலம் போனபின்பே
கோலம் கண்டென்ன?'

'போதும் பிடிவாதம்-வேண்டாம்
இனி வாதம்!
சென்று முகம் கண்டு-தூது
நான் சொல்வேன்'
மனம் இரங்கி மெல்ல இறங்கிப்போனது.

மனம்விடு தூது பலிக்கும்-அவன்
வருவது விரைவாய் நடக்கும்!
இங்கே நினைத்துக் கொண்டே இருந்தால்
நினைவுகள் போய் அங்கே எதிரொலிக்கும்
நம்மையே ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தால்
நமக்கது எப்படி தெரிகிறது- ஏதோ
ஊர்வது போல் எப்படிப் புரிகிறது?
நினைவுகளும் அப்படித்தான்-காதல்
நினைவுகளும் அப்படித்தான்!'
தனக்குள் தானே சொல்லி மகிழ்ந்தாள்.

மறுநாள் தோழி வந்து- "உன்
அவர் வரும் நாள் எப்போது?"
என்று கேட்டாள்.

"இன்றாகவும் இருக்கலாம்
இந்த நொடியாகவும் இருக்கலாம்!"
என்றாள் முகம் மலர்ந்து.

"நன்று-நன்று-உன்
கண்கள் தூங்கி நாளாச்சு-அவர்
வந்தால் தூங்க வழியேது?
வாடும். கண்கள் வளம் காட்ட
கண்ணுக்கு மையை நீ தீட்டு!"
என்றாள் தோழி குறும்பாக!

"கண்ணுக்கு மை அழகாகும்- ஆனால்
காதலுற்ற கண்ணுக்கு மை பழுதாகும்!"
என்றாள் அவளே-தோழி வியப்புற்றாள்

"கண்ணுக்கு மை பழுதா?
யாரடி சொன்னது இந்தக் கதை?"

"திருவள்ளுவர் காட்டிய
காதலி ஒருத்தி சொன்ன கதை!
கண்ணுக்குள் காதலர் இருக்கின்றார்
கண் மையினைத் தீட்டினால்
அவர் மறைவார்
மையும் திரையாய் மாறிவிடும்
மெய்யாம் காதலி சொன்ன கதை!"

**"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**
**எழுதேம் கரப்பாக்கு அறிந்து"**

அதிகாரம்-113, குறள்-1127

---

## சிந்தியா பதில்கள்

★ என் நண்பனின் அறிவுக் கூர்மையை பரிசீலிக்க ஆசைப்படுகிறேன். ஒரு வழி சொல்லுங்களேன்?

ஜே. ஜேக்கப், நீர்கொழும்பு.

அக்பர் சக்கரவர்த்தி பீர்பாலின் அறிவுக் கூர்மையைப் பரிசோதிக்க நினைத்தார். பீர்பாலை அழைத்து "மூன்று கேள்விகள் உம்மிடம் கேட்கப்போகிறேன். ஒரே பதிலில் விடை சொல்ல வேண்டும்!" என்றார் அக்பர்!

"கேளுங்கள் சக்கரவர்த்தி!" என்றார் பீர்பால். அக்பர் கேள்விகளை அடுக்கினார்.

"ஒன்று: வெற்றிலை அழுகியது ஏன்?

இரண்டு: குதிரை ஏன் இடக்குச் செய்தது?

மூன்று: ரொட்டி ஏன் கருகியது?" என்பதே அக்பர் கேட்ட மூன்று கேள்விகள்.

பீர்பால் உடனே சொன்னார்:

"திருப்பாமல் இருந்ததால்!"

○●○

★ நாவடக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார்களே. பேச்சுரிமையைக் கூடாது என்கிறார்களா?

செல்வன் மு. பகீரதன், மட்டக்களப்பு.

நாவடக்கத்தில் பல ரகம் உண்டு பகீரதன்! உங்களுக்கும் ஒரு பீர்பால் கதை:

அக்பர் சக்கரவர்த்தியும் பீர்பாலும் ஒரு முறை பேசிக்கொண்டிருந்தார்கள். பீர்பாலுக்கு அந்த நேரம் பார்த்து தும்மல் வந்துவிட்டது. அடக்கப்பார்த்தார். முடியவில்லை. தும்மிவிட்டார்.

உடனே அக்பர் அவரைப் பார்த்து, "நீர் ஒரு முட்டாள்!" என்றார்.

அதற்கு பீர்பால் சொன்னார்:

"இந்த விஷயத்தில் உங்களைவிட நான் பெரியவனாக இருக்க விரும்பவில்லை!"

○●○

★ கண்ணுக்குப் போடும் கண்ணாடியை மூக்குக் கண்ணாடி என்பது ஏன்?

எம். பிரபாகரன், பத்தனை.

முண்டுகொடுப்பதற்கு முதல் மரியாதை.

○●○

★ புத்திசாலிகளாக இருந்தும் தமிழர்கள் தலைநிமிர்ந்து நடக்க முடியவில்லையே! ஏன்?

எஸ். ஜெயசுப்பிரமணியம், தலவாக்கலை.

அப்பாவிகளாகவுமல்லவா இருக்கிறார்கள்!

○●○

★ தமிழக சிறையில் ஜெயலலிதாவைத் தள்ளிவிட்டார்களே! அவரது அரசியல் எதிர்காலம் அஸ்தமனமாகுமா?

எம்.எம். ஜவாத், மருதமுனை.

எதிர்நீச்சல் போட்டு பதவிக்கு வந்தவர் அவர். எதிர்காலத்தில் அவர் எழுவதும் வீழ்வதும் கலைஞரின் பலம், பலவீனத்தைச் சார்ந்தது. அரசியலில் எதுவும் நடக்கலாம்.

○●○

★ தமிழ்ப்படங்களில் சேலைகட்டிய நாயகிகளின் ஆதிக்கம் ஏற்பட்டுவருகிறது போலிருக்கிறதே?

பி. பரமநாதன், சிலாபம்.

'சேலைகட்டும் பெண்ணுக்கொரு வாசமுண்டு' என்று வைரமுத்து எழுதியதை இரசிகர்கள் அங்கீகரிக்கத் தொடங்கிவிட்டார்களோ?!

○●○

★ நமது அரசியல்வாதிகள் சொர்க்கத்துக்குச் செல்வார்களா? நரகத்துக்குச் செல்வார்களா?

வி. ரவிக்குமார், புத்தளம்.

நேராகச் சொர்க்கத்திற்குத்தான்! அதிர்ச்சியாக இருந்தால் இந்தக் கதையைப் படியுங்கள்:

ஒருத்தன் மகா அயோக்கியன். திருட்டு, கொலை, கொள்ளை என்று அவன் செய்யாத கெட்ட காரியமே பாக்கி கிடையாது.

ஒரு நாள் திடீரென்று அவன் இறந்து போனான். தேவதைகள் அவனைத்தூக்கிக் கொண்டு போனார்கள். தேவதைகளிடம் அவன் கேட்டான்:

"என்னை நரகத்துக்குத்தானே கொண்டு செல்கிறீர்கள்?"

"இல்லை. உன்னை சொர்க்கத்துக்கு அழைத்துப்போகிறோம்," என்றார்கள் தேவதைகள்.

"நான்தான் தப்பித்தவறிக்கூட ஒரு நல்லகாரியமும் செய்யவில்லையே, என்னை எப்படி சொர்க்கத்துக்குக் கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்டான்.

அதற்கு தேவதைகள் சொன்னார்கள்:

"நீ இதுவரை இருந்தது நரகத்தில்தான். எங்களுடைய பழைய நரகத்துக்கு இப்போது மரியாதையே கிடையாது. அதைவிடப் பயங்கரமான நரகத்தை நீங்கள் பூமியில் உண்டாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் இங்கிருந்து நீங்கள் எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு வெளியேறியபின்னர் நேராகச் சொர்க்கம் தான்."

○●○

★ டியர் சிந்தியா! தொழிற்சங்கங்களை நம்பியிருக்கும் தோட்டத் தொழிலாளர்களின் நிலை எதிர்காலத்தில் எப்படி இருக்கும்?

எஸ். சண்முகவேல், போகாவத்தை.

ஏறுமுகமாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. தூக்கம் கலைந்தால்தான் முகம் பிரகாசமாகும்.

○●○

★ இம்ரான்கான் கிரிக்கெட்டைப்போல அரசியலிலும் பிரகாசிப்பாரா?

எம். நிஸா முஸம்மில், தியத்தலாவை.

பெனாசிரின் கட்சி ரெண்டாகி நிற்கிறது. இம்ரான்கானுக்கு கொண்டாட்டம்தான்.

○●○

★ சமீபத்திய திரைப்படங்களில் முன்னணியில் இருக்கும் படம் எது சிந்தியா?

கே. கலைவாணி, கொழும்பு-05.

தீபாவளிக்குப் பின்னர் வெளியான படங்களில் வசூலில் முன்வரிசையில் நிற்பது 'கோபாலா கோபாலா.'

○●○

★ பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியை நடத்திவரும் நம்நாட்டு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எஸ். முரளி, வவுனியா.

தமிழை அறுக்காத அறிவிப்பாளர். வாயில் வாளோடு தோன்றாமல் வளமோடு தோன்றியவர். எல்லாப் பாடல்களையும் நினைவில் வைத்திருக்கும் அவர் ஞாபக சக்தியை தான்சார்ந்த துறையில் அவரது முழு ஈடுபாட்டைக் காட்டுகிறது. வியப்பாகவும் இருக்கிறது.

★ எம்.ரி.வியில் ஒளிபரப்பாகும் சன் ரி.வி.யில் உங்களுக்குப் பிடித்த அம்சம் என்ன?

எஸ்.என். குமார், கண்டி.

சமைக்கும் பகல் நேரத்தில் பிடித்திழுத்து உட்காரவைத்து படம் காட்டுகிறார்கள். பின்னர் அயர்ந்து தூங்கப்போகும் 11 1/2 மணிக்கு பிடித்திழுத்து படம் காட்டுகிறார்கள். பிடிப்பது எரிச்சலும், தூக்கமும்தான்.

○●○

★ அன்பின் சிந்தியா! சுடச் சுட தேநீர் குடிக்கும்போது நாவில் சுட்டதும் என்ன நினைப்பீர்கள்?

ப. திலகமலர், பண்/ பூனாகலையூர்.

நாவில் சுட்டது ஆறிவிடும். நாவால் சுட்டது ஆறாது என்று.

○●○

★ தென்னாபிரிக்காவில் இந்திய அணி படுதோல்வி கண்டிருக்கிறதே?

என். முகுந்தன், கொழும்பு-13.

இந்தியாவில் கொடுத்ததை தென்னாபிரிக்காவில் போய்வாங்கியிருக்கிறார்கள். கொடுக்கல், வாங்கலில் நியாயமாக நடந்து கொள்ள நினைப்பது தப்பா என்ன?

○●○



★ ஒரு மனிதனை மற்றொரு மனிதன் விமர்சிப்பது எப்போது?

சுபாஷினி கமலப்பா, மட்டக்களப்பு.

தற்காலநிலவரப்படி சொல்வதானால், தன்னால் முடியாத காரியத்தை மற்றொருவன் சாதிக்கும்போது.

○●○

★ எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியின் பலம் தற்போது எப்படி இருக்கிறது?

வே. பன்னீர் செல்வம், பலாங்கொடை.

பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும் அளவுக்கு.

○●○

★ புதிய ஆண்டிலாவது தமிழ்ப்பட பாடல்கள் புரியும் அர்த்தத்தில் இடம்பெறுமா?

செல்வி விநோதினி தம்பிராசா, திருமலை.

இந்த ஆண்டு திரைக்கு வரப்போகும் 'காத்திருந்த காதல்' படத்தில் ஒரு பாடல்:

"ஜரின் ஸ்கெலிவா போலிந்த ஃபிகரு
காஷ்மீர் ஆப்பிள் போலிவ கலரு
தேடிவந்த இவ ஜோடியா
பார்த்துச் சொல்லு இவ வேறயா?"

○●○

---

ஸ்போர்ட்ஸ்

## கபில் தேவ்-சாதனைப்பட்டியல்

## இளம் வயதில் சதம் அடித்த வீரர்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்பாடுகளைப் பற்றியும், அணியில் வீரர்கள் தேர்வு செய்யப்படும் விதத்தினைப் பற்றியும் முன்னாள் இந்திய



கிரிக்கெட் கப்டன் கபில்தேவ் அதிருப்தி தெரிவித்திருந்தார். அவரென்ன கிரிக்கெட்டில் அப்படி பெரிதாகச் சாதித்து விட்டார்? வீரர்கள் தேர்வு பற்றிக்கருத்துச் சொல்ல கபில்தேவுக்கு தகுதி உண்டா? பாருங்கள்.

* 1986-87ல் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 74 பந்துகளில் சதம் அடித்தார். இது ஓர் இந்திய சாதனை.
* டெண்டுல்கர் வருவதற்கு முன்பு கபில்தேவ்தான் சதம் அடித்த இளம் வயது இந்தியவீரர் என்ற சாதனையாளராக இருந்தார். 1979ல் மேற்கிந்தியத்தீவிற்கு எதிராக இவர் எடுத்தது 126 ஓட்டங்கள்.
* அதிக டெஸ்ட்களில் விளையாடியுள்ள இந்திய வீரர் கபில்தேவ்தான். 131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.
* பாகிஸ்தானுக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் 30 பந்துகளில் 50 ரன்களை எடுத்து வேகமான அரைச்சதத்தை எடுத்த வீரர் என்ற சாதனை செய்தார்.
* 1990ல் இங்கிலாந்துக்கெதிராக லோர்ட்ஸ் மைதானத்தில் ஒரே ஓவரில் நான்கு சிக்ஸர்களை அடித்துச் சாதனை புரிந்தார்.
* 131 டெஸ்ட் போட்டிகளில் மொத்தம் 27,740 பந்துகள் வீசி 12,867 ரன்கள் கொடுத்து 434 விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை புரிந்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் அதிக பந்துகளை வீசியவரும் கபில்தேவ்தான்.
* 100 விக்கெட்டுக்களை வீழ்த்தி 1000 ரன்களையும் எடுத்த முதல் இளவயது வீரர் கபில்தேவ். பாகிஸ்தானுக்கு எதிராக கல்கத்தாவில் கபில்தேவ் நிகழ்த்திய இந்தச் சாதனையின்போது அவருக்கு வயது 21 வருடங்களும் 25 நாட்களும்.
* 200 விக்கெட்டுக்களை இளம் வயதிலே வீழ்த்தியவரும் கபில்தேவ்தான். தனது 24வது வயதில் மேற்கிந்தியத் தீவுக்கெதிராக இந்தச் சாதனையைச் செய்தார்.
* 5000 ரன்களும் (5248), 400 விக்கெட்டுக்களும் (434) எடுத்த உலகின் ஒரே சகலதுறை ஆட்டக்காரர் கபில்தேவ்தான்.
* மேற்கிந்தியத் தீவுக்கெதிராக 1983-84ல் ஒரு இன்னிங்சில் 83 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

டெஸ்ட் போட்டிகளில் மட்டுமன்றி ஒரு நாள் போட்டிகளிலும் கபில்தேவ் பல சாதனைகளைப் புரிந்துள்ளார்.

* 3000 ரன்களும் 250 விக்கெட்டுக்களும் எடுத்த ஒரே சகலதுறை ஆட்டக்காரர் கபில்தேவ்தான்.
* 1983ல் நடந்த உலகக்கோப்பை கிரிக்கெட்டில் அவுட்டாகாமல் கபில்தேவ் 175 ரன்களைக் குவித்தார். இது ஒரு இந்திய சாதனை.
* முன்னர் அதிக ஒரு நாள் போட்டிகளில் விளையாடிய (224 போட்டிகள்) இந்திய வீரர் என்ற சாதனையாளராக இருந்தார். கடந்த வருட டைட்டான் போட்டிகளின் போது அசாருதீனால் இச்சாதனை முறியடிக்கப்பட்டது.

இவைதவிர மேலும் பல சாதனைகளைச் செய்திருக்கும் கபில் தேவ் இன்று வெறுப்பது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை.

## மூன்று நாளில் முடிந்த ஆட்டம்

தென் ஆபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய அணி டேர்பனில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் 328 ரன்களால் படுதோல்வியடைந்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்கா முதல் இன்னிங்சில் 235 ஓட்டங்களை எடுத்தது. (அன்ரு ஹட்சன்-80, மக்மில்லன்-34, பிரசாத்-5/60)

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா முதல் இன்னிங்சில் 100 ஓட்டங்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்தது. (கங்குலி-16, டெண்டுல்கர்-15, அலன் டொனால்ட்-5/40)

இரண்டாவது இன்னிங்சில் தென்னாபிரிக்கா 259 ரன்கள் எடுத்தது. (அன்ரு ஹட்சன்-52, அடம் பாக்கர்-55, மக்மில்லன்-51, பிரசாத் 5/93)

395 ரன்கள் அடித்தால் மட்டுமே வெற்றி பெறமுடியும் என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்சைத் தொடங்கிய இந்தியா 66 ரன்களுக்குள் சகல விக்கட்டுக்களையும் இழந்து, 328 ரன்களால் தோல்வியடைந்தது.

இரண்டாவது இன்னிங்சில் ராகுல் ட்ராவிட் மட்டும் இரட்டை இலக்க ஓட்டங்களை எட்டினார். இவர் 27 ரன்கள் எடுத்தார். தென்னாபிரிக்க பந்துவீச்சாளர் அலன் டொனால்ட் 14 ரன்களுக்கு 4 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

5 நாள் ஆட்டம் 3 நாட்களில் முடிவடைந்தது.


படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 64

# உருமாறிவந்த இராவணேசன்



இராஜகுமாரன்

இராமபிரான் அனுமனை தென்திசை நோக்கிச் செல்லுமாறு பணித்தது வீண்போக வில்லை. அனுமன் தனது பயணத்தை மேற் கொள்வதற்கு முன்னதாக இராமபிரான் அவரைத் தனிமையில் அழைத்து சீதாப் பிராட்டியாரின் அங்க இலட்சணங்களை யிட்டு விபரமாகக் கூறியிருந்தாரல்லவா? அசோக வனத்தில் சீதாப்பிராட்டியாரின் திருவுருவத்தை- வெகு தொலைவிலிருந்த வண்ணம் பார்த்தவுடனே, அவரே சீதாப் பிராட்டியார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். தன் இருகைகளையும் கூப்பி, மரத்திலிருந்த வண்ணமே பிராட்டியாரைப் பார்த்து வணங்கினார்.

எவ்வித ஐயமுமின்றி, அவரே இராம பிரானின் துணைவியார் என்ற துணிபு ஏற்பட்டதும், பாற்கடல் பொங்கி அமுதினைச் சுரந்து தன்னிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டது போன்ற பேருவகை பொங்க ஆஞ்சநேயர் மெய்மறந்து காணப் பட்டார். இராமபிரான் தன்மீது வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை. "சீதையைக் கண்டு வருவேன்!" என்று அண்ணலுக்குக் கொடுத்த வாக்கினைக் காப்பாற்றிவிட்டமையினால் தான் தன் உயிரை மாய்க்க வேண்டிய அவசியமே இல்லை என்று எண்ணினார்.

சீதாப்பிராட்டியாரைக் கண்டதும் அனுமனுக்கு ஏற்பட்ட ஆனந்தக் களிப்பை கவிச்சக்கரவர்த்தி வர்ணிக்கத் தேர்ந்தெடுத்த வார்த்தைகளின் அழகைப் பார்ப்போம்:

**வீடினது அன்று அறன் யானும் வீகலேன்**
**தேடினேன் கண்டனென் தேவியே எனா**
**ஆடினன் பாடினன் ஆண்டும் ஈண்டும் பாய்ந்து**
**ஓடினன் உலாவினன் உவகைத் தேன் உண்டான்.**
(சுந்தரகாண்டம்-393)

**பொருள்:**

*'நான் தேடியவரைக் கண்டு கொண்டேன். இவர் சீதாப்பிராட்டியாரேதான்! அறம் இன்னும் அழிந்துவிடவில்லை. நானும் மடியவேண்டிய அவசியமுமில்லை,' என்ற முடிவுடன் மிக்க மகிழ்ச்சியினால்-மது உண்டு வெறிகொண்டவரைப் போல ஆடுவதும் பாடுவதுமாக- தானிருந்த மரத்திலேயே துள்ளிக் குதித்து அங்கும் இங்கும் பாய்ந்தார்.*

## அரக்கியரின் ஆயத்தங்கள்

அரண்மனைத் தூதன் வந்து, காவலர்களான அரக்கியரைத் திட்டித்தீர்த்து விட்டுப் போனதும், அந்த அரக்கியர் கூட்டம் சீதாப் பிராட்டியாரைச் சுற்றி வளைத்துக் கொண்டது. வேறு சில காவலர்கள் ஓடோடி வந்து அந்தப் பகுதியைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்தனர். வேறு சிலர் தங்கள் ஆடைகளைத் திருத்திக் கொண்டனர். காவல் காப்பதற்காகக் கைகளில் வைத்திருந்த வாள்களை ஆங்காங்கே விட்டு வைத்திருந்தனர். அவற்றையெல்லாம் ஓடிச் சென்று எடுத்து வந்து துடைத்துத் தயார் நிலையில் நின்றனர்.

இத்தகைய பரபரப்புக்களைக் கண்ட சீதாப்பிராட்டியார் மனம் வருந்த ஆரம்பித்து விட்டார். இராவணன் வரப்போகிறான்; தன்னை ஏற்றுக்கொள்ளும்படி கெஞ்சப் போகிறான்; அவனுடைய ஆசை வார்த்தைகள் ஒவ்வொன்றும் தன் காதுகளுக்குள் கொடிய விஷமாக மாறிக் குத்திக் குடையப் போகின்றனவே! இன்னும் எத்தனை நாளைக்கு இத்தகைய கொடுமைகளைச் சகித்திருக்க வேண்டுமோ தெரியவில்லையே! என்று வேதனையில் கண்களை மூடிய வண்ணம் இராமபிரானைத் தியானிக் கலானார். அவர் கண்களை மட்டும் மூடி விடவில்லை; தன் காதுகளின் கதவுகளையும் உட்புறமாக மூடிக்கொண்டார். இதனால் அரக்கியர்கள் இராவணன்பற்றிக் கூறத் தலைப்பட்ட வார்த்தைகள் எதுவும் சீதையின் காதுகளுக்குள் புக முடியவில்லை.

மரத்தின் மீது அமர்ந்திருந்த ஆஞ்சநேயருக்கும் நிலைமை புரிந்துவிட்டது. சீதாப் பிராட்டியாரிடம் இராவணன் வரப்போகிறான் என்பதனை உணர்ந்து கொண்டார். 'இராமச்சந்திரப் பிரபுவின் துணைவியாரை வஞ்சகமாகக்கவர்ந்து வந்த பாவி வரப் போகிறான். அவனை அவனுடைய படுக்கையிலேயே வைத்து நசுக்கிக் கொன்று விட்டாலென்ன என்ற எண்ணம் கடந்த இரவே எனக்குத் தோன்றியது. தூங்கிக் கொண்டிருப்பவனை- நிராயுதபாணியைக் கொல்வது அறமாகாது என்று எண்ணியமையினால் விட்டு விட்டேன். இதோ அவன் என் கண்ணெதிரே வரப்போகிறான். இப்பொழுதாவது அவன் மீது பாய்ந்து கொன்று விட்டால் என்ன?' என்று ஆஞ்சநேயர் சிந்திக்கலானார்.

உடனடியாக அவருடைய மனோ நிலையில் மாற்றம் கண்டது. 'சீதாப்பிராட்டியார் எங்கிருக்கிறார் என்பதனை அறிந்து, அவரைக் காண நேர்ந்தால், அவரைச்சிறைப் பிடித்த அரக்கர்கோனை அழித்து சிறை மீட்கும் காலம் வெகு தூரத்திலில்லை; அதுவரை பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.' என்று கூறிவிட்டு வரும்படித்தான் இராமபிரான் கட்டளையிட்டார். அதனை மீறுவது கூடாது என்பதனை உணர்ந்தார். தன் மனதுக்கு பொறுமையுடன் இருக்கும் படி தானே ஆணையிட்டார். அரக்கர்கோன் மட்டுமல்லாமல் அவன் வம்சமே அழிந்தொழிய வேண்டியது; அதற்காகவே இராம பிரான் அவதாரமெடுத்தவர். அவ்வவதார மூர்த்தியை மீறி தான் எதையும் செய்ய முடியாது என்ற முடிவுக்கு வந்தார் ஆஞ்சநேயர். இராம மந்திரத்தையே தியானித்த வண்ணம் தன் எண்ணங்களை அவர் கட்டுப்படுத்திக் கொண்டார்.

## இராவணன் வருகை

ஓர் அரசன் தனது மாளிகையிலிருந்து பிறிதோரிடத்துக்குச் செல்வதானால் அதற்கென சிறப்புமிக்க பவனியே நடைபெறும். படைபட்டாளங்கள், பிரதானிகள், அமைச்சர்கள் மற்றும் பரிவாரங்கள் வரிசையாகச் செல்வார்கள். அரசர் பவனி வருகிறார் என்று, முன்னால் கட்டியகாரன் அறிவித்துக் கொண்டு செல்வான். அதனைத் தொடர்ந்தே பல அணிகளில் பலதரப்பட்டவர்களும் செல்வார்கள். பேரிகைகள் முழங்கும்; குழல்களும் சங்குகளும் ஓசை எழுப்பும். பாணர்கள் இன்னிசை மீட்டி பாடல்களைப்பாடுவர். ஆடற்கலையில் சிறந்த அரம்பை நிகர் மங்கையர் நடனமிடுவர். கொடி, குடை, ஆலவட்டங்கள் இருமருங்கும் பிடித்த வண்ணம் பலர் செல்வர்.

அன்றைய அதிகாலைப் பொழுதில் மேற்கூறப்பட்ட வரிசைகளுடன் தன்னுடைய மாளிகையிலிருந்து இலங்கேஸ்வரன்- இராவணேசன் புறப்பட்டான். அசோக வனத்துள் பிரவேசித்ததும் சற்றுத் தயங்கினான். அமைச்சர்கள், பரிவாரங்கள், படை-பட்டாளங்களனைத்தையும் சைகை காட்டி அவ்விடத்திலேயே நிறுத்தி விட்டு சோலைக்குள் நுழைந்தான். தன் மெய்காப்பாளர்கள் இருவரையும் குடை பிடிப்போனையும் மட்டும் தன்னுடன் வருமாறு பணித்தான். வெஞ்சாமரை வீசும் மங்கையொருத்தியும் தன்னுடன் வரலாம் என்று பணித்தான்.

இராவணன் மகாவல்லமை பொருந்தியவன்; மாவீரன்; மந்திர தந்திரங்களைக் கற்றறிந்தவன்; மாயா ஜாலங்களையும் தெரிந்தவன், மூவுலகிலும் எதனையும் வெற்றிகரமாகச் சாதிக்கும் ஆற்றல் படைத்தவன். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிக்கும் திறமை மிக்கவன். சீதாப் பிராட்டியாரை அவன் அடையவிரும்பிய போதும், தட்டிக் கனிய வைக்காமல் தானாகக் கனிய வைக்கவே விரும்பினான். ஆகவே தன்னுடைய நடவடிக்கைகளில் சற்று நிதானமுடன் நடந்து கொள்ளவே நாட்டம் கொண்டான்.

சீதையைக் கவர்ந்து வரச் சென்ற போது முற்றும் துறந்த முனிவனைப் போல் சென்றான். இலக்குமணன் பர்ணசாலையைச் சுற்றி வரைந்த கோட்டுக்குள்ளிருந்து வெளியே வர மறுத்த சீதையைச் சிறை மீட்கவேண்டிய வேளையில் தனது சுய உருவத்தை- பத்துத்தலைகளையும் இருபது கரங்களையும் கொண்ட உருவத்தை எடுக்க வேண்டியதாயிற்று. ஏற்கனவே சீதையிடம் வந்து பலதடவைகள் காதல் பிச்சை கேட்டு இரந்திருக்கிறான். அப்போதெல்லாம் தனது சுய உருவத்தில் தான் வந்திருக்கிறான். ஆனால் இன்று சீதையின் முன் புதிய தோற்றத்தில் செல்லவே திட்டமிட்டான்.

## உருவத்தில் ஒரு மாற்றம்

மாயாவி அல்லவா? தனது பத்துத்தலைகளுக்குப் பதிலாக சாதாரண ஒருதலை மனிதன் போன்ற உருவினை எடுத்தான். தனக்குப் பத்துத்தலைகள் இருப்பதனால் தான் சீதை தன்னை விரும்பாதிருக்கிறாளோ என்ற ஐயம் அவனிடம் அன்று தோன்றியது.

'என்னை ஒருமுறையாவது அடைய வேண்டும் என்று எத்தனையோ மங்கையர் தவமிருக்கின்றனர். ஆனால் இப்பெண்ணோ ஏறெடுத்தும் பார்க்கிறாளில்லை. இன்று அவள் முன்னே ஒருதலையுடன்- சாதாரண மனித உருவில் சென்று பார்ப்போமே,' என்று இராவணன் நினைத்தான். அதற்கேற்றாற்போல் அழகான வீரத்திரு உருவில் தன் உடலமைப்பை மாற்றிக்கொண்டு சீதாப் பிராட்டியார் இருந்த இடம் நோக்கிச் சென்றான்.

ஏற்கனவே அங்கு வந்து அரக்கியரை எச்சரித்துவிட்டுப்போன அரண்மனைச் சேவகன் சீதை இருந்த இடத்துக்கு வந்தான். இலங்கேஸ்வரன் இராவணன் வந்து கொண்டிருப்பதாகக் கட்டியங் கூறினான். சுற்றி வளைத்து நின்ற அரக்கியர் அனைவரும் வழிவிட்டு அகன்றனர். திரிசடை சீதையின் அருகே சென்று அவர் காதுகளில் மட்டும் ஏறக்கூடியதாக சில வார்த்தைகளைக் கூறிவிட்டு ஒதுங்கினாள். அவளை, தன்னை தனியாக விட்டுவிட்டுச் சென்று விடவேண்டாம் என்று சீதாப்பிராட்டியார் கேட்டுக் கொண்டார். இதற்கிடையில் இராவணன் அடிமேல் அடி வைத்து சீதையின் அருகில் வந்து நின்றான்.

சீதையைத் தன்பால் அன்பு கொள்ள, பக்குவமாகத் தூண்டும்படி இராவணனால் ஏவப்பட்டவள்தான் திரிசடை. இதனால் திரிசடை அங்கு நிற்பதை இராவணன் ஆட்சேபிக்கப்போவதில்லை என்பதை சீதாப் பிராட்டியாரும் நன்கு அறிவார்.

இராவணன் தன்னை நாடி வருவதை தொலைவிலிருந்தே அறிந்துகொண்ட சீதை தலையைக் குனிந்து கொண்டார். இராவணனின் எந்தவொரு அங்கத்தையும் அவர் பார்க்கவிரும்பவில்லை.

இக்காட்சியை ஆஞ்சநேயர் எட்டத்திலிருந்த மரக்கிளையில் இருந்த வண்ணம் பார்த்துக் கோபக்கனலால் வெந்த வண்ணம் இருந்தார்.

**(தொடர்ந்து வரும்)**

---

**இராமாயணப் போட்டி:62**

சரியானவிடையும் பரிசு பெற்றவர்களின் விபரமும் அடுத்தவாரம் இடம்பெறும்.

**போட்டி இல. 64** கேள்வி:- **இராவணனைக் கண்டதும் ஆஞ்சனேயர் என்ன செய்ய நினைத்தார்?**

ஜனவரி. 11 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி– இல.64, தினமுரசு வாரமலர், த.பெ.இல– 1772, கொழும்பு.**

---

*நட்சத்திரக் கிரிக்கெட் போட்டிக்கு பயிற்சி கொடுக்கிறார் கவுண்டமணி. அவருக்கு உதவியாளர் செந்தில்.*

# நட்சத்திரங்களுக்கு கிரிக்கெட் ரெயினிங்

**காதிலை பூ கந்தசாமி**

**கவுண்டமணி:** ஏன்டா யாரையும் காணேல்லேயடா. என்னடா பண்ணு றாங்க?

**செந்தில்:** அதை நான் எப்படியண்ணே சொல்லுவேன். *(பாடுகிறார்)*

**பந்திருக்கும், பேட் இருக்கும் ஆளிருக்காது**
**பழக வர யாருக்கும் மனமிருக்காது.**

**கவுண்டமணி:** பாடதேடா பரதேசி நாயே! நக்மா எங்கேடா.

**செந்தில்:** *(பாடுகிறார்)*

**ஒரு பக்கம் பாக்குறா**
**ஒரு கண்ணெ சாய்க்குறா- அவ**
**உதட்டைக் கடிச்சுக்கிட்டு-மெதுவா**
**முறைக்கிறா முறைக்கிறா முறைக்கிறா!**

**கவு:** உதட்டைக் கடிச்சிக்கிட்டு சிரிப்பாங்க எண்ணு தான் கேள்விப்பட்டிருக்கேன். அவ ஏண்டா முறைக்கிறா?

**செ:** பந்தோட வந்தாங்கண்ணே. வாங்க 'பேட்டிங்' சொல்லித்தாறேன் எண்ணு சொன்னேன். சரத்குமார் வந்து பேட் பண்ணினாத்தான் வருவேன் எண்ணு சொல்லிட்டு முறைக்கிறா அண்ணே.

**கவு:** ஏன்டா நாம சொல்லிக்கொடுத்தா புரியாதாமா?

**செ:** யாரு யாரு, எதை எதை, எப்படி எப்படி சொல்லிக் கொடுக்கணும் எண்ணு ஒரு முறை இருக்கண்ணே!

**கவு:** எப்படிங்க? முறை இருக்குதுங்களா? இப்ப பாருங்க. இதுக்கும் ஒரு முறை இருக்குதுங்க. *(உதைக்கிறார்)*

**செ:** ஏன் அண்ணே உதைக்கிறீங்க?

**கவு:** உன்னை எத்தனை பேரு உதைக்கிறாங்க. நான் உதைத்தா மட்டும்தானே ஜனங்க சிரிக்கிறாங்க. நான்தான் உன்னை உதைக்கணும். அதுதான்டா முறை. இப்ப புரியுதா?

**செ:** சுத்தமா புரியுதண்ணே! அஜித்குமாரும் ஹீராவும் ரெடியா இருக்காங்க கூட்டி வரட்டுமா?

**கவு:** ஏன், ஹீரா தனியா வரமாட்டாங்களாமா?

**செ:** அண்ணே! நகத்தை விட்டு சதை பிரியுமாண்ணே? சட்டியைவிட்டு கரி பிரியுமாண்ணே? ரொட்டியைவிட்டு ருசி பிரியுமாண்ணே?

**கவு:** புல்லரிக்குதடா- உன் உடம்பைவிட்டு உயிர் பிரியுறதுக்குள்ளே ஓடிப்போய் கூட்டிவாடா!

*(இருவரும் வருகிறார்கள்)*

**செ:** *(ஹீராவைப் பார்த்து பாடுகிறார்)*

**குமரிப் பெண்ணின் உள்ளத்திலே**
**குடியிருக்க நான் வரவேண்டும்**
**குடியிருக்க நான் வருவதென்றால்**
**வாடகை என்ன தரவேண்டும்?**

**கவு:** அதுக்கு முன்னாடி அட்வான்ஸ் கொடுக்கணு மடா ஆட்டுக்கிடாய் வாயா! நீ வா சகோதரி! பந்தை நீ போடுகிறாயா, அல்லது அஜித் போடட்டுமா?

**ஹீரா:** நானே போடுகிறேன். எனக்கும் பந்து போட்டுத்தான் பழக்கம்.

*(அஜித் பேட் பண்ணு கிறார்.)*

**ஹீரா:** பந்தை வீசியபடி பாடுகிறார்.

**நான் போடுவது பந்தும் அல்ல**
**என் உள்ளம்- இதில்**
**இருப்பதெல்லாம் வேகமல்ல**
**என் எண்ணம்!**

**அஜித்:** *(பேட்டை பிடித்தபடி பாடுகிறார்!)*

**பந்தாக நீயிருந்தென்ன**
**பேட்டாக நான் வரவேண்டும்**
**விக்கெட்டாக நான் இருந்தென்ன**
**வீசும் பந்தாய் நீ வரவேண்டும், வரவேண்டும்!**

**கவு:** போச்சுடா! இங்கே என்ன லவ் சீனா எடுக்கிறாங்க? பந்தைக் கண்டாலே பாடத் தொடங்கிவிடுவீங்களே!

**செ:** அண்ணே! ரஜினி வாறாரு!

**ரஜினி:** *(வேகமாக நடந்து வருகிறார்)* நான் வந்துட்டேன். சரியான நேரத்தில வந்துட்டேன்.

**கவு:** நீங்க வரணு ம், வரணு ம் எண்ணு தானே எல்லோரும் எதிர்பார்த்துக்கிட்டு இருக்காங்க. வாங்கண்ணே. வாங்க.

**ரஜினி:** பந்து விளையாடலாம், தப்பே இல்லை. அடுத்தவங்களை பந்தாடக்கூடாது. அதுதான் தப்பு. பந்தை வீசலாம், தப்பே இல்லை. பந்தாவை அடுத்தவங்கமேலே வீசக்கூடாது. அதுதான் தப்பு!

**செந்:** தப்பை தப்பெண்ணு தப்பாய் தெரிஞ்சும், தப்புத்தப்பா தப்பு செய்யிறவங்களை தப்ப விட்டா தப்பாப் போயிடுமென்னு தப்பாமச் சொல்லி தப்பை செய்தவங்களை தப்பவிடாம தண்டிக்கிற தப்பேயில்லாத தப்பைக் கண்டு பிடிக்கிற தலைவரு நீங்கதான் அண்ணே.

**கவு:** *(முடியைப் பியத்துக் கொள்கிறார்)* ஏன்டா பரதேசி நாயே! நீயெல்லாம் தத்துவம் பேசினா நாடு தாங்குமாடா? ஜனங்க ஏற்கெனவே நொந்து போயிருக்கிறாங்க. நீ வேற நோகவைக்கணு மா? அண்ணே, ரஜினி அண்ணே, நீங்க ஒரே ஒரு தடவை பந்தை வீசினாப் போதுமன்னே!

**ரஜினி:** எனக்கு மட்டும் புது ரூல்ஸ் வேணாம். பொதுவா உள்ள ரூல்ஸ்தான் எனக்கும்! தனி ரூல்ஸ் போட்டவங்க எங்கே இருக்காங்க தெரியுமில்லே!

**செ:** அதுக்கில்லையண்ணே! நீங்க ஒரு தடவை பந்து வீசினா அது நூறுதடவை பந்து வீசின மாதிரி!

**ரஜினி:** இல்லே இப்போது நான் பந்து வீசப் போறதில்லை.

**கவு:** பேட்டிங் பண்ணப்போறீங்களா?

*(நக்மா-ஹீரா இருவரும் துள்ளுகிறார்கள்)*

**நக்மா:** நான்தான் பந்து போடுவேன். ஸ்பின் போல் போடட்டுமா. ஸ்பின் இல்லாத போல் போடட்டுமா?

**ஹீரா:** பறக்கும்பந்து பறக்கும். அது பளபள வென்று ஜொலிக்கும்! நான்தான் போடுவேன்.

**ரஜினி:** என்னை விட்டிடுங்கம்மா! நான் என் பாதையிலே போய்க்கிட்டிருக்கேன். என்னை தொந்தரவு செய்தீங்கன்னா, உங்களுக்குத்தான் கஷ்டம்! நான் சொன்னதையும் செய்வேன். சொல்லாததையும் செய்வேன்.

**ஹீரா:** ரியலி! ஐ லைக் தட்! அதுதான் எனக்கும் பிடிக்கும்! இந்த அஜித்குமார் சொன்னதையும் செய்யிறதில்ல. சொல்லாததையும் செய்யிறதில்ல.

**கவு:** இங்கே பாருங்க, நீங்க என் உடன்பிறவா சகோதரி மாதிரி...அதனாலே....


**ஹீரா:** ஏங்க மிஸ்டர் கவுண்டமோனி....

**கவு:** மோனியில்லைங்க, மணி.

**ஹீரா:** ஏதோ ஒரு மணி, ஏங்க நான் வெளியே இருக்கிறது உங்களுக்கு பிடிக்கலையாங்க! *(கோபத்தோடு செல்கிறார் ஹீரா)*

**செ:** *(பாடுகிறார்)*

**பெண் போனால்-ஒரு**
**பெண் போனால்**
**அவள் பின்னாலே-என்**
**கண் போகும்!**



**கவு:** *(எட்டி உதைக்கிறார்)* உன் உயிரும் போகுமடா! அண்ணே ரஜினி அண்ணே. பேட்டிங் பண்ணு றீங்களா?

**ரஜினி:** வேணாம், இப்ப நான் விளையாட வரேல்லை. அவங்கவங்க எந்தெந்த அணியில இருக்கிங்களோ அந்தந்த அணியிலே இருந்து விளையாடுங்க!

**கவு:** நீங்க வரமாட்டீங்களா?

**ரஜினி:** வருவேன். எப்ப வரணு மோ, அப்போது வருவேன்!

**கவு:** எங்களை மறந்திடாதீங்க.

**ரஜினி:** நான் தப்பைச் செய்தவங்களை மன்னிக்கமாட்டேன். உப்புப் போட்டவங்களை மறக்கமாட்டேன்.

**செ:** *(பாடுகிறார்)*

**வந்தேண்டா பேட்டிங்காரன்**
**நான் பிளந்து கட்டி ஆடப்போறேன்.**
**பந்தை அடிச்சா ;போர் போகும்**
**ஓங்கி அடிச்சா சிக்ஸராகும்**
**உன்னை அடிச்சா வீணாகும்-இது**
**கிரிக்கெட் கோட்சர் சொன்னதுங்க**

**கவு:** இந்த கோணங்கிவாயன் லொள்ளு தாங்க முடியல்லைப்பா! ஏங்க ரஜினி, நீங்க எப்ப தாங்க வருவீங்க?

**ரஜினி:** வரணு ம் எண்ணு இருந்தா வந்துதான் ஆகணு ம். எது நடக்கணு மோ அது நடக்கும். எது நடக்கக் கூடாதோ அது நடக்காது. *(சொல்லிவிட்டு வேகமாகச் செல்கிறார்)*

**கவு:** *(முடியைப் பியத்துக்கொண்டே)* இப்போ கோட்சிங் கிடையாது. எல்லோரும் போங்கப்பா!

**செ:** ஏன் அண்ணே நிறுத்திட்டீங்க?

**கவு:** நடக்கக்கூடாதுண்ணு எழுதியிருக்கே. அதனாலே நடக்காது!

**செ:** எங்கேயண்ணே எழுதியிருக்கு?

**கவு:** *(கையைச் சொடுக்கி, விரலை சட்டென்று காற்றில் வீசி மேலே காட்டுகிறார்.)*

**செ:** அண்ணே! நீங்க மாறீட்டீங்க. இப்போ நீங்க மகான் அண்ணே! மகான்!

**கவு:** நான் மகான் அல்ல. அன்புக்கு நான் அடிமை! நடந்தா பாட்ஷா. சிரிச்சா முத்து. துணிந்தா வீரா. முயன்றா உழைப்பாளி. இப்போது நான் உதைப்பாளி போடா நாயே! *(எட்டி உதைக்கிறார்)* ■

Regd. as a News Paper at the G.P.O. (QD/24/NEWS/96)
www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# முரசணிந்து- முகம் மலர்ந்து





முரசின் முகப்புப் பக்கத்தால் உருவாக்கப்பட்ட ஆடைகளுடன் முகம் மலர்ந்து நிற்பவர்கள் நவின்குமார், சசிகுமார். நவின்குமாரின் பிறந்தநாளுக்கு பெற்றோர் புது உடை வாங்கியிருந்தார்கள். நவின் குமாரின் மாமா கவிதாஸன் 'முரசுப் பிரியர்'. தன் மருமக்கள் இருவருக்கும் முரசின் முகப்பு பக்கங்களால் வித்தியாசமான ஆடை தைத்து அசத்திவிட்டார். அதைத்தான் போடுவோம் என்று அடம்பிடித்து அணிந்துகொண்டு நவின்குமாரும் சசிகுமாரும் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். 'முரசு' குடும்பத்தில் ஒரு உறுப்பினராக மட்டுமல்ல, இன்ப துன்பத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினராகவும் மாறிவிட்டது. வாசகர்களின் அன்பு நெகிழவைக்கிறது.

முரசால் ஆடை தெய்த கவிதாஸன் ஒரு தையற்கலைஞர். துணியில் ஆடை தயாரிப்பதைவிட இது கடினமான ஆனால் வித்தியாசமான முயற்சி. பொறுமையாக முயன்று தத்ரூபமாகச் செய்திருக்கும் அவரது முயற்சிக்கு வாசகர்கள் சார்பில் பாராட்டுகள்! மத்தியில் இருப்பவர்தான் கவிதாஸன். நவின்குமாரும், சசிகுமாரும் மத்துகமவைச் சேர்ந்தவர்கள். முரசு வாசகர்களான தயாளன்-இந்திராகாந்தி தம்பதிகளின் புதல்வர்கள். புகைப்பட ஆல்பத்தில் இப் படங்களை கண்டுவிட்டு நமக்கு அனுப்பிவைத்தவர் ஆர்.குபேந்திரன்.

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# மனித மீன்கள்

↓ மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத்தரத் தேவையில்லை. ஆனால் நீந்தக் கற்றுக்கொண்ட மனிதர்கள் சிலர் மீன்களைவிட சாகசமாக நீந்திக் காட்டுகிறார்கள். ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் நீச்சலில் புகுந்து விளையாடுகிறார்கள்.

படத்தில் இருப்பவர் மார்க் ஃபொஸ்ற்றெர். பிரித்தானிய நீச்சல் வீரர். நீச்சலில் பல வகை உண்டு. வண்ணத்திப் பூச்சி வகை நீச்சலிலும் சாதாரண நீச்சலிலும் இவர்தான் உலக சாம்பியன்.

50 மீட்டர் தூரத்தை சாதாரண வகை நீச்சல் மூலம் 22.43 செக்கன்களில் சென்றடைந்தார். அதே தூரத்தை வண்ணத்திப் பூச்சி வகை நீச்சல் மூலம் 23.45 செக்கன்களில் தாண்டினார். முதல் சாதனை 1992 மே 24ல். இரண்டாவது சாதனை: 1995 டிசம்பர் 15ல். தம்பி ஜாம்பவான்தான்!





# ஆபிரிக்க நட்சத்திரம்



←தென் ஆபிரிக்க அணியின் புதிய நட்சத்திரம் இவர்தான். லான்ஸ் குளூஸ்னர். சமீபத்தில் தென்னாபிரிக்க அணி இந்தியாவுக்கு விஜயம் செய்தபோதுதான் லான்ஸ் குளூஸ்னர் அறிமுகமானார்.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவுடன் மூன்று டெஸ்ட் போட்டிகளில் மோதியது. அதில் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மட்டுமே அபாரமாக வெற்றியீட்டியது. அந்த வெற்றியின் நாயகன் லான்ஸ் குளூஸ்னர்.

கல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இரண்டாவது இன்னிங்ஸில் லான்ஸ் குளூஸ்னரின் வேகப்பந்து வீச்சு வித்தை காட்டியது. 8 விக்கெட்டுக்களை இரண்டாவது இன்னிங்ஸில் கைப்பற்றினார்.

21.3 ஓவர்கள் பந்து வீசி 64 ரன்கள் கொடுத்தார். அதில் நாலு ஓவர்கள் மெய்டன். சுளையாக எட்டு விக்கெட். அபாரம்தானே!

தென் ஆபிரிக்க முன்னாள் கப்டன் கிளைவ் ரைஸ், மேற்கிந்திய தீவு அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மால்கம் மார்ஷல் ஆகியோர் தான் லான்ஸ் குளூஸ்னருக்கு பயிற்சி கொடுத்து தயார்படுத்தினார்கள்.

சகல துறை ஆட்டக்காரரான லான்ஸ் குளூஸ்னர் இந்தியாவின் 'ஏ'பபிரிவு அணியுடன் நடந்த போட்டியில் விளாசித் தள்ளி சதம் போட்டும் அசத்தியிருந்தார்.

தென்னாபிரிக்க அணியின் இந்த இளம் நட்சத்திரம் எதிர்காலத்தில் மேலும் பிரகாசிக்கும்.

# வர்ணஜாலம் வானிலே!



↑ வர்ணத்தை அள்ளி கோலம் போட்டது போல் தெரிகிறதல்லவா. யார் போட்ட கோலம் இது?

யாரும் போடவில்லை! இது கோலமல்ல. வானில் தோன்றிய வால் நட்சத்திரத்தின் ஜாலம்.

வால் வெள்ளிகளில் மிகப் பிரகாசமானது ஹாலீஸ் வால்வெள்ளி. வால்வெள்ளிகளில் முதன் முதலில் கண்டறியப்பட்டது ஹாலீஸ் வால்வெள்ளிதான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கண்டறியப்பட்டது. எட்மண்ட் ஹாலீஸ் என்னும் விஞ்ஞானி அதனைப்பற்றி ஆராய்சி செய்தார். அதனால ஹாலீஸ் வால்வெள்ளி என்று பெயர் வந்துவிட்டது.

படத்தில் காணப்படுவது 1986ல் ஹாலீஸ் வால்வெள்ளி தோன்றியபோது எடுக்கப்பட்ட படம். ஹாலீஸ் வால் வெள்ளி சூரியனைச் சுற்றிவர 76 வருடங்கள் எடுத்துக்கொள்கிறது. 75 வருடத்துக்கு ஒருமுறைதான் பூமியில் உள்ள நமது கண்களுக்குத் தென்படும்.

■ திருமணம்-பிறந்ததினம், பூப்புனித நீராட்டுவிழா, கல்லூரி ஒன்றுகூடல், வீட்டில் நடக்கும் சிறுவைபவங்கள் எதுவானாலும் சுவையான உணவுகளை குறித்த நேரத்தில் சிறப்புற சீருடையுடன் பரிமாறுகின்றோம். ● இடியப்ப புரியாணி, சிக்கன் புரியாணி, கொத்து றொட்டி, சிங்கப்பூர் நூடில்ஸ், சிக்கன் குருமா, தந்தூரி, றால்டெவில், கத்தரிச் சம்பல், வடைக்குழம்பு, கஜூகறி, அச்சாறு, அன்னாசி புடிங், Fruit Tray. Salard Tray இன்னும் பல....
■ இலங்கை உணவு மட்டுமல்ல இந்திய, சீன, கனேடிய உணவுகளையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ● உங்கள் வைபவத்தை நடத்த மண்டபம் தேவையா?
50 போர் முதல் 500 போர்வரை அமரக்கூடிய அழகிய மண்டபங்கள் குறைந்த வாடகையில். ■ பூப்புனித நீராட்டுவிழா- பூ/முத்து மணவறை,மண்டபம், ஆண்டாள் மாலை, தலை நகை, குத்துவிளக்குகள் ஆலாத்தி தட்டங்கள். கொத்து, சத்தகம், சைவ உணவு, பலகாரங்கள், கோலங்கள், லக்ஷ்மி விளக்கு. ● திருமண வைபவம்- முத்து/பூ மணவறை, மண்டபம், மாலைகள், சடைநாகம், தலைநகை, தலைப்பாகை, வாழைமரங்கள், குத்துவிளக்குகள் இந்து மதகுரு, சைவ உணவு, பலகாரங்கள், கேக், றிச் கேக், சீனிச்சம்பல், அச்சாறு (Malay Pickle) விருந்தினரை மகிழ்விக்க ஒருமுறை வாங்கி ருசித்துப் பாருங்கள். ■ பிறந்த தின விழா- சுவைமிகு உணவு, கேக், சிற்றுண்டிகள், மண்டபம் ● எல்லா வைபவங்களிற்கும் புதிய வடிவங்களில் பலூன் அலங்காரம்-பலூன்களில் தமிழில் அச்சிட்டுத் தரப்படும். ● இவற்றுடன் Video, Still Photography, DJ (Music), Bridal Dressing, Limousine Service, Entertainers (Dancers) என்பனவும் ஒழுங்கு செய்து தரப்படும்.

✱ BRIDAL BOUQUETS
மலர்ச் செண்டுகள்
மலர் மாலைகள்
மண்டப அலங்காரம்.
CHURCH DECORATION
Arch- Candles
LINEN
விரும்பிய நிறங்களில்
மேசை விரிப்புகள்



Super Lankaa
Complete Package for Weddings & Parties
Catering (multicultural Cuisine)- Cakes for All Occasions
Balloon Decorations-Flower Bouquets-Banquet Halls Rental
Limousine Services-Linen- Video - Still Photography - DJ.
21, Canadian Road, Unit 20, Scarborough, Ontario. M1R 4B4
(Warden/Ellesmere) TP: (416) 701-9330/(905) 475-1888



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பார் சாலையில் உள்ள சமவல அச்சகத்தில் ஜனவரி மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது
படிப்பகம்